ஜேர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்

'சொல்லும் நிமிடங்களை
சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro ஜேர்மனி

ஈழமுரசு
ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 04 - 10 Août 2004 25

சாம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M° La Chapelle/Gare du Nord)

புளொட் மோகனுடன் கொலையாளிக்குத் தொடர்பு !

"இவர் படையினருக்கு கிடைத்த சொத்து, இவரது இடத்தை நிரப்புவதென்பது இனி சாத்தியமில்லை"

- சிறீலங்கா இராணுவ, பொலிஸ் கவலை -

(02.08.2004)

புளொட் மோகனுடன் நீண்டகாலம் இணைந்து செயற்பட்ட ஒருவரே அவரது கொலையில் பிரதான பங்கு வகித்துள்ளதாக சிறீலங்கா காவற்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புளொட் மோகனுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கும் ஒருவரும் இந்த ஆட்டோவில் வந்ததாகவும், இடைவழியில் அவர் இறங்கியதாகவும், அவரே துப்பாக்கி நபர்களுக்கு தகவலைத் தெரிவித்து, இத்தாக்குதலை நடத்தியிருக்கலாமெனவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

►3

கொழும்பிலுள்ள விடுதிகளின் மீது பொலிசாரின் கண்காணிப்பு தீவிரமாகியது

(01.08.04)

கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக நகரிலுள்ள தங்கு விடுதிகளின் (லொட்ஜ்) மீதான கண்காணிப்பை, பொலிசார் தீவிரப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்களையடுத்து, நகரின் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் முக்கிய மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இந்நிலையிலேயே, வெளியிடங்களிலிருந்து நகருக்குள் வந்து தங்குவோரின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்க பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

►4

ஆசிய கோப்பையை சிறீலங்கா கைப்பற்றியது

►18

Orient Textilien & Schmuck
Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836
தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!
* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K
உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.
உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord

57 சிறுத்தைப் படையணி மாவீரர்களின் 9ம் ஆண்டு நினைவு நாளும் சோதியா படையணியின் 7ம் ஆண்டு நிறைவு நிகழ்வும்

(01.08.04)

மணலாறு கொக்குத்தொடுவாய் சிறீலங்காப் படை முகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த 57 சிறுத்தைப் படையணி மாவீரர்களின் 9ம் ஆண்டு நினைவு நாளும், சோதியா படையணியின் 7ம் ஆண்டு நிறைவு நிகழ்வும் கடந்த 28ம் திகதி புதன்கிழமை நடைபெற்றுள்ளன. இந்நிகழ்வில் பொதுச்சுடரினைப் போராளி தமிழ்க்கவி ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினைத் தளபதி கேணல் ஜெயம் அவர்கள் ஏற்றினார். ஈகைச் சுடரினைப் பிள்ளையார் மாஸ்ரர் ஏற்றினார்.

1995ம் ஆண்டு ஏழாம் மாதம் 28ம் திகதி கொக்குத்தொடுவாய் சிறீலங்காப் படைமுகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த சிறுத்தைப் படையணியின் லெப்.கேணல் கோமளாவின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை அவரது தாயார் அணிவித்தார். சிறுத்தைப் படையணியின் முதல் மாவீரர் லெப்.ஆதிரையின் திருவுருவப்படத்திற்குப் போராளி கெங்கா மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து தற்காப்புக்கலை ஆசிரியர் சோதி மற்றும் போராளிகள் வழங்கிய நினைவுக் கவிதைகள், பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவான நடன நிகழ்வுகள், போராளி சாம்பவி தணிகை மாறனின் நெறியாள்கையில் உருவான `விழ விழ எழுவோம்' நாட்டிய நாடகம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் சோதியா படையணியின் ஏழாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற போராளிகளுக்கான பரிசில்களைச் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணித் தளபதி லெப்.கேணல் நகுலன், மற்றும் தினேஸ் ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் வழங்கிக் கௌரவித்தனர். இந்நிகழ்வில் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் உள்ளிட்ட பெருமளவானோர் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழர்களின் கடல் வளத்தை வெளிநாடுகளுக்கு விற்க முயற்சி!

வடபகுதியின் கடற்பரப்பில் எண்ணெய் தொடர்பான ஆரம்பக் கட்ட ஆய்வுகள் திருப்திகரமாக இருந்ததாக தெரிவித்துள்ள சிறீலங்கா பெற்றோலிய வளத்துறைப் பணிப்பாளர் டிடஸ் ஜயவர்தன பரிசோதனைகளுக்காகத் துளையிடுவதற்கு ஒன்பது இடங்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன என்றும் இப்பணிக்காக மனுச்செய்பவர்கள் ஒரு கேள்வி அறிவித்தல் நடைமுறை மூலம் அடுத்த வருட முற்பகுதியில் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

மன்னார் வளைகுடா கடற்படுக்கையில் நிலநடுக்கம் தொடர்பான ஆய்வுகள் நோர்வே நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டன. மன்னார் வளைகுடா கடற்படுக்கை ஆய்வுகள் காலி வரையிலும் விஸ்தரிக்கப்படவுள்ளன. தீவு முழுமையையும் மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயத்தையும் உள்ளடக்கிய செயற்கைக்கோள் ஈர்ப்பு ஆய்வுகள் சுவீடன் நிறுவனமொன்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஆய்வுகளுக்கும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின. இந்தச் செலவுளை இவ்விரு வெளிநாட்டு நிறுவனங்களே பொறுப்பேற்றுக்கொண்டன. பெற்றோலிய வளச் சட்டமூலமானது ஏற்கனவே வரையப்பட்டு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று ஜயவர்தன கூறியுள்ளார்.

அத்துடன், 50 கி.மீற்றர் நீளமான கரையோர ஆய்விற்கான பிரதேசமாக இருக்கும் ஆழம் குறைந்த பாக் வளைகுடாவுடன் ஒப்பிடுகையில் மன்னார் வளைகுடா ஆழமாகக் காணப்படுவதனால் செலவாவது அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சோதனைக்கிணறு தோண்டுவதற்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலாபத்தை பங்கிடும் அடிப்படையில் இந் நடவடிக்கையில் ஈடுபடும் நாடுகள் சகல செலவுகளையும் பொறுப்பேற்றுக்கொள்ள ஒத்துக்கொள்ள வேண்டும் எனவும் ஜயவர்தன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களும் சந்திப்பு

(01.08.04)

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட நாளாக நடைபெறாமல் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இந்த சந்திப்பு தம்பிலுவில் அரசியல் செயலகத்தில் நடைபெற்றது.

EUROCONSULT SARL
TRADUCTIONS
மொழி பெயர்ப்பு நிலையம்
அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

அதிசயம் ஆனால் உண்மை
உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விமல் விநியோக நிலையம்
VIMAL DISTRIBUTION
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

போட்டோ பாலா
மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

LA CHAPELLE
இறைச்சிக் கடை
சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!
உங்கள் பற்களில் பிரச்சினையா?

புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

Errances Travels
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

Bombay	-	560 Eu
Delhi	-	560 Eu
Bangkok	-	550 Eu
Colombo	-	660 Eu
Singapour	-	660 Eu
Madras	-	658 Eu
New york	-	550 Eu
Montreal	-	540 Eu
Oslo	-	315 Eu
Toronto	-	540 Eu

கிழக்கில் படுகொலைகள் செய்யவிருந்த மேலும் 3 கருணா குழுவினர் புலிகளால் கைது

(01.08.04)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பெரிய புல்லுமலைப் பகுதியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கருணா குழுவைச் சேர்ந்த மூவரை விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் கைது செய்துள்ளனர். பதுளை - செங்கலடி வீதிக்குச் சமீபமாகவுள்ள இப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சிலர் நடமாடுவதாக பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே அங்கு சென்ற புலிகள் இந்த மூவரையும் கைது செய்துள்ளனர்.

கரடியனாறு மற்றும் வேப்பவெட்டுவான் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் ரவிச்சந்திரன் (30), சின்னத்தம்பி என்றழைக்கப்படும் செல்லத்துரை சந்திரசேகரம் (27) மற்றும் குணபண்டா சின்னவன் (35) ஆகியோரே புலிகளால் கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் வசமிருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் இரண்டும், அதற்குரிய ரவைகளும் எஸ்.எல். ஆர். ரகத் துப்பாக்கியொன்றும் அதற்குரிய ரவைகளும் கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் தாக்குதல்களை நடத்தும் நோக்கிலேயே இவர்கள் ஊடுருவியிருந்ததாகவும் எனினும், பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவர்களைத் தாங்கள் கைது செய்துள்ளதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

இதுஇவ்வாறிருக்க, ஏறாவூர் உப்போடை பகுதியிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற இளைஞர் ஒருவரை படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இவரிடமிருந்து சீனரக தயாரிப்பான கைத்துப்பாக்கியொன்றையும் படையினர் மீட்டுள்ளனர். வந்தாறுமூலை பலாச்சோலையைச் சேர்ந்த நந்தன் என்றழைக்கப்படும் குலசேகரம் சுயந்திரன் (20) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். கருணா குழுவைச் சேர்ந்தவரென சந்தேகப்படும் இவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 13ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிரேதப் பெட்டி வாங்கச்சென்றபோது குண்டு வெடிப்பு !

இரு இராணுவத்தினர் உட்பட நால்வர் காயம்

பொலநறுவை மருத்துவ மனைக்கு முன்பாகவுள்ள பிரேதப் பெட்டி, கடையொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் இராணுவ வீரர்கள் இருவர் உட்பட நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர். யாழ்குடாவில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றிய தெஹ்யத்த கண்டியவைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார். இவரின் சடலம் விமானம் மூலம் கொழும்பிற்கு எடுத்து வரப்பட்டு கொழும்பி லிருந்து பொலநறுவையில் உள்ள சொந்த வீட்டுக்கு சடலத்தை கொண்டு செல்வதற்கு முன்னர் உடலை பிரேதப் பெட்டியில் வைப்பதற்காக, பிரேதப்பெட்டி கடையொன்றின் முன்னால் நிறுத்தப்பட்டு, சடலம் இராணுவ வாகனத்தில் இருந்து பிரேத வாகனத்தில் ஏற்றப்பட்ட போதே குண்டு வெடித்துள்ளது. இதனால் வாகனத்தில் இருந்து சடலத்தை இறக்கிய இரண்டு இராணுவத்தினரும் பிரேதப் பெட்டி கடை ஊழியர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

குண்டு வீசி எறியப்பட்ட போது வெடித்ததா அல்லது பிரேதத்துடன் மறைத்து எடுத்து வரப்பட்டதா அல்லது இராணுவ வீரர்களின் குண்டு வெடித்ததா என்பது பற்றி விசாரணை செய்து வருவதாக பொலநறுவை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பியசேன தெரிவித்துள்ளார்.

புளொட் மோகனுடன் கொலையாளிக்குத் தொடர்பு...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு படுவான்கரை கொத்தியாபுலையைச் சேர்ந்த புளொட் மோகன் (கந்தையா யோகராஜா 41 வயது) இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து மிக நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்தவர். இவருக்கு இராணுவத்தால் கப்டன் பதவியும் வழங்கப்பட்டிருந்தது. பல தடவைகள் இவர் இலக்கு வைக்கப்பட்டிருந்ததால் இவரது நடமாட்டம் மிக மிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வெளியில் செல்வதானாலும், தன்னை அடையாளம் காட்டாத விதத்திலேயே பலத்த பாதுகாப்புடன் வெளிப்படையான போக்குவரத்துகளையும் மேற்கொண்டு வந்துள்ளார். இந்நிலையில் அவரது பயணத்தை அவருடன் கூட வந்த மேற்படி நபரே வெளியிட்டிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

ஆட்டோவில் வந்து இடைவழியில் இறங்கியவர் தலைமறைவாகிய நிலையில், அவரைப்பற்றி புலனாய்வுகளை பொலிசார் மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில், கொழும்பிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞரே அவர் என்பதை கண்டுகொண்ட பொலிசார், குறித்த விடுதியின் உரிமையாளர் மற்றும் விடுதியில் தங்கியிருப்போர் உள்ளிட்ட பலரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். சந்தேகநபர் தங்கியிருந்த விடுதியை சோதனையிட்டபோது அவர் தொடர்பான பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்தார்.

புளொட் மோகனின் கொலை தொடர்பாக அவர் இறுதியாகப் பயணம் செய்த முச்சக்கர வண்டிச் சாரதி மற்றும் புளொட் மோகனின் மனைவி உட்பட இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை 30க்கும் மேற்பட்டோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். இரண்டு மோட்டார் சைக்கிளில் பிரசன்னமானவர்களே பம்பலப்பிட்டி ஆர்.ஏ.டிமெல் வீதியில் வஜிர வீதிச் சந்திக்கு அருகில் வைத்து புளொட் மோகன் என்று அழைக்கப்படும் கந்தையா யோகராசாவை நேற்று முன்தினம் சனிக்கிழமை சுட்டுக்கொன்றிருந்தனர்.

இதுஇவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில், புளொட் மோகனின் இடத்திற்கு இன்னொருவரை நிரப்புவதென்பது நினைத்துப் பார்க்க முடியாததொன்றென சிறீலங்கா இராணுவ மற்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோகனை சிறீலங்காப் படையினர் மிகப்பெரும் சொத்தாகவே பேணிக் காத்து வந்ததாகவும், புளொட் மோகனின் இழப்பானது இராணுவப் புலனாய்வுப் பிரிவு இதுவரை சந்தித்த இழப்புகளிலேயே மிகப்பெரியதெனவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புளொட் மோகனின் பெயரைக் கேட்டாலே கிழக்கு மாகாண மக்கள் அச்சத்தால் நடுநடுங்க வைத்தனாலும் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையிலும் இவர் படைத்தரப்புக்கு மிகப் பெரும் பங்களிப்பை செய்துள்ளார். புளொட் மோகனைத் தெரிந்த இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இவரது கொலையால் அதிர்ச்சியடைந்துள்ளனர். இவரது இடத்தை நிரப்புவதென்பது இனி முடியாத காரியமெனத் தெரிவித்துள்ள இவர்கள், புளொட் மோகன் தங்களுக்கு கிடைத்த மிகப்பெரும் சொத்தெனவும் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பில் இவருக்கு பாதுகாப்பு குறைவென்பதால் வெளிநாடொன்றில் பாதுகாப்பாக தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டிருந்த இவர், கருணாவின் செயற்பாட்டை யடுத்து கொழும்புக்கு கொண்டு வரப்பட்டார். உலங்குவானூர்தி மூலமே மட்டக்களப்பிற்கு சென்று கருணாவை சந்தித்திருந்த செய்திகள் அக்காலப்பகுதிகளிலேயே வெளியாகியிரந்தன. அதேவேளை, கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெற்ற பல, நீண்ட தூர ஊடுருவல் தாக்குதல்களில் இவரது பங்களிப்பே முக்கியமாயிருந்தது. அத்துடன் கொழும்பில் கூட புலிகளுக்கெதிரான புலனாய்வு நடவடிக்கையிலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டுள்ளார். வன்னிப் பகுதியில் உடுருவித் தாக்குதலை மேற்கொள்வதற்காக கொழும்பின் மிலேனியம் சிற்றியில் அமைக்கப்பட்டிருந்த புலனாய்வு நடவடிக்கைகளிலும் இவரது பங்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது.

இந்நிலையில், இவர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியறிந்து, சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த பெருமளவு சிரேஷ்ட இராணுவ, பொலிஸ் மற்றும் புலனாய்வு அதிகாரிகளே, இவர் எந்தளவு தூரம் சிறீலங்காவிற்கு முக்கியமானவரென்பதை எடுத்துக் காட்டுவதாகவும் சில வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை, சம்பவம் நடைபெற்ற பகுதியில் புளொட் மோகன் யாரோ ஒருவருக்காகக் காத்திருந்த போதே இவர் சுடப்பட்டதாக, மோகன் வந்த ஆட்டோ சாரதி பொலிஸ் விசாரணையில் கூறியுள்ளார். நுகேகொடையிலிருந்து காலை 10.30 மணிக்கு இந்த ஆட்டோவில் புறப்பட்ட மோகன், பம்பலப்பிட்டி ஹவுஸ் ஒவ் பஷனில் பொருட்கள் வாங்கச் சென்றுள்ளார். ஆட்டோ சற்று தூரத்தில் நின்றபோது, இவர் ஹவுஸ் ஒவ் பஷனின் மேல்மாடிக்குச் சென்றுள்ளார். ஆனால், போயா தினமென்பதால் அது பூட்டப்பட்டிருக்கவே கீழே வந்துள்ளார். அவ்வேளை தொலைபேசி அழைப்பொன்றுவரவே, அதற்கு பதலளித்தபடி வந்தபோதே இரு மோட்டார் சைக்களில் வந்த இளைஞர்களில் இருவரால் ஒரே நேரத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது சமார் 12 குண்டுகள் இவர் மீது பாய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. தலைமுதல் இடுப்பு வரை இடப்புறமாக இவர்மீது 12 துப்பாக்கிச் சூடுகள் பட்டுள்ளன.

இதேநேரம், மோகனின் மனைவி பொலிசாருக்குத் தெரிவிக்கையில், புளொட் அமைப்பின் முன்னாள் தளபதி ஒருவரின் சகோதரரது நண்பனொருவருக்கு 'பியர்' விற்பனைக்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் மோகன் ஈடுபட்டிருந்தார். மேற்படி நபரின் சகோதரர் இந்தோனேசியாவிலிருந்தாலும் அவரது நண்பர் மோகனைக் கடந்த புதன்கிழமை முதல் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் சந்தித்துள்ளதாகக் கூறியுள்ளார். எனினும், இந்த நபர் விடுதலைப் புலி உறுப்பினராக அல்லது புலிகளுக்கு தகவல் தெரிவிப்பவராக இருக்கலாமெனப் பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மோகனுடன் வந்த ஆட்டோ சாரதி துப்பாக்கி தாரிகளை பார்த்திருக்கலாமெனப் பொலிசார் கருதுகின்றனர். ஆனால், அவர்களைத் தான் பார்க்கவில்லையென ஆட்டோ சாரதி பொலிசாரிடம் கூறியுள்ளார். மோகன் சூடுபட்டு வீழ்ந்து கிடந்த போது, அவர் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரென்றே முதலில் பொலிசார் கருதினர். எனினும் லெயாட்ஸ் வீதியிலுள்ள தங்கள் அலுவலகத்திலிருந்து ஓடி வந்த ஈ.பி.டி.பி. கூலிக் குழுவினரே, புளொட் மோகனே சுடப்பட்டதாக பொலிசாருக்குத் உண்மையைப் புரியவைத்தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புளொட் மோகன் சுடப்பட்ட இடத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் அவர்களது அனுமதியின்றியே படம்பிடிக்கப்பட்டனர். இச்செயலை ஆட்சேபித்துச் செய்தியாளர்கள் பொலீஸ் அதிகாரியிடம் முறைப்பாடு செய்தனர். சம்பவம் நடந்த இடத்துக்கு 50ற்கு மேற்பட்ட செய்தியாளர்கள் சென்று தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் அவர்களின் அனுமதியின்றியே படப்பிடிப்பாளர் ஒருவர் செய்தியாளர்களைப் படம் பிடித்துக்கொண்டிருந்தார். இதனை அவதானித்த செய்தியாளர்கள் அங்கு நின்ற பொலீஸ் அதிகாரிகளிடம் அது பற்றித் தமது ஆட்சேபத்தை வெளியிட்டனர். பின்னர் பொலிசார் விசாரணைசெய்தபோது அந்தப் படப்பிடிப்பாளர் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

நெதர்லாந்தில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர் திருப்பியனுப்பட முன் இடைத்தங்கல் முகாமில்தங்கவைக்க முடிவு

(02.08.04)

நெதர்லாந்தில் தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்ட அகதிகளை திருப்பி அவர்களது நாடுகளுக்கு அனுப்புவதற்கு முன், அவர்களைத் தங்கவைப்பதற்கென நெதர்லாந்து அரசாங்கம் புதிய இடைத்தங்கல் முகாமொன்றை அமைத்துள்ளது. நெதர்லாந்தில் தஞ்சம் கோரியுள்ளோரில் 26 ஆயிரம் பேரின் தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவர்களை திருப்பி அவர்களது சொந்த நாடுகளுக்கு அனுப்புவது என ஜான் பீற்றர் பல்கினேற் தலைமையிலான அரசாங்கம் முடிவு செய்துள்ளது. எனவே தான் இவ்வாறானவர்களை அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் வரை தடுத்து வைப்பதற்கென இம்முகாம் கடந்த வெள்ளிக் கிழமை திறக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் எல்லைப் புறத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தடுப்பு முகாமை திறந்து வைத்து உரை நிகழ்த்திய அந்நாட்டின் குடிவரவுத் துறை அமைச்சர், தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்டோர் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவ்வாறு ஒத்துழைக்க மறுத்தால் பணமோ உணவோ இன்றி அவர்கள் வீதியோரத்திலேயே வசிக்க வேண்டி ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இத்தடுப்பு முகாமில் 300 பேரை தங்கவைப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இம்முகாமில் முதற் கட்டமாக ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் தஞ்சங் கோரிக்கை மறுக்கப்பட்டோர் குடியமர்த்தப் படுவர். இதேவேளை, சொந்த விருப்பின் பேரில் தாய் நாடு திரும்ப விரும்புவோருக்கு 6 ஆயிரம் யூரோக்கள் வரை சன்மானமாக வழங்க நெதர்லாந்து அரசு முன்வந்துள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஐந்து ஆலயங்களில் ஒரே இரவில் கொள்ளை

(01.08.04)

யாழ். தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஐந்து ஆலயங்களில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் ஒரே இரவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக்கொள்ளைச் சம்பவங்கள் கடந்த25ம் திகதி இரவு இடம்பெற்றுள்ளன. சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அம்மன் ஆலயம், மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயம், சாவகச்சேரி வடக்கு இலுவம்-பிள்ளையார் ஆலயம், சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் வீரபத்திரர் ஆலயம், கெருடாவில் இல்வாரை - வெற்றிலை சாஸ்திரியார் காளி ஆலயம் ஆகிய ஆலயங்களில் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு ஒரே இரவில் திருட்டுக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சாவகச்சேரி மண்டுவில் அம்பாள் ஆலயத்தின் கதவுகளின் பூட்டுக்கள் உடைத்துத்திறந்து, மூலஸ்தானம் வரை சென்ற திருடர்கள் ஆலய மூலமூர்த்தியான அம்பாள் விக்கிரகத்தைப் புரட்டி அதன் கீழிருந்த தகட்டை எடுக்க முயற்சித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தத் தகடு செப்பு என்ற காரணத்தினால் அது அபகரிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், அம்மன் உட்பட ஏனைய விக்கிரகங்களில் இருந்த தங்க நகைகள், வெள்ளி முடிகள், கண் மடல்கள் திருடப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆலய உள்வாசல் கதவில் இருந்த பித்தளை மணிகள் உடைக்கப்பட்டு கழற்றப்பட்டுள்ளன.

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வெளிப் புறக் கதவினை உடைத்து உள்ளே சென்ற திருட்டுக் கும்பல் அர்ச்சனைச் சீட்டு வழங்கும் அறை, ஆலய உள்வீதியில் இருந்த உண்டியல் ஆகியவற்றை உடைத்து பணத்தை அபகரித்துள்ளது.

கொழும்பு சம்பவங்கள் குறித்து கண்காணிப்புக் குழு தீர்ப்புக் கூற மாட்டாது

(02.08.04)

கொழும்பு மற்றும் கொட்டாவ பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்ப்பெதனையும் வழங்கமாட்டாதென கண்காணிப்புக்குழு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கொட்டாவவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கருணா குழுவினர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி அறிவதற்காக, கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர் அங்கு சென்றிருந்தனர். எனினும் பம்பலப்பிட்டியில் புளொட் மோகன் சுட்டுக் கொல்லப்பட்ட பகுதிக்கு கண்காணிப்புக் குழுவினர் செல்ல வில்லை.

இவை பொலிஸ் விசாரணைக் குரியவை. இவையெல்லாம் போர் நிறுத்த உடன்பாட்டுடன் தொடர்பு பட்டவையா என்பதைக் கூறமுடியா திருப்பதாகக் காண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறினார். கொட்டாவ சம்பவத்துடன் புலிகளுக்கான தொடர்பு பற்றி உடனடியாக அவர்களிடம் கேட்டதாகவும், எனினும் அதில் தங்களுக்கு எதுவித தொடர்புமில்லையெனக் கூறிய புலிகள் அது கருணா குழுவினருக் கிடையில் நடைபெற்ற சம்பவமெனத் தெரிவித்ததாகவும் கூறினார்.

அத்துடன் புலிகளுக்கிடையிலான பிரச்சினையில் தலையிடுவது குறித்து போர் நிறுத்த உடன்பாட்டில் எதுவும் குறிப்பிடவில்லையெனக் கூறிய ஹொக்லண்ட், நாட்டின் எந்தப் பகுதியிலும் கொலைகள் நடைபெறுவது தவிர்க்கப்படவேண்டுமென்பதை கண்காணிப்புக் குழுவினர் மறந்துவிடக் கூடாதென்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள விடுதிகளின் மீது...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கொழும்பு நகரில் சுமார் 200 விடுதிகள் உள்ளன எனவும் இவற்றில் 86 விடுதிகள் புறக்கோட்டைப் பகுதியிலும், கெசல் வத்தையில் 32ம், கொட்டாஞ் சேனையில் 21ம், மருதானையில் 62ம், வெள்ளவத்தையில் 12ம் உள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக மருதானைப் பகுதிகளிலுள்ள விடுதிகளில் தங்கியிருப்போர் பற்றிய விவரங்கள் பொலிசாரால் திரட்டப்பட்டு வருகின்றன எனத் தெரியவருகின்றது.

இதைவிட பதிவுகள் எதுவுமின்றி பல விடுதிகள் இருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். இதே நேரம் இந்த விடுதிகளில் பெரும்பாலும் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களே தங்கியிருப்பதாகவும், கொழும்புக்கு அவசர தேவைகளுக்காக வரும் இவர்களுக்கு வேறு தங்குமிடங்கள் எதுவுமில்லாததால் அவர்களே இங்கு பெருமளவில் தங்குவதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கொழும்பில் பொலிஸ் பதிவு முறை நீக்கப்பட்டதுடன் விடுதிகள் மீதான கண்காணிப்பையும் பொலிசார் தவிர்த்து விட்டதாகவும், மீண்டும் இவை மீதான கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் விதத்தில் 3 விசேட பிரிவுகளைக் கொண்ட பொலீஸ் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றன. கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் இந்த குழுக்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட பொலிசார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு என்றே உருவாக்கப்பட்டுள்ள இந்த மூன்று பிரிவுகளும் 24 மணி நேரமும் இயங்கக் கூடிய வகையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த வாரம் முப்படைகள் மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்து மேற்கொண்ட கலந்தாலோசனைக்கு அமையவே இந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.



நேசன் Cash and Carry

இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 8574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

ஈழமுரசு
PONRAI AM WEEKLY

கண்ணை மூடினால் உலகம் இருளாது

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் மீண்டும் விரைவாக ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலைகள் உருவாகும் என்பதில் நம்பிக்கையிழந்தவராக, எதிர்காலத்தில் நிலவரங்களில் மேம்பாடு ஏற்படக் கூடிய சாத்தியங்கள் அறவேயில்லை என்று கூறிவிட்டு நாடு திரும்பிவிட்டார் நோர்வேயின் பிரதி வெளியறவு அமைச்சர் விதார் ஹெல்கீசன். நோர்வேயினது மட்டுமல்ல சர்வதேசத்தினது இந்த நம்பிக்கையிழப்புக்குக் காரணம் சிறீலங்கா அரசும் அதன் இனவாதமும் தான் என்பது இன்று மறுக்க முடியாத உண்மை.

கருணாவையும் அவரது சகாக்களையும் வைத்துக்கொண்டு கிழக்கில் ஒரு குழப்ப நிலையை தோற்றுவித்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைந்த சிறீலங்காவின் இனவாதம், கடந்த சில நாட்களாக அதற்கு எதிராக இடம்பெற்றுவரும் கடுமையான நடவடிக்கைகளால் அதிர்ந்துபோயிருக்கின்றது. ஆப்பை இழுத்து வால் மாட்டிக்கொண்டதோ, அல்லது குரங்கு பிடிக்கப்போய் அது பிள்ளையாராக மாறி விட்டதோ என்று விழிபிதுங்கி நிற்கின்றது சிறீலங்கா. கொல்லப்படுகின்ற தமது ஆதரவாளரகளையும் தமது அங்கத்தவர்களையும் கூட உரிமைகூற முடியாமல், மறுக்க வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு இன்று சிறீலங்காவின் இனவாதம் தள்ளப்பட்டிருக்கின்றது.

கட்டிலுக்கு கீழே ஒளிந்துகொண்டு, அப்பு கட்டிலுக்கு கீழே இல்லை என்ற கதையாக, கருணாவோ கருணாவின் ஆட்கள் யாருமோ தங்களிடம் இல்லையென்று கூறிய சிறீலங்கா அரசின் நிலையின்று, மண்ணில் தலையைப் புதைத்த தீக்கோழியின் பரிதாப நிலையாக இருக்கின்றது. தொழும்பில் அவர்களின் பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே பலர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்ததில் இருந்து, உண்மையை மறைக்க முடியாமல் பத்திரிகையாளர்களை கூட சம்பவ இடங்களிற்கு செல்ல விடாமல் தடுப்பதிலும், காலதாமதப்படுத்துவதிலும் ஈடுபட்டு, உண்மையை மூடிமறைக்க முனைந்துநிற்கின்றது. எனினும் இப்போது உண்மைகள் சர்வதேசம் வரை வெட்டமெளிச்சமாகி விட்டன. சமாதான முயற்சிகளில் சிறீலங்கா அரசுக்கு உண்மையான அக்கறையோ நேர்மையான ஈடுபாடோ இல்லை என்பதை நிரூபிக்க இச்சம்பவங்களே போதுமானவை.

சமாதானத்திற்கான போர் என்ற உலகை ஏமாற்றி தமிழ் மக்கள் மீது மிகக்கொடூரமான போரை நேரடியாக் கட்டவிழ்த்துவிட்டவர் சந்திரிகா அம்மையார். இப்போது சமாதான காலத்தில் சமாதானம் பேசியபடியே மறைமுகப்போர் ஒன்றை உருவாக்கி, விடுதலைப் புலிகளை அழித்துவிட நடவடிக்கைகளை மேற்கொண்டார். மிகவும் பலமான நிலையில் பேச்சுக்கு வந்துள்ள விடுதலைப் புலிகளை, பலமிழக்க வைக்க என்ன செய்வது என்று தலையைப் பிய்த்துக்கொண்டிருந்த சிங்கள இனவாத்திற்கு தீனியாகக் கிடைத்ததுதான் கருணா. கருணாவை பயன்படுத்தி அல்லது கருணாவின் பெயரை பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்திய பின்னர் புலிகளோடு பேச்சுக்குப் போய் தாங்கள் விரும்பியதை தமிழ் மக்கள் மீது திணித்துவிடலாம் என்று மீண்டும் மீண்டும் கற்பனை செய்ததன் விளைவையே இன்று சிங்கள இனவாதம் அறுவடை செய்யத் தொடங்கியுள்ளது. இதனை உணர்ந்து கொள்ளாமல், தனது இனவாதச் செயற்பாடுகளை இவ்வாறே தொடருமானால் அது சமாதானத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறு நிகழுமானால், அதற்கான முழுமையான பொறுப்பையும் சிறீலங்கா அரசும் அதன் இனவாத சக்திகளுமே ஏற்கவேண்டும்.

ஐ.நா. ஆணைக்குழுவில் சிறீலங்கா மீது கடும் விமர்சனம்

(01.08.04)

கடந்த 27.07.2004 அன்று ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழுவின் 56வது கூட்டத்தொடரின் முன் சிறீலங்கா எதிர்பாராத கடும் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டது. சிறீலங்காவில் சட்ட ஒழுங்கு நடைமுறை சீர்குலைந்துவிட்டது எனவும், உடனடியாக ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு இவ்விடயத்தில் தலையிட வேண்டும் எனவும் இந்த அமர்வில் உரையாற்றிய இரு பிரதான ஐ.நா சபையின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. கடந்த 26.07.04 திங்களன்று ஜெனீவாவில் ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான உப ஆணைக்குழுவின் 56வது அமர்வு ஆரம்பமானது.

அனைத்துலக நாடுகளில் இருந்து தேர்வான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களை உறுப்பினர்களாகவும், அனைத்து நாடுகளையும் ஐ.நா அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களையும் அவதானிகளாகவும் கொண்டு ஆரம்பமான இந்தக் கூட்டத்தொடரானது ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் கொள்கை உருவாக்கல் நெறிமுறைகளின் கீழ் செயற்படுகின்றது. இந்த கூட்டத்தொடரின் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த கல்விமானும் நிபுணருமான ஒருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வுப ஆணைக்குழு முன் சிறீலங்காவின் சட்டம் ஒழுங்கு நடைமுறை தொடர்பாக ஆசிய சட்ட வள நிறுவனம் சமர்ப்பித்த விரிவான அறிக்கை சிறீலங்கா மீதான இன்றைய கடும் விமர்சனங்களிற்கு வழிசமைத்தது. இவ்வறிக்கையானது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும், பார்வையாளர்களாகப் பங்கேற்ற நாடுகளிற்கும் ஐ.நா பணிமனையால் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்வறிக்கையினை மனித உரிமைகள் உப ஆணைக்குழு தனது தற்போதைய விதிமுறைகளுக்குட்பட்டுத் தனித்துவமாகப் பரிசீலிப்பதைத் தவிர்த்துவருகின்றது.

இதனை விவாதிக்க விடாது தவிர்ப்பதற்கான இரா ஐதந்திர நகர்வுகளைச் சிறீலங்கா மேற்கொண்டதாக உப ஆணைக்குழுவில் பங்கேற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் கருதின. இதனால் அன்றையதினம் நாடுகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற இரு சர்வதேச நிறுவனங்கள் இவ்விவகாரத்தைக் கையிலெடுத்தன.

இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய ஆசிய சட்டவள நிறுவனத்தின் ஐ.நாவிற்கான பிரதிநிதி சிறீலங்காவின் சட்ட அமுலாக்கல் நிலவரத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் தொடர்பான அச்சத்தை வெளியிட்டார். அரசியல் அழுத்தம் மற்றும் பல காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களே தொடர்ந்தும் அடக்குமுறைக்குட்பட்டுப் பாதிக்கப்படும் ஆபத்தான சூழல் அங்கு எழுந்துள்ளதற்கான ஆதாரங்களை முன்வைத்தார். எனவே உடனடியாக ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு சிறீலங்கா நிலையை கருத்தில் எடுத்து இதனை ஆராய்வதற்கான வழிகளை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இவருற்கு முன்னர் உரையாற்றிய மக்களின் உரிமைக்கும் விடுதலைக்குமான சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி திருமதி வெரீனா கிராவ் அவர்கள், சிறீலங்காவில் சட்டம் ஒழுங்கு நிலை படிப்படியாக அரசியல் மயப்படுத்தப்பட்டு, இராணுவ மயப்படுத்தப்பட்டு இன்று சீரழிந்துவருகின்றது எனச்சாடினார். செம்மணி உட்பட பல கோரமான விவகாரங்களை அவர் இதற்காகப் பட்டியலிட்டு மிக தாக்கமான உரையினை ஆற்றினார். பல உலக நாடுகளின் பிரதிநிதிகளும், சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களும் அவரது உரையினைக் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர். இது சிறீலங்காவிற்கு எதிரான கடும் விமர்சனமான அமைந்திருந்தது.

ஆணைக்குழுமுன் உரையாற்றிய 'இன்ரர் பேத் இன்ரர்நசனல்' எனும் சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி கலாநிதி சால்ஸ் கிராவ் அவர்கள், விடுதலைப் புலிகள் மிக வெளிப்படையான முறையில் இணக்கப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்கையில் சிறீலங்கா சனாதிபதி அமைச்சர்களைத் தூக்கியெறிந்தும், நாடாளுமன்றத்தைக் கலைத்தும் இணக்கச் சூழலைக் குழப்புகின்றார் எனச் சுட்டிக்காட்டினார். சமாதானச் சூழல் நிலவிய போதும் எதுவித பொருண்மிய முன்னேற்றங்களும் அற்ற நிலையில் தமிழ் மக்கள் எவ்வளவு காலம் பொறுமையாக இருப்பார்கள் என்கின்ற கேள்வி பெரிதாக எழும்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

திங்களன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமான ஆணைக்குழுத் தொடரில் செவ்வாயன்றுதான் முதன் முதலாகப் பகிரங்கக் கருத்துரைகள் ஆரம்பமாகின.

இதேவேளை, இவ்வாணைக்குழுவிடம் தமிழ் மக்களின் பொருண்மிய சமூக கலாச்சார உரிமைகள் தொடர்பான மனுவொன்றை அனைத்துலகத் தமிழர் கூட்டமைப்பு கையளித்துள்ளது. இம்மனுவானது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதாரச் சமூக கலாச்சார உரிமைகளை சிறீலங்கா தொடர்ந்தும் நிராகரிப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளது. 1975ல் உருவாக்கப்பட்டுச் சிறீலங்காவும் கைச்சாத்திட்டுள்ள பொருண்மிய சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் தமிழ் மக்கள் தமக்கான நிர்வாக அமைப்பைப் பெறும் உரிமைகள் கொண்டவர்கள் என சுட்டிக்காட்டியுள்ளது.

கிளிநொச்சியில் மனித உரிமைகள் செயலகத்தின் 2வது கூட்டம்

(02.08.04)

கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் இரண்டாவது கூட்டம் நேற்று 1ம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. வணபிதா கருணாரட்ணம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக செயலாளர் புலித்தேவன், திருகோணமலை வழக்கறிஞர் சிவபாலன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி டாக்டர் சிவபாலன், யாழ்.பல்கலைக்கழக நூலகர் அருளானந்தம், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரன், சந்திரநேரு, (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) வன்னி சட்டக்கல்லூரித் தலைவர் அச்சுதன், மனித உரிமைகள் ஆர்வலர் செல்வி.மாலதி (நியூசிலாந்து), செல்வி.டீட்ரே மிக்கொனல் (பரிஸ்-மனித உரிமைகள் தமிழ் நிலையம்), கிருபாகரன், பிரதீப் (சட்டத்தரணி-அவுஸ்ரேலியா) அண்ணா பரராஜசிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வணபிதா கருணாரட்ணம் ஒவ்வொருவரையும் வரவேற்று கூட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் வடக்கு-கிழக்கு உரிமைகள் செயலகம் சிலவாரங்களுக்கு முன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கபட்டதன் பின் வடக்கு கிழக்கில் 7 முறைப்பாடுகள் செய்யபட்டுள்ளன. அதில் 5க்கு தீர்வு கண்டுள்ளோம். ஐக்கிய நாடுகள் பிரதிநிதி ஒருவரும் செயலகப் பணிகளை அறிய வருகை தந்திருந்தார். தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு.நடேசனும், தமிழீழ நீதிநீர்வாகப் பொறுப்பாளர் பாரா ஆகியோரை பிரத்தியேகமாகச் சந்தித்து செயலகத்திற்கு தாம் எவ்வாறு உதவலாம் என்பது குறித்து கலந்துரையலாடியதாக வணபிதா கருணாரத்தினம் தெரிவித்ததுடன் சிறைகளில் மனித உரிமைகள் செயலகம் விசாரணைகளை நடத்துவதற்கு திரு.நடேசன் உதவி புரிவதாக வாக்களித்தார். என்றும் கூறினார்.

தமிழ்ழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவை சர்வதேச செஞ்சிலுவைக் குழு பார்வையிட்டது

தமிழீழ காவல்த்துறையின் கிளிநொச்சி கனகபுரம் சீர்திருத்தப் பிரிவிற்கு விஜயம் செய்து சர்வதேச செஞ்சிலுவைக் குழு பார்வையிட்டுள்ளது. கடந்த 29ம், 30ம் திகதிகளில் பயணித்த இக்குழு தண்டனை மற்றும் விளக்கமறியலில் உள்ளோரைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. அதன் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் மல்லாவி வதிவிடப் பிரதிநிதி ஸ்சிரசா பாமா, பாதுகாப்புப் பிரிவு அதிகாரி பமிலா, பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர் டங்கன் ஆகியோர் தமிழீழக் காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளருடன் கலந்துரையாடியதுடன், மனிதாபிமான அடிப்படையில் சீர்திருத்தப் பிரிவு பேணப்பட்டு வருகின்றமை குறித்துப் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்தம் தனது இறுதிநாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறதா?

சமாதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கச் செய்ய ஏதேனும் வழிமுறைகளை ஆராயவென ஐந்து நாள் பயணமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் வேதனை, விரக்தி கலந்த அபாய அறிவிப்பொன்றையும் விடுத்துச் சென்றுள்ளார்.

கடந்த 25ம் திகதி கொழும்பிற்கு வந்த விதார் ஹெல்கிசன் அடுத்தநாள் கிளிநொச்சிக்கு வந்தார். சாமாதான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான சிறீலங்கா அரசின் முக்கிய செய்தியுடன் அவர் வந்திருக்கிறார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவ்வாறெதனையும் அவர் கொண்டு வரவில்லை. சமீப காலமாக கிளிநொச்சிக்கு வரும் நோர்வே அனுசரணையாளர் குழுவினரைப்போலவே ஹெல்கிசனும் வெறுங்கையுடன்தான் வந்தார்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான தமது தரப்பு நிலைப்பாடுகளை தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துவிட்டபோதிலும் அதற்கான தெளிவானதொரு பதிலைப் பெற்று வருவதில் நோர்வே அனுசரணையாளர்கள் சிரமப்படுவதாகவே அறிய முடிகிறது.

அன்று கிளிநொச்சிக்கு வந்த விதார்ஹெல்கிசனுடன் இதனை ஊடகவியலாளர்கள் மிக அழுத்தமான தொனி

யிலேயே கேட்டார்கள். சனாதிபதியைச் சந்தித்தீர்களா? இலங்கை அரசிடமிருந்து என்ன செய்தியைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? விடுதலைப் புலிகள் தமது தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்களே. இனி அரசாங்கம்தானே முடிவினைக் கூறவேண்டும்? இப்படிக் கேள்வியினைத் தொகுத்தபோது ஹெல்கிசன் ஒருவாறு சமாளித்தார். பின்னர் கொழும்பு சென்ற அவர் 27ம் திகதி மாலை சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவைச் சந்தித்தார். அடுத்தநாள் - புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார் என சனாதிபதி தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனாலும் அச்செய்தி முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இருக்கவில்லை. ஏனெனில் காலையில் இதனைக் கூறிய சனாதிபதி மாலை என்ன சொல்வார் என்பது எல்லோருக்கும் தெரியும். கடந்தமாதம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசியபோது, அவர் மேற்கூறிய விதமாகவே கூறிவிட்டு, அடுத்தநாள் அதனை மறுத்துரைத்தார். இத்தடவையும் அவரின் இக்கூற்று வெற்று வேட்டாகவே போய்விட்டது.

சனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடிய பின்பு விதார் ஹெல்கீசன் ஊடகவியலாளர்களுடன் பேசினார். மிக விரக்தியான தொனியில் அவர் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

- இலங்கையரே தங்களது இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கவேண்டும.
- இம்முறை எனது விஜயத்தின் பின் புதிதாகக் கூறுவதற்கு எதுவும் இல்லை.
- முன்னரயும் விட அரசுக்கும் புலிகளுக்குமான நம்பகத் தன்மை குறைந்துள்ளது.
- கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை மோசமானதாகியுள்ளது.
- யுத்த நிறுத்த ஒப்பந்தம் போரை முடக்கிவைத்துள்ளதே தவிர அது சமாதானமல்ல. அது இனப்பிரச்சினைக்கு முடிவுகட்டவில்லை என்பதை இலங்கை மக்கள் மறந்துவிட்டார்கள்.
- யுத்தம் கொஞ்சம் கொஞ்சமாக சிலிர்த்துக்கொண்டுள்ளது.
- சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க எனது விஜயம் உதவவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்தை காப்பாற்றுவதற்கே தற்போது முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.
- தற்போதைய நிலைமை அபாயகரமானது
- இராணுவத்தீர்வுக்கும் சமாதானத்தீர்விற்கும் இடைப்பட்ட பாதை என்று எதுவும் இல்லை.

இது நோர்வே அனுசரணையாளர்களின் முக்கிய நபரான நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் கடந்த 28ம் திகதி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த கருத்துக்கள். இவரின் கருத்துக்களிலிருந்து பல விடயங்களை தெளிவாக ஊகிக்க முடிகிறது.

நோர்வே அனுசரணையாளர்கள் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் சமாதான அனுசரணைகளில் விரக்தி நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பது அதில் ஒன்று. அடுத்து, இலங்கை மக்கள் அதாவது, பெரும்பான்மை இனமக்கள் நாட்டில் நிலவும் யுத்தமற்ற சூழ்நிலையை சமாதானம் என எண்ணிக்கொண்டிருக்கும் தன்மையை அவர் சுட்டிக்காட்டுகிறார். யுத்தம் முடக்கப்பட்ட இந்த சூழ்நிலையை சமாதானம் என எண்ணி பொறுப்பற்ற நிலையில் மக்கள் இருந்தால் வரப்போகும் அபாயத்தை யாராலும் தடுக்க முடியாது.

இரண்டரை வருடங்களுக்கு முன்பு இலங்கைத் தீவில் நடைபெற்றுக்கொண்டிருந்த யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள், தாக்கங்கள் என்பன தமிழ் மக்களுக்கே அதிகமானவையாக இருந்தபோதிலும் சிங்களவர்கள் பாதிப்படையவில்லை என்று யாரும் கூறமுடியாது. யுத்தத்தின் தீவிரம் தமிழர் தாயகத்தில மட்டுமல்லாமல் சிங்களப் பிரதேசங்களுக்கும் பரவியதையும், இராணுவத்திலிருந்த சிங்களவர்களின் பிள்ளைகளின் அழுகிய உடலங்கள் நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக, அவர்கள் வீடுகளுக்குக்கொண்டு செல்லப்பட்டதையும் அம்மக்கள் சுலபமாக மறந்துவிடமுடியாது. சிங்களவர்களின் தலைநகரிலேயே குண்டுகள் வெடித்தபோதுதான் தமிழர்களின் பிரச்சினைகளை சிங்களவர்கள் உணரத்தொடங்கினர். சமாதானம், யுத்த நிறுத்தம் என முன்வந்த ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு அப்போது சிங்களமக்கள் ஆதரவு வழங்கியதும், இதனால்தான்.

தற்போது மீண்டும் சந்திரிகா தலைமையிலான கூட்டணிக்கு சிங்கள மக்கள் ஆதரவளித்து வருவதும், பச்சை இனவாதம் பேசும் ஜே.வி.பியினருக்கு திரண்டு வரும் மக்கள் ஆதரவும் இந்த இரண்டரை வருட யுத்த நிறுத்த காலத்தில் சிங்களவர்கள் முன்னைய காலத்தை மறந்து போய்விட்டார்களோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

சனாதிபதி சந்திரிகா சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் தயாராகவுள்ளார். ஆனால், அவரின் பங்காளர்களான ஜே.வி.பி தான் அவரைக் குழப்பிக்கொண்டிருக்கின்றார்கள் என ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால், அதனை தமிழ்மக்கள் நம்பத் தயாராக இல்லை. சனாதிபதியின் முகமூடியை கிழித்தெறியும் விதமாக ஐக்கிய தேசிய முன்னணி கடந்த 2ம் திகதி பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாதிக்க நிர்வாகசபையை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி பேசத்தயார் எனில், தமது கட்சி நிபந்தனைகளற்ற ஆதரவினை வழங்கும் என்பதே அவ்வறிவிப்பு. ஐக்கிய தேசிய முன்னணி புலிகளின் இடைக்கால தன்னாதிக்க நிர்வாக சபை தொடர்பான யோசனைகளில் உடன்பாடு கொண்டுள்ளது என அவர்களின் இவ்வறிவிப்பிலிருந்து யாரும் முடிவெடுத்துவிடக்கூடாது. சனாதிபதி சந்திரிகாவின் சுயரூபத்தை வெளிப்படுத்தவே இவ்வறிவிப்பினை அவர் விடுத்திருப்பதாகவே கருதவேண்டியுள்ளது.

புலிகள் சமர்ப்பித்துள்ள - இடைக்கால தன்னாதிக்க நிர்வாக சபையின் அடிப்படையில் சனாதிபதி பேச்சுவார்த்தைகளைத் தொடர்வாரேயானால், தாம் அரசாங்கத்தில்

> **சமாதானப் பேச்சுக்களை இழுத்தடித்து தமது படைப்பலத்தை கட்டியெழுப்பி புலிகளை இராணுவ ரீதியாக கையாள முனையும் ஒருகால நீட்சியை தடுக்குமுகமாக புலிகள் இறுக்கமானதொரு நிலைப்பாட்டை இச்சந்தர்ப்பத்தில் எடுக்க முனையலாம்.**

ருந்து வெளியேறப்போவதாக ஜே.வி.பியினர் தொடர்ந்து மிரட்டிக்கொண்டிருக்கும் நிலையில், ஐக்கிய தேசிய முன்னணியின் அறிவிப்பை ஏற்று சமாதான முன்னெடுப்புக்களைத் தொடரத் தயாரா என இலங்கை நாட்டில் சமாதானம் நிலவவேண்டும் என விரும்பும் உலகநாடுகள் இச்சந்தர்ப்பத்தில் சந்திரிகாவிடம் கேட்கலாம்.

சமாதான அனுசரணையாளர்கள் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் பரிமாறக்கூடிய செய்திகள் எவையும் தற்போதைக்கில்லை. சரியான முடிவுகள் எவையும் வராமல் அவர்கள் மீண்டும் தாமதமாகலாம்.

முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடமிருந்து அமைச்சுப் பொறுப்புக்களை சந்திரிகா பறித்துக்கொண்டு இழுபறிநிலையில் நோர்வே அனுசரணையாளர்கள் தமது அனுசரணைப்பணிகளில் இருந்து இடைவிலகியிருந்ததைப் போன்ற ஓர் நிலையும் இனிவரலாம்.

சமாதானப் பேச்சுக்களை இழுத்தடித்து தமது படைப்பலத்தை கட்டியெழுப்பி புலிகளை இராணுவ ரீதியாக கையாள முனையும் ஒருகால நீட்சியை தடுக்குமுகமாக புலிகள் இறுக்கமானதொரு நிலைப்பாட்டை இச்சந்தர்ப்பத்தில் எடுக்க முனையலாம்.

எதிர்வரும் நாட்கள் இதற்கான விடைகளைத் தரக்கூடும்.

- விவேக் -



சிங்கப்பூரில் உங்கள் இல்லம்

01-22 Belilios lane, off serangoon road, New kerbau Inn.

கட்டணங்கள் s$40ல் இருந்து. குளிரூட்டப்பட்ட சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்காப்புப்பெட்டி, இணைந்துள்ள குளியல் அறை வசதிகள் உள்ளன.
கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி
திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல். விமான நிலையத்திலிருந்து ஏற்றிச்செல்லல். உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்.
முன்கூட்டியே தொலைபேசியூடாகப் பதிவுசெய்வதற்கு: 65 : 63 96 55 00 (V.புஸ்பா)
அல்லது Email: newkinn@singnet.com.sg

New Kerbau Inn

'தமிழில் பேசுவோம் தாய் மொழியை வளர்ப்போம்'
Management-
VIVALINK HOLDINGS

- புலிகள் இடைக்கால நிர்வாக யோசனைகள் -

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்

தடுமாறும் சிறீலங்காப் பேரினவாதக் கட்சிகள்

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கம் சமாதான நடவடிக்கைகள் குறித்த விடயங்களில் இதயசுத்தியுடன் நடந்துகொள்ளவில்லை என்பது பொதுவான உண்மை. உலகறிந்த விடயமும் கூட. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி சமாதான ஏற்பாடுகள் குறித்து விசனம் தெரிவிப்பதோடு தமிழ் மக்களுக்காக நீலிக்கண்ணீரும் விட ஆரம்பித்துள்ளது. அதேவேளை கொழும்பில் சமீபகாலமாக இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களினால் மக்கள் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கின்றது. அரசாங்கத்தை குறிப்பாக ஜனாதிபதியை ஐக்கிய தேசியக் கட்சி காரசாரமாக விமர்சித்து வருகின்றது. புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காமையினாலும் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் நிதியுதவி வழங்கும் நாடுகள் நிதியை வழங்க

மறுப்பதாகவும் அதற்கெல்லாம் ஜனாதிபதியே பொறுப்பென்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ராஜித சேனரத்தின விமர்சிக்கின்றார். அது மாத்திரமல்ல புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிப் பதற்கு ஜனாதிபதி ஏன் தயக்கம் காட்டுகின்றார் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச் சருமான பேராசிரியர் பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏதோ தமது அரசாங்கம் பதவியில் இருந்திருந்தால் இவர்கள் வடிக்கின்ற நீலிக்கண்ணீருக்கான காரணங்களுக் கும் இவர்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கும் விடை கண்டிருக்க முடியும் என்பது போன்ற மாயை ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி மக்கள் மத்தியில் பரப்பிவருகின்றது. ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ராஜித சேனரத்தின, பேராசிரியர் பீரிஸ், ரவி கருணா நாயக்கா மலிக் சமரவிக்கிரம, கருஜெயசூரியா ஆகியோர் ஊடகங்களின் முன்னால் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி தற்போது வெளியிடுகின்ற கருத்துக்களுக்கும் அது குறித்து ஜனாதிபதியை கண்டிக்கின்ற அல்லது விமர்சிக் கின்ற வார்த்தை ஜாலங்களுக்கும் ஒரு வகையில் முக்கிய த்துவம் கொடுத்தாலும் இவர்களுடைய அரசாங்கத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. அது குறித்து கடந்த பொதுத்தேர்தலின் போது இடம்பெற்ற பிரசாரங்களில் கூட ஐக்கிய தேசியக்கட்சி எதிர்கொண்ட கண்டனங்கள், விமர்சனங்கள் இன்றும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அந்த ஈரம் மாறுவ தற்கிடையில் இவர்கள் தற்போது நீலிக்கண்ணீர் வடிக் கின்ற உள்நோக்கம் என்ன? (இது குறித்த கேள்விகளோடு முன்னரும் இப்பந்தியில் எழுதப்பட்டது.)

கொட்டாவவில் கருணா அணியைச் சேர்ந்த எட்டுப்பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொழும்பில் புளொட் மோகன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இராணுவ புலனாய்வுத்துறை க்கு உதவி புரிபவர்கள் எல்லாம் இப்படியே சுட்டுக் கொல்லப்பட்டால் நிலமை என்னாகும் என்று ராஜித சேனரத்தின கேள்வி எழுப்பியதோடு தங்களது அரசாங்கத்தின் போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதில்லையெனவும் கூறியுள்ளார். இராணுவ சமநிலையில் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆனால் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் முப்படைத்தளபதி என்ற வகையிலும் ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ராஜித சேனரத்தின கண்டித்திருக்கின்றார். அதேவேளை கொழும்பில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பித்ததினால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். இவருடைய இந்தக் கருத்து வெளிப்பாடுகளை நோக்குகின்ற போது யாருக்காக பேசுகின்றார்கள்? என்ன பேசுகின்றார்கள்? நாட்டில் நடக்கவேண்டிய நன்மை எதுவென்று இவர்கள் கருதுகின்றார்கள் என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. உண்மையில் இவர்கள் சிங்கள மக்களுக்காக பேசி இது ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை நிரூபிக்கவேண்டும். இல்லையேல் இது பல்லின சமுதாயம் வாழுகின்ற நாடு என்பதை ஏற்றுக்கொண்டு தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு வழிவிடவேண்டும்.

ஆனால் அவையனைத்திற்கும் மாறாக வெறுமனே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றினால் போதும் என்ற நோக்கில் ஐக்கிய தேசியக்கட்சி சிங்கள மக்களை ஏமாற்றுகின்றது. உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசி அரசியல் ஆதாயம் தேடும் படலம் சிறீலங்காவின் அரசியல் கட்சிகளுக்கு கைவந்த கலை. அதுவே வரலாறும் கூட. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் போது விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக யோசனைகளை சமர்ப்பித்த போது அப்போதைய சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறியிருந்தனர். அதனை தற்போது வெளிப்படையா கவே தங்களுடைய கருத்துக்கள் மூலம் தெரிவிக்கின்றனர். அதேவேளை அப்போது எதிர்க்கட்சியாக இருந்து விமர்சித்தவர்கள் தற்போது அரசாங்கக் கட்டில் ஏறியதும் அது பற்றி மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறுவதை அவதானிக்க முடிகின்றது. அவர்களின் அந்த தடுமாற்றத்தை உணர்ந்து கொண்ட தற்போதைய (முன்னாள் அமைச்சர்கள்) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கிண்டிவிட்டு கூத்துப்பார்க்கின்றனர்.

இன்றைய (நேற்றைய) பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கவுரை ஆற்றிய முன்னாள் அமைச்சர் திசாநாயக்கா தங்களை புனிதர்களாகவும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டவர்கள் போன்றும் உரைநிகழ்த்தினார். அப்போது குறுக்கிட்ட சிங்கள ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த திஸாநாயக்கா விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின்படி வடக்கு கிழக்கு மாகாணத்தில் காணி அதிகாரத்தை புலிகளிடம் ஒப்படைத்துவிட முடியாது. அது மத்திய அரசிடமே இருக்கவேண்டும் என்று கூறினார். தற்போது 13வது திருத்தச்சட்டத்தின் கீழ் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் இருப்பது தவறானது என்றும் அதனையே மத்திய அரசாங்கம் பெற்றுக் கொள்வதற்கான சட்டத்திருத்தங்களை செய்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அருகில் இருந்த முன்னாள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் காணி அதிகாரம் இடைக்கால நிர்வாக அரசிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போதைய அரசியல் அமைப்பில் இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

தமிழ்மக்கள் கேட்கின்ற சுயநிர்ணய உரிமையின் அடிப்படையாக விளங்கும் காணி பங்கீட்டு அதிகாரம் குறித்து இனவாத நோக்கில் கருத்து வெளியிடுகின்ற திஸாநாயக்காவும் பீரிசும் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதில் ஜனாதிபதியின் தாமதப் போக்குக்குறித்து எவ்வாறு விசனம் தெரிவிக்கமுடியும். அது வெறுமனே நீலிக்கண்ணீர் தானே? ஒவ்வொரு மூத்த தலைவர்களும் சிங்கள மக்களிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவ்வப்போது வெளியிடுகின்ற கருத்துக் கள் கூற்றுக்கள் எந்?தளவிற்கு உண்மை? எந்?தளவிற்கு அது யதார்த்தம்? ஏன்பதை அறியாதவர்களாக இருப்பது கவலைக்குரியது. அதேவேளை அந்த அறியாமை விமர்சகர்களில் பார்வையில் வெட்கக்கேடானதாகவே இருக்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை இழந்த நிலையில் இவ்வாறு புராணம் பாட அரசாங்கத்தை தொத்துப்பொறியில் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செய்வதறியாது சகல சுமைகளையும்

– கொழும்பிலிருந்து **ஊரோடி**

மக்களிடமே ஒப்படைக்கின்றது. அதாவது மீண்டும் ஒரு தேர்தல் வந்தால் எங்களுக்கு பெரும்பான்மை வரக்கூடிய வகையில் வாக்களியுங்கள் என்று இப்போதிலிருந்தே அரசியல் பிச்சை கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

மறுபுறத்தில் அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி அடுத்த பொதுத்தேர்தலில் கூடுதல் ஆசனங் களை ஜாதிக ஹெல உறுமய பெற்றுவிடுமோ என்ற அச்சத்தில் இப்போதிருந்தே பௌத்த தேசியவாத பிரசாரங்களில் இறங்கி விட்டார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்றுதான் என கதைகட்டி ஜே.வி.பி மாத்திரமே தொழிலாளர்களினதும் பாமர மக்களினதும் கட்சி என்றும் தனித்துப்போட்டி யிட்டால் கூடுதல் ஆசனங்களை பெறமுடியும் என்ற விமர்சனங்களை சிங்கள மக்கள் மத்தியில் கூறிவருகின்ற னர். அரசியல் அமைப்பையும் யதார்த்தத்தையும் தெரிந்து கொள்ளாத அல்லது புரிந்து கொள்ள முடியாத பாமர சிங்கள மக்கள் ஜே.வி.பையும் ஹெல உறுமயவையும் தங்கள் மீட்பர்களாகவே கருதுகின்றனர். இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் சிங்கள மக்கள் சிலரிடம் இருக்கின்றது. இந்நிலையில் தீர்வு என்பது வெகுதூரம் நோக்கிச் செல்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள அரசியல் கட்சிகள் எல்லாம் கொழுக்கட்டையும் மோதகமும்தான் என்ற உணர்வே விஞ்சி நிற்கின்றது.

விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

ஈழத் தமிழர்களுக்கு பாதகமாகச் செயற்படக் கூடாது

– வெளிவிவகார அமைச்சரிடம் வைகோ வலியுறுத்தினார் –

(01.08.04)

ஈழத் தமிழர்களுக்கு பாதகமான முறையில் எந்த வகையிலும் இந்தியா செயற்படக் கூடாது என, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங்கிடம் வலியுறுத்தியுள்ளார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடந்த புதன் கிழமை அமைச்சர் நட்வார் சிங்கைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பு குறித்து வைகோ தெரிவிக்கையில், நட்வார் சிங்குடனான சந்திப்பின்போது ஈழத் தமிழரின் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் மனம் திறந்து பேசினேன். ஈழத் தமிழர்களின் இன்றைய நிலையை எடுத்து விளக்கினேன். அவர்கள் எப்போதும் இந்தியாவிற்கு உற்ற நண்பர்களாகவும் சகோதரர்களாகவுமே இருந்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் அப்படியே இருப்பார்கள். அவர்களது நலன்களை பாதுகாப்பது எமது கடமை என்பதை விளக்கிக் கூறினேன்.

பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் காலூன்ற முயலுகின்ற சூழ்நிலையை எடுத்துக் கூறி, அங்கு நடைபெற்று வரும், பேச்சுவார்த்தை வெற்றி பெறும் வகையில் இந்தியாவின் அணுகுமுறை இருக்க வேண்டும், எந்த வகையிலும் ஈழத் தமிழர்களுக்கு பாதகமான முறையில் இந்தியா செயற்பட கூடாது என்பதையும் எடுத்துக் கூறினேன். அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தன் இந்தியா வந்தபோது அவர் விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்ட விடயத்தையும் நான் அவருக்கு எடுத்துக் கூறினேன்.

ஈழவேந்தனை திருப்பி அனுப்ப முயற்சி எடுக்கிறார்கள் என்ற செய்தியை நான் அறிந்தபோது பிரதமருடன் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். ஆனால் அவர் அப்போது வேறொரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்ததால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஆனால் அதற்குள் அவரை உடனடியாக திருப்பி அனுப்பி விட்டார்கள். எனவே இம்மாதிரியான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக் கூடாது என எடுத்துக் கூறினேன். நான் கூறியவற்றை கவனமாக செவிமடுத்த அமைச்சர், இவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்வதாக தெரிவித்தார்.

இதேவேளை ஈழவேந்தனை திருப்பி அனுப்பியது குறித்து நட்வார் சிங்கிற்கு தெரிந்திருக்கவில்லை. இவ் விடயம் அதிகாரிகள் மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவே என்பதை, அவரது முகபாவத்திலிருந்தே அறிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது. உள்துறை அமைச்சில் உள்ள உளவுத்துறை அதிகாரிகளும் வெளிநாட்டமைச்சிலுள்ள சில அதிகாரிகளும் பல ஆண்டுகளாக ஈழத் தமிழருக்கு எதிரான போக்கையே கடைப்பிடித்து வருவதை அவருக்கு சுட்டிக்காட்டியுள்ளேன். ஆனால், ஈழவேந்தனோ அல்லது அவரைப் போன்றவர்களோ இந்தியா வந்தால் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காது என்ற உறுதிமொழியை நானும் கோரவில்லை. அவரும் தெரிவிக்கவில்லை. ஆனால், இச்சந்திப்பினையடுத்து இவ்வாறான சம்பவங்கள், மீண்டும் ஏற்படாது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

இதே நேரம், இந்தியாவும் இலங்கையும் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடுவது குறித்து இலங்கை பிரதமர் இந்தியாவிற்கு ஈழத் தமிழருக்கு பாதகமான எந்தவொரு விடயமும் நடைபெறாது என அனைவருக்கும் கூறிவைக்க விரும்புகிறேன். இந்தியாவுக்கும் சிறீலங்காவிற்கும் இடையில் இராணுவ ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக சிறீலங்கா அரசு தரப்பிலிருந்தே சொல்லப்பட்டன. ஆனால், பெங்களூரில் நடந்த உலகத் தமிழர் மாநாட்டில் இந்த ஒப்பந்தம் ஈழத் தமிழருக்கு கேடு விளைவிக்கக்கூடும் என்பதால் அப்படி ஒரு ஒப்பந்தம் செய்யப்படக்கூடாது என நான் வலியுறுத்தியதுடன், அங்கு அது தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சரிடம், ஈழத் தமிழரின் நலன் குறித்து அனைத்து கோணத்திலும் பேச்சு நடத்தினேன். இப்பேச்சு மிகவும் திருப்தி தரும் ஒன்றாக அமைந்திருந்தது. எனவே இது குறித்து கவலை கொள்வதற்கு எதுவும் இல்லை. சிறீலங்காவிற்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பேச்சு கடந்த ஆட்சிக் காலத்திலேயே, ஆரம்பித்தது. இதைக் கண்டித்து நான் சிறையிலிருந்தபடியே அப்போதைய பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதமெழுதியிருந்தேன். எனவே இப்போது கூட அவ்வகையான ஒப்பந்தம் ஏற்படும் என்ற கவலை எனக்கில்லை.

இதேவேளை, ஈழத் தமிழர் பிரச்சினையில் ஆகட்டும் அல்லது இன்றைய யுத்த சூழ்நிலையில் ஆகட்டும் இந்திய அரசை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என, சிறீலங்கா அரசு நினைக்குமானால் அம்மாதிரியான எண்ணம் ஈடேறாமல் தடுக்க நான் தொடர்ந்தும் பாடுபடுவேன். ஈழத் தமிழருக்கு விரோதமாக இந்தியா செயற்படாது என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. இவ்வாறு வைகோ அவர்கள் தெரிவித்தார்.

கும்பகோணம் தீ விபத்து நாளை 'பள்ளிக்கூட பாதுகாப்பு தினமாக' அறிவிப்பு



கும்பகோணம் தீ விபத்து நடந்த ஜூலை 16ம் திகதியை ஆண்டு தோறும் 'பள்ளிக்கூட பாதுகாப்பு தினமாக' கடைப்பிடிக்கும்படி இந்தியாவின் அனைத்து முதலமைச்சர்களுக்கும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜுன் சிங் கடிதம் எழுதி உள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது, கும்பகோணத்தில் 94 பள்ளி குழந்தைகள் பலியான தீ விபத்து சம்பவம் ஒட்டு மொத்த தேசத்தின் மனசாட்சியை உலுக்கி விட்டது. இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடந்து விடாமல் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி குழந்தைகளை பாதுகாக்க ஆசிரியர்களின் பொறுப்பு, பள்ளி கட்டடத்தின் அமைப்பு மற்றும் மதிய உணவு திட்டம் ஆகிய 3 அம்சங்களில் நாம் சிறப்பு கவனத்தை செலுத்த வேண்டும். கும்பகோணம் தீ விபத்து நடந்த ஜூலை 16ம் திகதியை பள்ளிக்கூட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தினமாக அனைத்து மாநிலங்களும் கடைபிடிக்கலாம். அன்றைய தினம் ஒவ்வொரு பள்ளியிலும் மேற்கூறிய 3 அம்சங்களும் எந்த அளவுக்கு கடை பிடிக்கப்படுகின்றன என்பதை ஆய்வு செய்து, குறைகளை நிவர்த்தி செய்யலாம்.

மாணவர்களின் பாதுகாப்பையும், சுகாதார நலனையும் மேம்படுத்த கீழ்காணும் யோசனைகளை பின்பற்றலாம்...

பள்ளிக்கூட நேரத்தில் மாணவர்களின் பாதுகாப்புக்கும், அவர்களுடைய நடவடிக்கைகளுக்கும் ஆசிரியர்களே பொறுப்பு என்பதை உணர்த்த வேண்டும். அவசர காலங்களில் மாணவர்களை பாதுகாப்பது எப்படி என்பதை ஆசிரியர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை பள்ளிக் கூடத்தில் வைத்திருக்கக் கூடாது. மதிய உணவு சமைப்பதற்கு தேவையான எரிபொருளை பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டும். அவசர நேரங்களில் மாணவ, மாணவிகள் வெளியேறுவதற்கு பள்ளிக் கூடங்களில் தகுந்த வாசல்கள் இருக்க வேண்டும். தீயணைப்புக்கு தேவையான அளவு தண்ணீர் மற்றும் மணல் இருக்க வேண்டும். பள்ளி குழந்தைகளுக்கு தூய்மையான குடிநீர் வழங்க வேண்டும். மதிய உணவுக்கு பயன்படுத்தப்படும் உணவு தானியங்கள் சுகாதாரமான இடத்தில் சேமித்து வைத்து இருக்க வேண்டும். மதிய உணவு சமைப்பது, பரிமாறுவது ஆகியவற்றிலும் சுகாதாரம் கடுமையாக கடை பிடிக்க வேண்டும். சமைக்கப்பட்ட உணவை குழந்தைகளுக்கு பரிமாறுவதற்கு முன்பு அந்த உணவு சாப்பிட தகுந்ததுதானா என்பதை தீர்மானிக்க பெரியவர்கள் அதை பரிசோதனை செய்ய வேண்டும்.

மேற்கூறிய அம்சங்களை அமல்படுத்த மாநில அரசின் மேலிட மட்டத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அந்த உத்தரவு முறையாக அமலாகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இவ்வாறு அர்ஜுன்சிங் தனது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

2008ல் தாய்வான் தாக்குதலுக்கு உள்ளாகுமா ?

தாய்வான் சுதந்திரத் தனிநாடு என்பதை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசியல் சட்டத்தை 2008ம் ஆண்டு கொண்டு வர இருக்கிறது. இந்தப் புதிய அரசியல் சட்டத்தை கொண்டு வருவதில் தாய்வான் அரசு பிடிவாதமாக இருந்தால், அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்துவோம் என்று சீனா எச்சரித்துள்ளது.

"தாய்வான் 2008ம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் கொண்டு வருவது தனிநாடு பிரகடனத்துக்கு இணையானது. தாய்வான் நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஆயுதங்களையும் வாங்கிக் குவித்து வருகிறது. அதன் பாதுகாப்பு ஆயுதங்களில் இல்லை. சீனாவின் ஒரு அங்கம் தான் தாய்வான் என்று உறுதிமொழி அளிப்பதில் தான் இருக்கிறது" என்று சீன அமைச்சர் வாங்க் சைஜி கூறி இருக்கிறார்.

சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

ஈராக்

6 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது ஒரே நேரத்தில் தாக்குதல்

(02.08.04)

ஈராக்கில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு படையினர் மீது தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஈராக்கில் 6 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது ஒரே நேரத்தில் கார் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 15 பேர் பலியானார்கள், ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்தனர். நேற்று மாலையில் பிரார்த்தனை நடந்தபோது ஒரே நேரத்தில் பாக்தாத் நகரில் உள்ள 4 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும், மொசுல் நகரில் உள்ள 2 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் கார் குண்டு தாக்குதல் நடந்தது.

முதல் குண்டு தாக்குதல் கரடா என்ற இடத்தில் உள்ள ஆர்மீனியன் சர்ச் மீது நடந்தது. இந்த தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் கத்தோலிக்க சிரியன் சர்ச் மீது 2வது தாக்குதல் நடந்தது. 2 தாக்குதல்களையும் தற்கொலை படையினர் திட்டமிட்டு நடத்தி இருந்தனர். இந்த தாக்குதல்கள் பற்றி தகவல் கிடைத்ததும் போலீசாரும், தீயணைப்பு படையினரும் சம்பவ இடங்களுக்கு விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். 3வது தாக்குதல் மொசுல் என்ற நகரத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ கோவில் மீது நடைபெற்றது. இதில் ஒருவர் பலியானார். பலர் படுகாயம் அடைந்தனர். இதே போல மொசுல் நகரில் மேலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் கார் குண்டு தாக்குதல் நடந்தது. இதில் பலியானவர்கள் எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால் பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாக்தாத் நகரில் `கால்டீன் சர்ச்' என்ற கிறிஸ்தவ கோவிலில் நேற்று மாலை பிரார்த்தனை முடிந்து பக்தர்கள் வெளியே வந்து கொண்டிருந்த போது கார்கள் நிறுத்தப்பட்ட பகுதிக்குள் திடீரென ஒரு கார் வெடித்தது. இதில் 12 பேர் உடல் சிதறி செத்தனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். 6 வதாகவும் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் கார் குண்டு தாக்குதல் நடைபெற்றது. ஆனால் பலியானவர்கள், காயம் அடைந்தவர்கள் பற்றிய விவரம் தெரியவில்லை.

ஈராக் நாட்டில் 8 லட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பாக்தாத் நகரில் வசிக்கிறார்கள். அவர்கள் மீது தான் கடந்த சில வாரங்களாக இப்படிப்பட்ட தாக்குதல்களை ஈராக்கியர்கள் நடத்தி வருகிறார்கள். ஈராக்கில் உள்ள இஸ்லாமியர்கள் குறிப்பாக சன்னி மற்றும் ஷியா பிரிவினருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே மோதலை உருவாக்க திட்டமிட்டு இந்த தாக்குதல் நடத்தப்படுவதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒமர் உசேன் என்ற தொழிலாளி கூறினார்.

இதுஇவ்வாறிருக்க, ஈராக் காவற்துறையில் இணைபவர்கள் மீது தாக்குதல் நடாத்திவரும் திவிரவாதக் குழு கடந்த வாரம் இவ்வாறு காவற்துறையில் இணைய வந்தவர்கள் மீது தாக்குதலை நடாத்தியுள்ளது. ஈராக்கின் தலைநகர் பக்தாத்திற்கு அருகிலுள்ள டியாலா மாநிலத்தின் பகாபா நகரில் இடம்பெற்ற இப்பாரிய தாக்குதலில் சுமார் 70 பேர் வரை கொல்லப்பட்டு 60 பேர் வரை படுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

பாரிய அங்காடி அமைந்துள்ள இப்பகுதியில் காவற்துறை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு காவற்தறைக்கு ஆள்களை எடுக்கும்பணி கடந்த 28ம் திகதி நடைபெற்றுக்கொண்டிருந்தது. காவற்துறையில் இணைந்துகொள்பவர்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்த வேளை, தீடீரென அப்பகுதிகுள் வந்துநின்ற கார் ஒன்று வெடித்து சிதறியுள்ளது. இதன்போது அவ்வழியால் வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றும் தாக்குதலில் அகப்பட்டுக்கொண்டது. இதனால் அதில் பயணம் செய்த 21 பேர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர். அத்துடன் காவற்துறையில் இணைய வந்திருந்தவர்களும் அப்பகுதியில் நின்றவர்களும் என சம்பவத்தின்போது 70 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமான கட்டடங்கள் பாரிய சேதத்திற்கு உள்ளாகியது. ஈராக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தாக்குதல்களில் கடந்தவாரம் இடம்பெற்ற பாரிய அழிவை ஏற்படுத்திய தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல ஹாலிவூட் நடிகரும் கலிபோர்னியா மாநில முதல்வருமான அர்னால்ட் சிவாஸ்நேகர் தனது 57வது பிறந்தநாளைக் கடந்த 30ம் திகதி வெள்ளியன்று கொண்டாடினார். இதனை முன்னிட்டு சிறப்பு தபால் தலை ஒன்று கலிபொர்னியாவில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஈழப் பிரச்சினை தீர்வு - இந்தியாவின் பங்கு

இலங்கை பிரச்சினையில் இந்திரா காந்தியின் அணுகுமுறையை டில்லி கடைப்பிடிக்க வேண்டுமென தமிழகத்திலிருந்து வெளிவரும் முன்னணி நாளேடான `தினமணி' வலியுறுத்தியுள்ளது. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையில் ஒவ்வொரு கட்டத்திலும் உரிய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழக கட்சிகளின் பிரதிநிதிகளை கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றையும் இந்திய மத்திய அரசாங்கம் அமைப்பது உசிதமான காரியம் என்றும் அப்பத்திரிகை ஆலோசனை தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை `ஈழப் பிரச்சினை தீர்வு, இந்தியாவின் பங்கு' என்ற தலைப்பில் தினமணி ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்திருப்பதாவது... இலங்கையில் இரண்டாண்டு காலம் நடைபெற்ற ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி மூன்று முனைகளில் சாதனைகளைப் படைத்தது. முதலில் உள்நாட்டுப் போர் நின்றது. அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை பிறந்தது. அதையும் அடுத்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஈழத் தமிழர்களுக்கான மாநில சுயாட்சிக் கோரிக்கையும் கொள்கை ரீதியாக அங்கீகாரத்தைப் பெற்றது.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் கூட்டணி ஆட்சி வந்த பிறகு ஈழத் தமிழரின் நம்பிக்கை இறங்கு முகத்துக்கு உள்ளாகியது. அதற்கு முக்கிய காரணம், பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி. இக் கூட்டணியில் இடம்பெற்றிருப்பதுதான். அப்படியிருந்தும் கூட ஈழப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடருமாறு செய்வதில் நோர்வே சிறப்பான அக்கறை காட்டி வருகிறது. இத்தனைக்கும் கடந்த காலத்தில் பேரினவாத சிங்கள அரசியல் கட்சிகளிடம் நோர்வே சமரசத் தூதர் வாங்கிக் கட்டிக் கொண்ட வசவுகள் கொஞ்சநஞ்சமல்ல. ஜனாதிபதி கூட நோர்வே தூதர்களை ஒரு காலகட்டத்தில் வேண்டா வெறுப்புடன் நடத்தியதுண்டு. இவ்வளவுக்கும் இடையில் சோர்வடையாது சமரசத் தூதில் நோர்வே ஆற்றி வரும் அரும்பணி அபூர்வமானது.

இப்பொழுதும் கூட இரு தரப்புக்குமிடையே பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கச் செய்வதற்காக நோர்வேயின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஓயாத முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். கடந்த திங்களன்று கிளிநொச்சியில் புலிகளின் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசிய நோர்வே தூதர், அடுத்த நாள் அதிபருடன் கலந்து ஆலோசித்திருக்கிறார். ஆயினும் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனினும், போர் நிறுத்த உடன்பாட்டை நீடிப்பதற்கு இரு தரப்பும் சம்மதம் தெரிவித்திருப்பது நிம்மதியை அளிக்கக் கூடியது.

இந்நிலையில் இப் பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்படுமாறு செய்வதில் இந்தியா சிரத்தை காட்டுவது அவசியம். ஏனெனில் இலங்கையில் அமைதியும் உறுதிப்பாடான நிலையும் நிலவுவது பாரதத்தின் பாதுகாப்பு நலன்களுக்கு உகந்தது. அது மட்டுமன்றி ஈழத் தமிழர்கள் பிரச்சினையை ஏதோ வெளிநாட்டு மூன்றாவது தரப்புப் பிரச்சினை போல இந்தியா கருதுவதற்கில்லை. ஈழத் தமிழர் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழர் ஆகிய இரு தரப்பில் 30 இலட்சம் மக்களின் வாழ்வுரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. இவர் அரசியல் ரீதியாக இலங்கைக் குடிமக்களாக இருந்த போதிலும், மொழி-கலாசார அடிப்படையில் இந்தியாவுடன் சம்பந்தமுடையவர்கள். எனவே தான், `இலங்கையின் இறையாண்மைக்கு ஊறு ஏற்படாத வகையில், இலங்கைத் தமிழரின் வாழ்வுரிமை மற்றும் சமத்துவக் குடியுரிமை, கலாசாரப் பாதுகாப்பு உரிமைகளுக்கு உத்தரவாதம் செய்யக்கூடிய விதத்தில் இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்' என்ற முந்தைய வாஜ்பாய் அரசின் தேசியக் கொள்கையையே மன்மோகன் சிங் அரசின் கொள்கையாகவும் நீடிக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் திட்டவட்டமான கொள்கை அனுசரிக்கப்பட்டது. இலங்கையின் ஸ்திரத்தன்மையில் அக்கறை இருப்பது போலவே இலங்கைத் தமிழரின் வாழ்வுரிமையிலும் அழுத்தமான சிரத்தை உண்டு. ஒன்றுக்காக இன்னொன்றைப் பலியிட முடியாது என்ற கண்டிப்புக் காட்டப்பட்டது. அதே கொள்கை மீண்டும் அழுத்தமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தாய்த் தமிழகத்து மக்கள் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறார்கள். எனவே இலங்கைக் கூட்டாட்சியில் தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்கு மாநிலம் பூரண சுயேச்சை உரிமையுடையதாக அமையுமாறு செய்வதில் பாரதம் ஆக்கபூர்வமான பங்களிப்பை ஆற்ற வேண்டும். இப் பிரச்சினையில் ஒவ்வொரு கட்டத்திலும் தக்க ஆலோசனையைப் பெறுவதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள தமிழகக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றையும் மத்திய அரசு நிறுவிக் கொள்வது உசிதமானது.

நீலவாணி எண்டர் பிறைஸ்

இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு

பேர்ண் மாநகரில்

மாபெரும் மலிவு விற்பனை

உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை	பழைய விலை	புதிய விலை
உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg	7.50Fr	6.90Fr
உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg	9.00Fr	6.90Fr
இலங்கை கீரை வகைகள் 1Kg	9.00Fr	6.90Fr
மரவள்ளி	3.80Fr	3.00Fr
இராச வள்ளி	8.00Fr	5.50Fr
வெண்டி, புடோல், பூசணி, முருங்கை	5.50Fr	3.80Fr
உள்ளி	3.00Fr	1.75Fr
சின்ன வெங்காயம்	8.00Fr	5.50Fr
தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய்	9.00Fr	7.35Fr
நெஸ்டோமோல்ட்	6.90Fr	5.50Fr
விவா	8.90Fr	6.90Fr
கோர்லிக்ஸ்	6.90Fr	5.90Fr
மைலோ	6.90Fr	5.90Fr
நெல்லி ரசம் (தோலகட்டி)	6.50Fr	5.40Fr
பழரச வகைகள்	6.50Fr	5.40Fr
லெமன் ப.ப்	2.50Fr	1.25Fr
டி டைம்	3.50Fr	2.50Fr
கிப்ட் செலக்ஸ்ஸன்	6.50Fr	4.80Fr
ஃபமிலி ஷசேட்மன்ட்	4.80Fr	3.50Fr
கிறிம் கிறேக்கர்	2.50Fr	1.70Fr
சீனி சம்பல்	5.50Fr	4.20Fr
ஊறுகாய் வகைகள்	5.50Fr	4.20Fr
பிரியாணி மிக்ஸ்	5.50Fr	4.20Fr
ஜாம் வகைகள்	3.90Fr	3.10Fr
தேங்காய் பால் பவுடர் 1 Kg	13.50Fr	9.60Fr
தேங்காய் பால் பவுடர் 350g	5.95Fr	4.50Fr
தேங்காய் பால் பவுடர் 150g	3.15Fr	2.10Fr
மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg	2.50Fr	1.90Fr
புழுங்கல் அரிசி 5Kg	12.50Fr	9.30Fr
புழுங்கல் அரிசி 1Kg	2.50Fr	1.90Fr

உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை	பழைய விலை	புதிய விலை
சம்பா 5 Kg	13.50 Fr	9.30Fr
சம்பா 1Kg	2.50Fr	1.90Fr
பசுமதி அரிசி 5Kg	12.00Fr	7.50Fr
U.S.A அரிசி 25 Kg	35.00 Fr	28.50Fr
மைசூர் பருப்பு 2Kg	5.50Fr	3.50Fr
நல்லெண்ணெய் 375 Ml	6.90Fr	4.90Fr
750 Ml	11.90Fr	9.40Fr
வறுத்த அரிசி மா 1 Kg	3.90Fr	2.90Fr
யாழ்.மிளகாய்தூள் 900g	9.60Fr	7.90Fr
கிங்ஸ், லீலா, சூரியா 500g	5.50Fr	4.30Fr
அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg	12.90Fr	9.90Fr
உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg	9.50Fr	8.00Fr
உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg	14.00Fr	11.00Fr
உடன்கோழி	6.50Fr	5.50Fr
மைசூர் பருப்பு 500g	1.90Fr	1.20Fr
உழுத்தம் பருப்பு 2kg	5.90Fr	4.50Fr
உழுத்தம் பருப்பு 500g	1.90Fr	1.20Fr
கடலைப் பருப்பு 2kg	5.90Fr	4.50Fr
கடலைப் பருப்பு 500g	1.90Fr	1.30Fr
கடலை 2kg	6.90Fr	4.50Fr
கடலை 500g	1.90Fr	1.30Fr
பயற்றம் பருப்பு 2kg	6.90Fr	4.50Fr
பயற்றம் பருப்பு 500g	1.90Fr	1.30Fr
உழுத்தம் பருப்பு கோதுடன் 2kg	5.90Fr	4.50Fr
உழுத்தம் பருப்பு கோதுடன் 500g	1.90Fr	1.20Fr
அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா 5 kg	14.90Fr	12.90Fr
மீன் ரின் (இலங்கை)	2.70Fr	2.00Fr
பழப்புளி 400g	2.30Fr	1.50Fr
நெக்டோ 1.5 ட	3.50Fr	2.50Fr
நெக்டோ 375 ml	2.50Fr	1.50Fr
ஆடு, மாடு, கோழி கறிக்கூடு	5.90Fr	4.90Fr
ரொட்டி	4.00Fr	3.00Fr

மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்

இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள் அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம் மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு

வாருங்கள்! நுகருங்கள்!
நல் ஆதரவைத் தாருங்கள்!!!

Bubenbergplatz 8 - 3011 bern
Tel: 031 -312 17 50
Natel: 079-300 37 49
Fax: 031 - 312 17 49

பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

SW-70

யார் இந்தப் புளட் மோகன்?

கடந்த வாரம் கொழும்பு பம்பலப்பிட்டியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட புளட் மோகன் என்கிற கந்தையா யோகராஜா, என்னதான்

சிறீலங்கா பாதுகாப்புத் தலைமைப் பீடம் மறுத்தாலும் சிறீலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன். சேர்ந்து இயங்கியவர், கிழக்கில் நடந்த பல படுகொலைகளுக்கு காரணமாக இருந்தவன் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

1983ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியா சென்ற அவன் இந்திய அரசு புளொட் இயக்கத்தக்கு இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சியில் முதலாவது அணியில் பயிற்சி எடுத்துவன். 1994 ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் ஒரத்தநாடு பகுதியில் இருந்த புளொட்டின் வதை முகாமான -பி-முகாமில் இயங்கிய உளவுப் பிரிவில் கடமையாற்றிய இவன் அச்சுவேலியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் மற்றும் திருமலையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் உட்பட 12 பேரின் படுகொலைக்கு காரணமாக இருந்தவன்.

ஆரம்பத்தில் புளொட்டின் உட்கொலைகள் மற்றும் சித்திரவதைகளுக்குக் காரணமாயிருந்த சங்கிலி என்கிற கந்தசாமிக்கு விசுவாசமாக இருந்த இவன், கந்தசாமிக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட 1985 காலப்பகுதியில் 6 மாத காலம் புளொட் அமைப்பின் செயற்பாடுகளில் இருந்து நீக்கப்பட்டு பின்னர் மாணிக்கதாசனால் அவரது அணியில் இணைக்கப்பட்டான்.

1988ம் ஆண்டு பிற்பகுதியில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் செட்டிக்குளம் பகுதியில் மாணிக்கதாசனுடன் தங்கியிருந்த அவன், ஈரோஸ் மத்தியகுழு உறுப்பினர் சதா சகாயம் சில்வா மற்றும் அஜித், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ஐயா உட்பட 6 பேரை கொலை செய்திருந்ததார். இதில் மாணிக்கதாசன் பாலியல் தொடர்பு வைத்திருந்த ஒரு பெண்ணின் கணவரும், அடக்கம். இந்தக் காலப்பகுதியில் மாணிக்கதாசனுடன் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டதாக இவன் மீது விமர்சனங்கள் எழுந்ததை அடுத்து இவன் மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டான். 1988ம் ஆண்டு மார்ச் மாதம் மட்டக்களப்புக்கச் சென்ற மோகன் இந்திய இராணுவத்துடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்காக அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று காட்டிக்கொடுத்தான்.

1988ம், 89ம் ஆண்டு காலப்பகுதிகளில் மட்டக்களப்பு புதூர் விபுலானந்தா வீதியில் நான்காம் குறுக்குத் தெருவில் இந்திய இராணுவத்தின் உதவியோடு முகாம் அமைத்துத் தங்கியிருந்த மோகன் அவ்வீட்டில் வைத்து மட்டும் 300க்கும் அதிகமான தமிழ் மக்களை படுகொலை செய்தான். இந்தப் படுகொலைகளை அம்பலப் படுத்தியத்தற்காக 1989ம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாட்டாளரான கத்தோலிக்க மதகுரு அருட்திரு சந்திரா பெர்னான்டோ மோகனால் படுகொலைசெய்யப்பட்டார்.

இதேபோன்று மோகனுக்க கப்பம் கொடுக்க மறுத்த பேராசிரியர் நுஃமானின் சகோதரியும் அவரது கணவனும் சிற்றூர்தி ஒன்றில் வைத்துப் படுகொலை செய்யப்படனர். இப்படுகொலைச் சம்பவங்களில் மோகனுக்கு உதவியாக சிறீலங்காப்படைப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவரான முனாஸ், கேணல் ஸக்கி ஆகியோர் செற்பட்டனர். 1988க்கும் 1994க்கும் இடைப்பட்ட காலத்தில் மொத்தம் அறுநூற்று இரண்டு பேரை தேசவிரோதி மோகன் நேரடியாகவே படுகொலை செய்துள்ளான். இதன் காரணமாகவே சிறீலங்கா அரசு மோகனை இராணுவப்புலனாய்வுப் பிரிவு உறுப்பினராக்கி கப்டன் தரப் பதவியும் வழங்கியிருந்தது.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு பற்பொடிக்கம்பனி, சிறைச்சாலை முகாம்களிலே சிறீலங்காப் படைப்புலனாய்வுத் துறையின் முனாஸ், ஸக்கி ஆகியோருடன் இணைந்து வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், சித்தாண்டி, கொக்கட்டிச் சோலை ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை துரோகி மோகன் படுகொலை செய்திருந்தான். 1990ம் ஆண்டு கிழக்கு மகாணத்தை சேர்ந்த இப்ராகிம் என்ற வைர வியாபாரியை கொலை செய்து அவரிடமிருந்து 5 கோடி ரூபா பெறுமதியான வைரங்களை கைப்பற்றியதை அடுத்து அதை பங்கு போடுவதில் மாணிக்கதாசனுடன் ஏற்பட்ட பிரச்சனையில் மோகன் புளொட் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டான்.

இதன் பின்னர் நாவற்குடாப்பகுதியில் கிராம சேவகர் திருமதி செபமாலை அவரது சகோதரி கர்ப்பிணித்தாயான திருமதி குமாரயோகரத்தினம் ஆகியோரை நடுவீதியில் வைத்துச் சுட்டுக்கொன்றதுடன், மட்டக்களப்பு இலங்கை வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் இலட்சுமிகாந்தனை சுட்டுப்படுகொலை செய்துள்ளான்.

இவற்றை விடவும் எம்.சீ.எம் விற்பனை நிலைய உரிமையாளரும் அவரது மகனும் மோகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், கொக்கட்டிச் சோலை படுகொலைச் சம்பவத்தில் தனக்கு எதிராக சாட்சி சொன்ன கிராம சேவையாளர் கே.விஜயரத்தினம் மோகனதாஸ் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டார்.

இதேபோன்று விளாவெட்டுவானில் இரண்டு அப்பாவித்தமிழ் இளைஞர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று குற்றம் சாட்டி அவர்களுடைய தலைகளைத் துண்டித்து மற்றொரு இளைஞனின் தோளில் வைத்து கொண்டு செல்ல வைத்துள்ளான். இவற்றைவிடவும் தேசவிரோதி புளொட் மோகன், இராணுவ புலனாய்வு அதிகாரி முனாஸ் ஆகியோர் இணைந்து மட்டக்களப்பு பூம்புகார் மாடிக்கும் முனை, வயிரவன் கோயிலடியில் பெருமளவான தமிழ்மக்களை இரவு வேளைகளில் ரயர்கள் போட்டு எரித்துள்ளான். அவ்வாறு எரித்துக் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை.

1990ம் ஆண்டு 9ம் மாதம் 5ம் நாள் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் கைதுசெய்யப்பட்டிருந்த 158 பொதுமக்களும் இவர்களாலேயே வாழைச்சேனை கொழும்பு வீதியில் உள்ள நாவலடி நாலாம் கட்டைப்பகுதியில் வைத்து வெட்டிக்கொல்லப்பட்டனர். இதேபோன்று சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி, ஆகிய பகுதிகளில் பிடிக்கப்பட்ட 184 மக்களில் பெண்கள் சத்துருக்கொண்டான் முகாமுக்குப் பின்னால் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியும் கண்கள் தோண்டப்பட்டும் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர். இச்செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டவன் தேசவிரோதி புளொட் மோகன், இதே காலப்பகுதியில்த்தான் வெள்ளைவான் அச்சுறுத்தலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்திருந்தது.

மட்டக்களப்பு கரையாக்கன் தீவில் தான் கேட்ட கப்பப் பணத்தில் 10 ரூபா குறைந்ததற்காக ஒரு பெண்ணை தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர் என்று குற்றம் சாட்டி சுட்டுக்கொன்றுவிட்டு அப்பெண்ணின் சடலத்தை வீதியில் கட்டி இழுத்துச் சென்றது மோகன் என்ற மிருகத்தின் கொலைவெறிக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

இவற்றை விடவும் தேசவிரோதி மோகனால் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர். எல்லாவற்றையும் விட பெருமளவான தமிழ் இளைஞர்கள் பணப்பறிப்புக்காக பிடிக்கப்பட்டு அவர்கள் பணம் செலுத்தத் தவறினால் அவர்களை தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் என்று குற்றம் சாட்டி சிறீலங்காப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைத்து அந்த இளைஞர்கள் சிறைகளில் வாடவும், உயிர்களை இழக்கவும் தேசவிரோதி புளொட் மோகன் காரணமாக இருந்துள்ளான்.

குறிப்பாக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஓரிரு சம்பவங்களிற்காக அமைக்கப்பட்ட சிறீலங்கா அரசாங்கத்தின் விசாரணைக்குழுக்கள் என்பன புளட் மோகனை மேற்படி படுகொலைச் சம்பவங்களிற்கான பொறுப்பாளராக சுட்டிக்காட்டியிருந்தன.

மொத்தத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் சிறீலங்காப் படைகளால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் நேரடியாகப் பங்குபற்றியிருந்த மோகன் கொல்லப்பட்டதானது ஈழப்போராட்ட வரலாற்றில் பதிவுக்குள்ளாக்கப்படும் ஒரு சம்பவமாக அமையும்.

– காண்டீபன் –

ஆரம்பத்தில் புளொட்டின் உட்கொலைகள் மற்றும் சித்திரவதைகளுக்குக் காரணமாயிருந்த சங்கிலி என்கிற கந்தசாமிக்கு விசுவாசமாக இருந்த இவன், கந்தசாமிக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட 1985 காலப்பகுதியில் 6 மாத காலம் புளொட் அமைப்பின் செயற்பாடுகளில் இருந்து நீக்கப்பட்டு பின்னர் மாணிக்கதாசனால் அவரது அணியில் இணைக்கப்பட்டான்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை



சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன்னுக்கு தேசியத் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள் தெரிவித்த நிலைப்பாட்டிலிருந்து தாங்கள் எந்தவித மாற்றங்களையும் செய்யவில்லையென விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசனைச் சந்தித்து பேச்சுக்களை நடத்திய தன் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பதிலளிக்கையில் தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி:– பேச்சுகள் எப்போது ஆரம்பமாகும் என்று ஓரளவுக்கு கூற முடியுமா?

தமிழ்ச்செல்வன்:– *எங்களைப் பொறுத்த வரையில் எங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவாக்கியிருக்கிறோம். அதாவது இடைக்கால நிர்வாகசபை பற்றிப் பேசுவது, அதைப் பற்றிய முடிவுகள் எடுப்பது, அதனை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகப் பேச்சுகளைத் தொடங்குவது, யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவே இந்தச் சந்திப்பில் முக்கியமாகப் பேசப்பட்டது.*

கேள்வி:– அரசு எப்போது பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் என்று ஏதாவது தகவல் அனுப்பியிருந்ததா?

தமிழ்ச்செல்வன்:– *அரசிடம் இருந்து நோர்வேத் தரப்பினர் எந்தத் தகவல்களையும் கொண்டு வரவில்லை. ஏற்கனவே, எமது தேசியத் தலைவரை நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் சந்தித்தித்தபொழுது நாங்கள் முன்வைத்த நிலைப்பாடுகளில் எந்த மாற்றங்களையும் நாம் ஏற்படுத்தவில்லை. அதில் நாங்கள் மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கின்றோம் என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். ஆகவே, அரசுடன் நோர்வேத் தரப்பினர் பேசிய பின் அரசினுடைய நிலைப்பாட்டை அறிந்த பின்னர் தான் தங்களுடைய நிலைப்பாட்டை நோர்வேத் தரப்பினர் வெளிப்படுத்துவார்கள் என்று நம்புகின்றோம்.*

கேள்வி:– இந்தச் சமாதான முயற்சிகளில் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து நீங்கள் அதிருப்தி தெரிவித்திருப்பதும் அல்லது உங்கள் கருத்துகளைத் தெரிவித்திருப்பதும் மாத்திரமே தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்படியே நிலைமை எவ்வளவு காலத்துக்குப் போகப் போகிறது?

தமிழ்ச்செல்வன்:– *அனுசரணையாளர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் எங்களுடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. ஆகவே, அவற்றை நாங்கள் தெளிவாக்கி வருகின்றோம். எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலைகளுக்கேற்ப எங்கள் தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் என்று தான் நாம் நம்புகின்றோம்.*

கேள்வி:– போர் நிறுத்த உடன்பாட்டின் நிலைமை இப்போது எப்படியிருக்கிறது?

தமிழ்ச்செல்வன்:– *யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பொறுத்த வரையில் அது தற்பொழுது நடைமுறையில் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலே புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக் குழுக்களுடைய நடவடிக்கை தான் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை கேள்விகுறியாக்கி நிற்கின்றது என்பதை நாங்கள் கண்காணிப்புக் குழுத் தலைவரிடமும் இன்று துணை வெளிவிவகார அமைச்சரிடமும் அவர்களது குழுவினருக்கும் சுட்டிக்காட்டியுள்ளோம்.*

கேள்வி:– இந்த நிலைமையில் மிக விரைவில் ஏதாவது மாற்றம் ஏற்படும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

தமிழ்ச்செல்வன்:– *எங்களைப் பொறுத்த வரையில் தற்பொழுது நடந்த சம்பவங்கள் உங்களுக்குத் தெரியும். அவர்களுக்குள்ளேயே அதாவது ஆயுதக்குழுவாக தேசவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மத்தியில் மோதல் உருவாகியுள்ளது. அதனுடைய வெளிப்பாடாக கொட்டாவ சம்பவத்தைப் பார்க்கலாம். அவர்கள் மத்தியில் முரண்பாடுகள் தோன்றி மோதல்கள் ஏற்பட்டு அவர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியான சூழல் உருவாகிக் கொண்டிருக்கின்றது என்பதை இன்றும் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.*

கேள்வி:– கிழக்கு மாகாணத்தில் நாளாந்தம் கொலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யுத்த காலத்திலும் பார்க்க அங்கே வன்செயல்கள் நடைபெறுகின்றது. இதனை நிறுத்துவதற்கு அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்தபாடாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் இதனை நிறுத்த வேண்டிய பொறுப்பிருக்கின்றது. இந்த நிலைமையில் உங்களுடைய நடவடிக்கைகள் எந்த வகையில் வெற்றி அளித்திருக்கின்றன?

தமிழ்ச்செல்வன்:– *எங்களைப் பொறுத்த வரையில் படைத்தரப்பினுடைய ஆதரவு இல்லாமல் அங்கு ஆயுதக்குழுக்கள் செயற்படுவது கஷ்டமான காரியம். ஏனெனில், கடந்த இரண்டரை வருட காலங்களுக்குள் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் தான் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால், அண்மைக் காலத்தில் புதிதாக தோன்றியுள்ள இந்த ஆயுதக்குழுக்களுடைய நடவடிக்கை நிச்சயமாகப் படைத்தரப்பின் ஆதரவோடு தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நடவடிக்கைகள் அங்கு ஒரு சுமுக நிலைமையை சீர் குலைத்து யுத்தநிறுத்த உடன்படிக்கையை கேள்விக் குறியாக்கி நிற்கின்றது.*

எனவே, இதற்குப் படைத்தரப்பின் ஆதரவு வழங்கும் போக்கை மாற்றி அமைக்க வேண்டும். விரைவில் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதை நாம் படைத்தரப்பிற்கும், அரசாங்கத்திற்கும் அனுசரணையாளர்கள் ஊடாக வலியுறுத்தி வருகின்றோம். எங்களைப் பொறுத்த வரையில் நாங்களும் இதைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான தீவிர கரிசனை கொண்டிருக்கின்றோம். எமது தலைமைப்பீடம் இது சம்பந்தமாக பல நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கின்றது.

கேள்வி:– விடுதலைப் புலிகள் தரப்பில் ஏதாவது விட்டுக் கொடுப்புகள் இருக்குமா?

தமிழ்ச்செல்வன்:– *விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை விட்டுக் கொடுப்பு என்ற சொற்பதம் பொருத்தமற்றது. நாம் எவ்வளவோ விட்டுக் கொடுப்புகளைச் செய்து விட்டோம். இனி எதனையும் செய்ய முடியாது. மக்கள் அந்தளவிற்கு களைப்படைந்து விட்டனர். மக்களின் தேவைகள், அபிலாசைகளுக்காகப் போராடி வருகின்றோம். அதனை அடையும் வரை எமது இலட்சியத்தை கைவிடமாட்டோம்.*

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்குப் புலனாய்வு விழிப்பு நிலை அவசியம்

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் இன்று உலகமயமாக்கப்பட்டுள்ளது. சர்வதேச அரங்குகளில் பேசப்படும் விடயமாகியுள்ளது. உலக நாடுகளின் அரசியல், பொருளாதார , இராணுவ ஆதிக்கம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துடன் பிண்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் கண்கள் தமிழீழம் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விழுந்துள்ளது. அதாவது, உலகின் புலனாய்வு நிறுவனங்கள், புலனாய்வுச் செயற்பாடுகளைப் புலிகள் இயக்கத்திற்கு மையமாகக் கொண்டும் முடக்கி விட்டிருக்கின்றன.

இந்தியாவின் புலனாய்வு நிறுவனம் - றோ, அமெரிக்காவின் உளவுத் துறை சீ.ஐ.ஏ, இஸ்ரேலின் இரகசிய சேவை மொசாட் சோவியத்தின் கே.ஜீ.பி, மற்றும் பாகிஸ்தான், நோர்வே, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் எனப் பல நாடுகளின் உளவாளிகள் புலிகள் இயக்கத்தை நிழல் போல் பின் தொடர்கின்றனர்.

இச் சர்வதேச உளவு நிறுவனங்கள், தமிழீழத்திலும் உளவு வலையினைப் பின்னத் தொடங்கியிருக்கின்றன. சர்வதேச நாடுகளின் புலனாய்வு நிறுவனங்கள் தமிழீழத்தில் தமது புலனாய்வுப் பணியை விஸ்தரிப்பதற்கான ஆட்சேர்ப்பு, புலம்பெயர்ந்து உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்களை மையமாகக் கொண்டிருக்கின்றது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை அந்தந்த நாடுகளின் புலனாய்வு நிறுவனங்கள் தங்களின் வலையில் சிக்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். நிர்ப்பந்தத்தின் காரணமாக பலர் மனம் மாறலாம், அல்லது பணம் அவர்களது மனதை மாற்றலாம்.

உயர் கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், கடந்த காலத்தில் புலிகள் இயக்கத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்கள், புலிகள் அமைப்பிலிருந்து விட்டோடியவர்கள் எனப்பலரை உள்வாங்கி புலமைப் பரிசில்கள், உதவிகள், சலுகைகள், வழங்கி கவர்ந்து புலனாய்வு ரீதியாகத் தயார் படுத்தி தனது உளவு நடவடிக்கைகளை விஸ்தரிக்கத் தமிழர் தாயகம் அனுப்பப்படுகின்றார்கள்.

இப்பந்தியில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் புலம் பெயர்ந்த அனைத்து மக்களையும் சந்தேகப் பார்வையுடன் பார்ப்பதாகக் கருதக் கூடாது. 99 வீதமானவர்கள், 1 வீதத்தினரின் செயற்பாடுகளால் மனம் நோகக் கூடாது.

உதாரணத்திற்கு அமெரிக்காவின் சிறிலங்காவிற்கான தூதரகத்தில் பணியாற்றும் பத்மினி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். அமெரிக்காவில் வசித்தார். அமெரிக்க உளவு நிறுவனம் அவரை உள்வாங்கி புலனாய்வு ரீதியாகத் தயார் படுத்தி, அமெரிக்காவின் சிறிலங்காத் தூதரகத்தில் பணிக்கமர்த்தியுள்ளது. அவர் வாங்கும் பணத்திற்கு அமெரிக்காவுக்கு விசுவாசமாகப் பணியாற்றுவார். தூதுவராலயங்கள் என்பது உலகின் அங்கீகரிக்கப்பட்ட புலனாய்வு இல்லங்கள் என்பது வெளிப்படையான உண்மை.

சர்வதேச புலனாய்வு நிறுவனங்களின் கரங்கள், தமிழர் தாயகத்தின் நீண்டிருக்கின்றன என்பதற்கு அமெரிக்காவின் உளவுத்துறை CIA யாழ் பொது நூல் நிலையத்தில் தகவல் மையம் அமைக்க முற்பட்டதானது நல்லதோர் உதாரணம். இந்திய இராணுவத்தினர் வவுனியாவில் கண்ணி வெடி அகற்றவென வந்திருக்கின்றார்கள். உண்மையில் இவர்கள் இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்ல. 'றோ'வைச் சேர்ந்தவர்கள் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

அதே போல யாழ்ப்பாணத்தில் `கலோ றெஸ்' என்றும் கண்ணி வெடி, மிதிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றியவர்களும் புலனாய்வு நிபுணர்கள் என்பது அவர்களின் நடவடிக்கைகள் மூலம் தெரியவந்திருக்கின்றன.

இவ்வாறாக உலகின் உளவு நிறுவனங்கள் தமது உச்சநிலை ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் நிலை நிறுத்திக் கொள்வதற்காக எங்கும், எதிலும் இரகசிய உளவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்காவும் , இந்தியாவும் ஏட்டிக்குப் போட்டியாகச் சிறிலங்காவைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகத் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டக் கோட்பாட்டைப் பயன்படுத்தி வருகின்றன. அதற்கு பகடைக் காயாக தமிழக் கல்வி மான்களும் புத்தி ஜீவிகளும் பயன் படுத்தப்படுகின்றனர் என்பதனை, உலகப் புலனாய்வு நிறுவனங்களின் அண்மைக்காலச் செயற்பாடுகளிலும் அறிய முடிகின்றது. இச் செயற்பாட்டுக்கு புலம் பெயர்ந்த சில தமிழர்கள் சோரம் போய் உள்ளதனையும் அறிய முடிகின்றது.

வெளிநாட்டுப் புலனாய்வுச் சக்திகள் தத்தமது நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழ் மக்களைத் தமக்குச் சாதகமான மனிதர்களாக மாற்றியமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன. இவ்வசப்படுத்தும் செயற்பாடுகள் தமிழருக்கும் தமிழீழத்துக்கும் தான் உரிய விடயம் அல்ல. இச் செயற்பாடானது உலகப் புலனாய்வுத் தந்திரத்தில் பாரம் பரியமாக இருந்து வருவது. வழமையான செயற்பாடு.

உலகப் புலனாய்வுச் சமூகத்தினருக்குத் தமிழர்களை விலைக்கு வாங்குவது சிறிய விடயம் தமது புலனாய்வுத் தேவைகளுக்காக தமிழர்களைப் பயன்படுத்திக் கொள்ள, தமிழர்களை மனோவியல் ரீதியில் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இவர்களிடம் அனைத்துப் பலமும் வளமும் இருக்கும். அதனால் தமிழர்களையும்

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

தமிழர்களின் மனோபலத்தைத் தகர்த்தெறியும் நோக்கில் உளவியல் யுக்திகளைக் கையாளும் அரச புலனாய்வாளர்கள்

முப்பது வருடகால ஆயுதப்போரில் தமிழர்களையும் தமிழர்படையினையும் ஆயுதரீதியில் வெற்றிகொள்ள முடியாத சிறிலங்கா அரசும், அரசபடையும் உளவியல் யுத்தத்தின் மூலம் தமிழர்கள் மனோபலத்தை தகர்த்தெறிந்துவிடுவதன் ஊடாக தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை அழித்துவிடலாம் என்று எண்ணி உளவியல் ரீதியான புலனாய்வு யுக்திகளை கையாளுகின்றன.

தமிழர்களின் சுதந்திர விடுதலைப்போராட்டம் ஆயுத பலமும் ஆட்பலமும் பற்றாக்குறையும் இருந்த போதிலும் நமது மனோபலத்தின் ஊடாக ஆயுதப்போரில் வெற்றி வாகை சூடியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தமிழர்களின் மனோபலத்தையும் உறுதியையும் நம்பிக்கையையும் தகர்த்தெறிந்துவிட்டால் ஆயுதரீதியில் தமிழர்களை வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் சிறிலங்கா அரசு முயல்கின்றது. அவ் உளவியல் செயற்திட்டத்தினை புலனாய்வு ரீதியில் மேற்கொள்ள அரசபீடம் காய் நகர்த்துகின்றது.

கற்பனைவளம் பொருந்திய புனைகதை நிபுணத்துவத்தைக் கொண்டு தமிழ் மக்களின் உணர்வுகளில் ஆழ ஊடுருவி அவர்களின் நாடி நரம்புகளில் கைவைத்து உணர்வுகளை பிரேத பரிசோதனை செய்து பெறப்படும் தகவல்களின் மூலம், மக்களின் மனங்களை தளம்பலடையச்செய்யக்கூடியவாறு மிகவும் நுணுக்கமாகவும் திட்டம் வகுத்து கருத்துக்களைத் தொடுத்து மக்கள் மத்தியில் கோமாளித்தனமான வதந்திகளைப் பரப்புவதன் மூலம் அவர்களின் தேசப்பற்றினையும் விடுதலையுணர்வையும் தகர்த்து விட சிங்கள அரச புலனாய்வுப்பணியகம் பொய்த்தகவல் பரப்புவதற்கென்றே தனிப்பிரிவென்றை உருவாக்கியிருக்கின்றது. தகவல்தொழில் நுட்பவிருத்தியின் பயனாய் இப்புலனாய்வுச் செயற்பாடு இலகுவாக்கப்பட்டிருக்கின்றது.

மக்கள் மனங்களில் அரும்பும் சில சுயநல கசப்புணர்வுக்கும் எதிர்ப்புணர்வுக்கும் மேலும் பொய்த்தகவலைப் பரப்பி எரியும் வீட்டிற்கு எண்ணை ஊற்றுவதுபோல் அதனை ஊதிப்பற்ற வைத்து உளவியல் போர் நடாத்தப்பட்டிருக்கின்றது.

அண்மையில் முளைவிட்ட பிரதேசவாதவுணர்வை தூண்டிவிட்டவர்களே சிறிலங்கா அரசபுலனாய்வுத் துறைதான். கருணாவின் சதிக்கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே பிரதேசவாத உணர்வைத் தூண்டும் வகையில் பல்வேறு விதமான துண்டுப்பிரசுரங்களும் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தென் தமிழீழப் போராளிகள் வட தமிழீழம் சென்று ஏன் போர்செய்ய வேண்டும் என்ற கேள்வியினை அரச புலனாய்வுத்துறையினரே முதலில் எழுப்பி, மக்கள் மத்தியில் பிரதேசவாத உளவியற் போரை தூண்டிவிட்டனர். எதோ கிழக்குத் தமிழ் மக்களில் அக்கறையும் அன்பும் கொண்டது போல், தமது செயற்திட்டத்தை உருவாக்கியது ஒரு உளவியற் போர் யுக்தியாகும்.

ஜேர்மனிக்கும் போலந்து நாட்டிற்கும் போர் ஆரம்பமானபோது ஜேர்மனியின் உளவு வேலைகளின் இரகசியப்பணியகம் போலந்து நாட்டு மக்களின் மனங்களை உடைத்தெறிய உளவியற்போர் யுக்தியைக் கையாண்டது.

ஜேர்மனிக்கும் போலந்து நாட்டிற்கும் இடையில் நடைபெற்ற போரில் கணவனோ மகனோ இறந்து விட்டதாக பல்லாயிரக்கணக்கான தந்திகளை போலந்து நாட்டுப் படைவீரர்களின் குடும்பங்களுக்கு ஜேர்மனிய உளவுத்துறை அனுப்பியது.

உண்மையில் தந்தியில் குறிப்பிட்டபடி மகன்மாரோ கணவன்மாரோ போர்க்களத்தில் மடியவேயில்லை. போலந்து நாட்டு மக்களின் மனங்களினை தளர்வடையச் செய்வதற்காக ஜேர்மனிய உளவுத்துறை கையாண்ட தந்திரமேயிது.

இவ் உளவியல் புலனாய்வு யுக்தியில், பல்லாயிரம் தந்திகள் கொடுத்த செய்தியில் எத்தனையாயிரம் இதயங்கள் கடும் துயரில் மூழ்கியிருக்கும் என்பதனை நீங்களே அறிவீர்கள்.

நாட்டு நலனில் அக்கறை கொண்ட எந்தவொரு அமைப்பும், `எதிரணிகளை வெல்வதற்கு தன்னாலான எல்லா விதமான வழிகளையும் கையாளும் என்பது வெளிப்படையான உண்மை' மனித உயிர்களுக்கு அறவே மதிப்பளிக்காத தன்மையும் மனித உரிமைகளைப் பற்றிச் சிந்திக்காத போக்கும் சிறிலங்காப் புலனாய்வாளர்கள் மத்தியிலும் ஆழ வேரூன்றியிருக்கிறது.

தமிழினத்தை நாசம் செய்ய உளவியல் ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்தவென போலியாவணத் தயாரிப்புக்கள் மூலமும் தமிழர்களின் மனங்களை வெல்வதற்கு சிறிலங்காப்புலனாய்வாளர்கள் பல உத்திகளைக் கையாண்டு வருகின்றனர்.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை சீர்குலைக்கவும், போராளிகள் மற்றும் தலைமைகளுக்கிடையே குழப்பங்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தவும் மக்களை இயக்கத்திடமிருந்து அன்னியப்படுத்தி மக்கள் மத்தியில் போராட்ட உணர்வை குறைக்கவும் மனோவியல் ரீதியில் பலவீனமடைய வைக்கவும் பல்வேறு முயற்சிகள் இடம்பெறுகின்றன.

தமிழ் பெண்களை காதலிப்பதற்கும் திருமணம் செய்வதற்கும் சிங்கள அரச படையினரும் பொலிசாரும் புலனாய்வாளர்களும் நாட்டம் கொண்டிருக்கின்றார்கள். வீதியால் செல்லும் பெண்பிள்ளைகளை வசியப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இத்திட்டம் மக்களினதும் மனவலிமையைக் குன்றச் செய்து யுத்தத்தில் தாக்குப்பிடிக்கவோ போரிடவோ வேண்டிய மனவலிமையினை பலவீனப்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளது.

யுத்தகாலத்தில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு தடைவிதித்துச் செய்தித்தணிக்கைகளை அமுல்படுத்தி அரசு திட்டமிட்டு புனைந்துருவாக்கி வழங்கும் செய்திகளை, ஊடகங்கள் மூலம் வெளியிட்டது.

இராணுவத்தோல்விகளை மூடிமறைத்தும் சிறிய வெற்றிகளையே பெரிய வெற்றியென பூதாகாரப்படுத்தி புலிகளின் கதை முடிந்துவிட்டதென சிங்களப்படைகளுக்குத் தெம்பூட்டும் வகையிலும் தமிழர் படைக்கு சலிப்பூட்டும் வகையிலும் தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. அதே மனநிலையில் இன்றைய போர் ஓய்வு சமாதான சூழலிலும் பொய்த் தகவல்கள் பரப்பும் முயற்சிகளை சிறிலங்காப் புலனாய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக தமிழ்மக்களைக் குழப்பியடிக்கும் வகையில் நெருப்பு இணையத்தளமும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள இன்போ லங்கா (Info Lanka) இணையத்தளமும் T.B.C. வானொலி ஒலிபரப்பு நிலையமும் தமிழ்த்தேசியத்திற்கு விரோதமாகவும் பிரதேசவாதத்திற்கு உடன்பாடாகவும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

தமிழ் இனத்தின் குரல் மக்களின் குரல் 'வங்காபுவத்' யாழ் சேவை போன்ற வானொலிகள் முன்னையகாலத்தில் வதந்திகளையும் பொய்த்தகவல்களையும் பரப்பி மக்களின் மனங்களையும் போராளிகளின் மனங்களையும் சிதைத்து போராட்ட உணர்வை மழுங்கடித்துவிட பல்வேறு முயற்சிகளை மேற்கெண்டு இருக்கிறது.

பொய்யான தகவல்களைப் பரப்பி மக்களின் மனங்களில் உளவிளல் ரீதியில் தாக்கத்தை ஏற்ப்படுத்துவதனை ஒரு பேராயுதமாகவே அரச புலனாய்வாளர்கள் பயன்படுத்துகின்றார்கள். மனச்சோர்வினையும் ஊளவியல் தாக்கத்தினையும் ஏற்படுதத்துவதன்முலம் மக்களின் மனங்களை வெற்றி கொள்ளச்செய்யலாம். என்பது உலகில் பொதுவான புலனாய்வு தந்திரம்.

கல்விமான்களுக்கும் புத்தவிகளுக்கும் பதவியுயர்வுகளைக் கொடுத்தும் புலமைப்பரிசுத்திட்டங்களை வழங்கியும் இனிக்க இனிக்க ஆசைவார்த்தைகள் கூறி சலுகைகளை வழங்கி உளவியல் ரீதியில் அவர்களின் மனங்களை வென்று தமிழர்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிராக திசைதிருப்பப்படுகின்றார்கள்.

ஒரு சிலருக்கு நிதிகளை அள்ளி இறைத்து அவர்களைப் பயன்படுத்தி ஒட்டுமொத்தத் தமிழ் இனமும் சிங்கள அரசுக்கெதிரான புரட்சிகளைச் செய்யாமல் கட்டுப்படுத்த முயல்கிறது. விலைபோன ஒரு சிலரினால் தமிழர்களினது உரிமைப்போராட்டமே சிதைக்கப்படுகின்றது. இவ்வாறான அரசின் தந்திரோபாயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

திரிபு படுத்தப்பட்ட வரலாற்றுச்சித்தாந்தங்கள் மூலம் தமிழரின் கலாச்சாரம் மதம் பண்பாடு மூட நம்பிக்கைகள் பொருளாதார வாழ்வு என்பவற்றுடன் பின்னிப் பிணையப்பட்ட கருத்துக்களை பரப்புவதன் ஊடாக தமிழர்களின் போராட்டத்தை சிதைப்பதற்கு அரச புலனாய்வுத்துறை முயல்கிறது.

யாழ் குடாநாட்டில் தமிழர்களின் பண்பாட்டை சீர்குலைக்கும் வகையில் சிறிலங்காப் புலனாய்வாளர்கள் இளைஞர்களைத்தூண்டி விடுகின்றனர்.

சிறிலங்கா இராணுவம் யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னர் சமூகவிரோத காடையர்க் கூட்டங்கள் வளரத்தொடங்கின. சிறிலங்காஇராணுசத்தினரும் புலனாய்வாளர்களும் இவர்களை வளர்த்தெடுப்பதில் அக்கறைகொண்டு செயற்படுகின்றனர்.

விடுதலை உர்வையும் தேசப்பற்றையும் அழித்து சமூகச்சீரழிவு பாலியல் உணர்வுகளை ஊட்டி வளர்க்கப்படுகின்றனர். இவர்கள் புலனாய்வாளர்களின் ஆசீர்வாதத்துடன் செயறய்படுகின்றனர். இவை அரச குற்றவியல்ச் சட்டங்களுக்கு முரணானவை. ஆயினும் சட்டத்தையும் ஒழுங்கையும்கையில் வைத்திருப்பவர்கள் கவனிப்பதில்லை. இதுவும் இதுவும் இக்கூட்டத்தின் செயற்பாட்டை ஊக்குபிக்கின்றது.

புலிகளின் நடமாட்டங்கள் தொடர்பான தகவல்களைத் தடுக்கவும் சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் இவரவுடிக்கூட்டங்களை தனது துணைப்படையாக வளர்க்கின்றது.

சிறிலங்கா அரச உளவாளிகளுடன் இணைந்து இவ்விளைஞர்கள் கடையுடைப்பு, களவு,போன்றவற்றின் மூலம் நிதி சேகரித்து மது,மாது, வெறியில் லைகின்றனர்? பாலியல் சன்முறைகளில் ஈடுபடுவதும் பொழுதுபோக்குக்காகக் காதலிப்பதும் பெண்கள் மீதான பலாத்காரம் அதன் மூலம் பெண்களுக்கும் அரச படைகளுக்குமானான பாலியல் உறவுகளை ஏற்படுத்த போன்ற செயல்களில் சில இளைஞர்கள் செயற்படுகின்றனர்.

தமிழினத்தை அழிக்க வேண்டுமானால் அதன்பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அழிப்பதன்மூலம் தமிழினத்தையும் விடுதலைப்போராட்டத்தையும் அழித்துவிடலாம் என்ற எண்ணக் கருவில் அரச செயற்பாடுகின்றது. அதற்கு

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: Breitenreinplatz -27, Bern

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: Eigerplatz, Bern

தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33

அப்பா

சிறுகதை

–ஜேர்மனியிலிருந்து சுபா–

அந்தக் காலம் முதல் இந்தக்காலம் வரை.. என்னவோ எனக்கு மாலை நேரம்தான் மிகவும் பிடிக்கும். இந்த மனோரம்மியமான பொழுது மனதிற்கு எவ்வளவு சுகத்தை அள்ளித்தரும். என் வாழ்வில் வந்துபோன ஒவ்வொரு மாலைப்பொழுதையும் இன்று வரும் மாலைகளில் மீட்டிப்பார்க்கிறேன். அழகான பம்பரம்போல் பாவாடை சுழல ஆச்சி பூச்சியாடிய அந்த வயது தொலைந்து ஆறாறாய் ஆண்டுகள் மறைந்துவிட்டன. ஆனால் அந்த நினைவுகள் நெஞ்சப்பெட்டகத்தில் நிறைந்தே கிடக்கின்றன. ஆடிக்களைத்தாலும் ஆச்சி கதைசொன்னால்தான் அன்றைக்கு நித்திரையே வந்தது. ஆனால் இன்று கதைகள் என்றால் எதையாவது வாசிக்க வேண்டும். அல்லது மகள் செல்வியின் கதைகளைக் கேட்கவேண்டும்.

ஒவ்வொரு நாளும் நான் படித்துக்கொள்வதைப்பார்த்து ` பள்ளிக் கூடப்பிள்ளையளே இப்பிடியிருந்து படிக்காதுகள்' என்று பரிகாசம் செய்யும் கணவரே சிலதடவை என்ன கதை `எப்பிடிப்போகுது என்று கேட்பதுண்டு. நானூறு பக்கக்கதையை நாலு பக்கமாகச் சுருக்கி நான் சொல்வதைக்கேட்டபடியே அவர் கண்ணயர்ந்து போவார். செல்வி சின்னவளாக இருந்தபோது அப்பா மாதிரியே கதை கேட்பாள். இப்போ கதை சொல்வதில் மிகவும் கெட்டிக்காரி. தினமும் வேலை முடிந்து வீடுவந்ததும் முதலில் ஏதாவது நகைச்சுவை... அடுத்து ஏதாவது சுவாரசியமாக.. கேட்க ரொம்பவும் ஆசையாக இருக்கும். நானும் இவள் வயதில் இருந்தபோது அம்மாவுக்குக் கதைசொன்னதுண்டு.

`என்னம்மா பூமரமெல்லாம் வாடியிருக்கு. தண்ணீர் பஞ்சம் மாதிரி விட்டிருக்கிறம். தம்பியிட்டைச் சொல்லியிருக்கலாமே.' `தங்கச்சி இன்னும் ரியூசனாலை வரேல்லையோ?' அப்பா வழக்கம் போலத்தானோ.... இல்லை. `அப்பாச்சிக்கு குளிக்க வார்த்திர்களா? மாமி வந்து பார்த்தாவா இல்லை நீங்கள்தான் தனியாவா.... சம்பளம் இண்டைக்கு எடுக்கேல்லை. நாளைக்குத்தான்.' இப்படி வீட்டைப்பற்றியும் வீட்டில் உள்ளவர்களைச் சுற்றியும் வரவு செலவைப் பற்றியுமே கதைத்தேன். அம்மாவும் அவை பற்றியே கதைகேட்பா. இப்பொழுது என் மகள் செல்வியோ முற்றும் வேறாய்.... தன்னைப் பற்றியும் தன் வாழ்வைச் சுற்றியுமே கதைகதையாக அளப்பாள். கேட்கும்போது மகிழ்ச்சியாக இருக்கும். சிலவேளை சற்றுப்பொறாமை கூட ஏற்படும். நாங்களெல்லாம் முன்பு இப்பிடி கதைக்க முடியாமல்போனதால் எத்தனை பேரது வாழ்வில் வசந்தங்கள் தொலைந்து போனது. எங்களது தேவையையோ, அன்றி விருப்பத்தையோ கூறமுடியாமல் ஒருவாழ்வு... மகுடிமுன் ஆடும் பாம்புபோல பார்ப்பவர்கள் மனங்குளிர அழகாக மிக அழகாக ஆடினோம். எல்லோரும் ஆனந்தம் கொண்டாடினர். ஆனால் நாங்கள்...?

.... இப்போதெல்லாம் செல்வி `அம்மா இண்டைக்கு பஸ்சிலை ஒரு தமிழ்ப்பெடியன் வந்தவன்... ஆரெண்டே தெரியாது. ஆள் என்னை ஒரு பார்வை பார்த்தான். நீ தமிழோ எண்டு கேட்டமாதிரி இருந்தது. ஆனால் நான் தமிழ்பார்வையாலை பதில்சொல்லேல்லை...'

.... `அம்மா நான் வேலை முடிஞ்சு வாறநேரம் தமிழாள் மாதிரி ஒராளை அடிக்கடி காணுறனான். அந்தாளும் என்னை ஒரு மாதிரிப்பாக்கிறவர்.'...

....`என்னம்மா நீங்கள்.. தமிழ்ப் பெடியள் வெள்ளைப் பெட்டைகளோடை சுத்துகினம் எண்டு சொல்றியள். தமிழ்ப் பெட்டையளும்தானே வெள்ளைப் பெடியளோடை திரியினம் நீங்கள் காணேல்லையே'....

.....`ஏன் பயந்து பயந்து சாகிறியள் நானென்ன சின்னப்பிள்ளையே'....

என்னம்மா கலியாணமோ... ஆருக்கு?

வேலையிலை சேந்து ஒரு வருசம் கூட ஆகேல்லை. அதுக்கிடையிலை இப்ப ... காசு இல்லாமல் இருக்கிறது கைகாலில்லாமல் வாழுறதுக்கு சரி. நான் பலமாய் நிண்டாப்பிறகு உதைப்பற்றி யோசிப்பம்.

இப்படித்தான் தினம் தினம் வாயடிப்பாள். நேற்றுமட்டும் வழமைக்கு மாறாக வேலைமுடிந்து வீடுவந்தவள் கதிரையில் தொப்பெனச் சரிந்தாள். எப்போதும் குதிரைக்குட்டிபோலக் குதித்துவரும் மகள் சோர்ந்திருந்தது கண்டு துடித்துப்போனேன் `என்ன செல்வி சுகமில்லையே... எழும்பி கைகால் கழுவிப்போட்டு ஒரு தேத்தண்ணி குடிச்சால் நல்லாயிருக்கும்' என்று உற்சாகப்படுத்தினேன். எப்போதும் சிரித்தமுகத்தோடு வரும் செல்வி இப்படி வந்தது எனக்குள் ஒரு பயத்தைத் தந்தது. அவளோ எனக்கொண்டுமில்லையம்மா கொஞ்சம் களைப்பாயிருக்கு. என்று சொல்லியபடி கண்களை மூடினாள். அந்தநொடியே எனக்குள் இனம்புரியாத ஒரு பய உணர்வு மேலிட, `என்னம்மா.. என்ன செய்யிது' என்று மெல்லத் தலைகோதிக்கேட்டேன். மனதிலோ ஆயிரம் கற்பனை, `இஞ்சைதானே பள்ளியிலையே எல்லாப் பாடமும் சொல்லிக் குடுக்கிறாங்கள். நாங்கள் என்னெண்டு பிள்ளையளைக் கட்டுப்பாடாய் வளர்க்கிறது. வெள்ளைக்காரரோடை சேர்ந்து வாழலாமெண்டும் வந்திட்டம் பிள்ளையளை மட்டும் அங்கை போகாதை அவையோடை சேராதையெண்டு எப்பிடிக் கட்டுப்படுத்திறது. அதுக்குள்ளை சில வெள்ளைக்கார தமிழ்ச்சனம் நாங்கள் உந்த வயதிலை வந்திருந்தால் இப்பிடித்தான் செய்திருப்பமெண்டு பிள்ளையளுக்கு உற்சாகம் கொடுக்கிறதைப் பாத்துக்கொண்டு எப்பிடி நிம்மதியாயிருக்கிறது. எங்கடை பிள்ளையும் எங்களுக்குத் தெரியாமல் ஏதும்...? சீக்.. என்னமனம் எனக்கு பெத்த பிள்ளையைக் கூட நம்பாமல் என்று அக்கணமே என்னைக் கடிந்தேன். மறுகணம் எங்கடை பிள்ளையை என்ன ஆச்சிரமத்திலை விட்டா வளர்க்கிறம். அவளும் இந்த இளவட்டங்களுக்குள்ளைதானே இருக்கிறாள். ஏதும் இசகு பிசகாய்...நெருஞ்சிமுள் நெஞ்சில் குத்தியதுபோல் வலித்தது. நேரிலேயே எதையும் பேசிச் சிரிக்கும் செல்வி நேர்மை தவறமாட்டாள் என்று உள்மனம் உத்தரவாதம் கூறினாலும் தாய் மனம் தவியாய் தவித்தது.

...செல்வி.. எழும்பம்மா இந்தத் தேத்தண்ணியை குடியடா... என்று இரந்து கேட்டேன். மெல்லக் கண்களைத் திறந்தவள் `என்னம்மா சின்னப்பிள்ளை மாதிரி நிண்டு அடம் பிடிக்கிறியள். கொஞ்ச நேரம் நிம்மதியாயிருக்க விடுங்கோவன்' என்று சொன்னதும் என் நெஞ்சு பகீரென்றது. பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பது ஏட்டில் காணும் வரியல்ல.. இது வாழ்வின் வலி சுமக்கும் வரியென்பது அவரவரது வாழ்க்கையில் வரும்போதுதான் புரியும். ஏக்கம், பயம் என்று எத்தனையோ உணர்வுக் கொந்தளிப்புக்குள் நின்று நான் தவிக்க மகள் ஏதோ ஒருவிதமாய்... அதுவும் புதுவிதமாய் பேசியது என் கோபத்தை சற்றுக்கிளறியது. இளம் கன்று பயமறியாது. ஈன்றவள் நான்.... கோபத்தையடக்கிக்கொண்டு சற்று நிதானமாய் அடுத்த அடி எடுத்துவைத்தேன்.

எரிச்சலோடு எழுந்தாளோ, என் சொற்கேட்டு எழுந்தாளோ தெரியாது. தேநீர்க்கோப்பை வாங்கியபடி விறுக்கென அறைக்குள் புகுந்தாள். சிலநிமிட இடைவேளையில் மீண்டும் வெளியே வந்தவள் கையில் சி?ல புத்தகங்களைக் கண்டேன்... `வீட்டுக்கு வந்ததும் வழி தெருவில் கண்டவர்கள் வைத்திய மனையில் கண்டவைகள் எனப் பலகதைகளைச் சொல்லிச் சிரிப்பவள் இன்று மனம் கோணலாகி வந்தாள். பின்பு ஏதோ புத்தகங்களைக் காட்டி என்னை ஏமாற்றுவதுபோல நடக்கிறாளே' என்று மனம் புழுங்கியபடி மெதுவாக நோட்டமிட்டேன். கையிலொன்று மடியிலொன்று. பக்கங்கள் வேகமாகத் தட்டப்பட்டனவே தவிர அவள் வாசிப்பதாகத் தெரியவில்லை. ஆனால் எதையோ அவள் எதிர்பார்த்து தேடுவது போலத் தெரிந்தது. இடையிடையே அவள் முகம் மலர்வதையும் கண்டேன். சட்டெனப் புத்தகத்தை மூடியவள் திரும்பி என்னைப் பார்த்து `இந்தப் புத்தகங்களிலை ஒரு கதை படிச்ச ஞாபகமிருக்கு. ஆனால் இப்ப காணோல்லை' என்றாள். நான் ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்தவள் போல, என்ன கதை... இவை என்ன புத்தகம் என்று வினவ அவள் புன்முறுவலோடு இது மரியாதைராமன்.. மற்றது பீர்பால் தந்திரக் கதை என்றதும் என் உச்சி குளிர்ந்தது. இவை இரெண்டும் சின்னப்பிள்ளைகள் படிக்கிற புத்தகம். இதிலை என்ன கதை...? என்று கேட்பது போல அவள் முகம் பார்த்தேன். அவள் குழந்தையாக.... அம்மா... உங்களுக்கு அந்தக் கதையைக் காட்டவேணுமெண்டுதான் தேடினன். ஆனால் காணவே இல்லையே.. என்றாள். என் மனச் சங்கடம் தீர்ந்ததுபோல உள்ளூரச் சந்தோசம் கொண்டு `ராமனின் கதை கேட்கிற அளவுக்கு நான் என்ன நாலு வயசுப் பிள்ளையோ என்று சொல்ல அவள் சிரித்து நீங்கள் சின்னப்பிள்ளையல்ல ஆனால் நான்? என்ற கேள்வியோடு நிமிர்ந்து பார்த்தாள். நான் சற்றுத் தடுமாறி... என்ன செல்வி குறுக்குக் கேள்வியெல்லாம் கேக்கிறாய். சுத்திவளைக்காமல் சொல்லு என்றேன். அவள் குபுக்கெனச் சிரித்து.. நான் சின்னவளாக இருக்கேக்கை அம்மா யார்? எண்டு ஒரு கதை படிச்சனான். இண்டைக்கு அப்பா யார் எண்டு ஒரு புதுக்கதை என்றவள் பழையதுக்கு ராமன் திர்ப்பு சொல்லியிருந்தான்.... ஆனால் இந்தக் கதைக்குத் திர்ப்பு இன்னும் இல்லை என்ற கேள்வியோடு அவள் பார்த்த பார்வை... அதில் வருத்தம், கோபம், சினம் என்று எத்தனையோ கண்டு,

என்ன இப்படிப்பாக்கிறாள். கதை தெரியாமல் திர்ப்பு எப்பிடி எனக்குத் தெரியும் என்றேன். செல்வி சினம் பொங்க, தமிழ்... தமிழ்.. தமிழ் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சங்கு ஊதிக்கொண்டு இருக்கிறியள். தமிழர் நாங்கள் எண்டு சொல்லேலாமல் நான் நிக்கிறன்.

....`அம்மா எங்கடை கிளினிக்குக்கு ஒரு தமிழ் மனுசி வந்திருக்கிறா. பிள்ளை பிறந்து மூண்டு நாள் ஆகுது. நான் அடிக்கடி அந்த அறைக்குப் போய் வாறன். ஆனால் அப்பா ஆரெண்டு இன்னும் தெரியேல்லை' என்றாள். என் தலை கிறுகிறுத்தது. ஆரோ ஒருத்தி... அவளைப்பற்றி இவளுக்கு என்ன அக்கறை என்ற நினைப்போடு, அதைப்பற்றி உனக்கென்ன கவலை.. ஒருத்தரும் பாக்கவாறேல்லையோ என்றேன். செல்வி சினம் மிகுந்து .. ஏன் வாறேல்லை. அவளின்ரை கணவன் நற்குணம் வாறவர். அதைவிடப் பிறந்திருக்கிற பிள்ளையின்ர அப்பா அடிக்கடி வந்து.. அதை எப்பிடி சொல்றது. சீ என்றாள் எனக்குள் மின்சாரம் பாய்ச்சியதுபோன்ற அதிர்வு உடல்முதல் உள்ளம்வரை ஒரு நொடியில் தாக்கியதும் என்ன செல்வி.. என்ன சொல்கிறாய் என்றேன். அவள் மனம் கலங்கி.. `நீ தமிழ்ப்பிள்ளையெண்டு ஒருதரும் சொல்லமாட்டினம் எண்டு சொல்லுவியள். அவளும் அப்பிடித்தான் நினைச்சிருக்கவேணும். நான் வரா என்கிற வரதராசன் எண்டது அவளுக்குத்தெரியாது. ஆரோ துருக்கியோ லெபனானோ எண்ட நினைப்பிலை என்னைக் கணக்கெடுக்கேல்லை. ஆனால் நான்.. நற்குணம் எண்?ட பெயரைப்பாத்து எங்கடை ஆக்கள் எண்டு அடிக்கடி போய்ப்பாப்பன். நற்குணம் வந்து போனாப்பிறகு அந்த மற்றவன் வருவான். ஆரோ அண்ணை தம்பியெண்டு நினைச்சன். ஆனால் நேற்று அவன் மனுசியோடை குலாவினதைக்கண்டு ஒரு சந்தேகம்.. இண்டைக்கு அவன் வந்து அந்தப் பிஞ்சுவிரல்களைத் தொட்டுத் தடவி.. அப்பா வந்திருக்கிறன் கண்ணா எண்டு கொஞ்சிக்கொண்டிருக்க அவளும் பல்லைக்காட்டி கதைச்சுக்கொண்டிருந்தாள். என்ன செய்யிறது கைகட்டி, வாய்பொத்தி நிக்கிறதுதான் வேலை செய்யிற இடத்திலை செய்யக்கூடியதாயிருந்தது. அப்ப தொடங்கியே என்ரை மூளை விண்விண்ணெண்டு வலிச்சுக்கொண்டிருக்கு. உங்களுக்கு விளங்காது. என்னைப்போல பிள்ளையள் இஞ்சை படுறபாடு... வீட்டுக்கை வந்தால் நாங்கள் தமிழ் பாரம்பரியக் காரரெண்டு சொல்லி தமிழ் றேடியோ, தமிழ் ரிவிக்கு முன்னாலை குந்திக்கொண்டு இருக்கிறம். நீங்களும் எங்கடை கலைகலாச்சாரம் தெரியவேணும். இந்த வெள்ளைக்காரச் சனம் மாதிரி வாழ்க்கையை விளையாட்டாய் நினைக்கக்கூடாதெண்டு பிரசங்கம் வேறை வைப்பியள். இப்ப.. இப்ப பாத்தியளே எங்கடை சனம் வெள்ளைக்காரரை மிஞ்சியிட்டுதுகள்.

.. அம்மா கொஞ்சம் யோசிச்சுப்பாருங்கோ. வீட்டுக்கொரு சேலை... வெளிக்கொண்டு, வீட்டுக்கொரு காப்பு, வெளிக்குவேறை. இது அம்மம்மா காலத்திலையிருந்துது பிறகு வீட்டுக்கொரு தாலிக்கொடி வெளிக்கொரு கொடி உங்கடை காலத்திலை வந்துது. இப்ப... எங்கடை காலத்திலை வெளிக்கொரு புருஷன்.. வீட்டுக்கொண்டு எண்டுதானே நாகரீகம் மாறி வந்திட்டுது.' என்றாள்.

எனக்கு தலை சுற்றிக்கொண்டு வந்தது. கண்கள் இருள இமை தானாகவே மூடியது. ஆனால் மனம்மட்டும்.. ஐயோ நாங்கள் மிருகமாகவே பிறந்திருக்கலாம். இந்த மனித ஜென்மத்தை ஏன்தான் எடுத்தோம். மிருகங்கள் கூட தங்கள் சோடிக்காகவே உயிர் வாழும் நிலை இன்னும் இருக்கிறதே. இந்த மனிதர்கள் ஏன் இப்படி ஓடுகிறார்கள். கருவைச் சுமக்கும் மிருகம் இன்னொரு துணையை ஒருபோதும் தேடாது என்கிறார்களே மனிதரால் எப்படி முடிகிறது? செல்வி சொன்னதுபோல அப்பா யார் என்று எப்படிச் சொல்வது?.. அணுப்பரிசோதனை செய்துதான் அத்தாட்சி பத்திரம் வழங்கவேண்டும். அப்போதுதானே அப்பாவின் பெயரைப் பிள்ளை காப்பாற்றும். அந்நிய தேசத்துக்கு வந்து விட்டதால் ஆருக்கும் தெரியாதெண்டு ஆட்டம் போடும் பெண்கள் இப்படி ஒரு சோதனையின்பின்தான் அத்தாட்சிப்பத்திரம் வழங்கும் நிலை வந்தால்.. அப்பா பெயரே வேண்டாம். அது என் பிள்ளை என்று பதிவு செய்தால்போதும் என்று வெற்றிபெற்றுவிடுவார்கள்.

இதுதானே சமத்துவம்.

வலிகாமம் இருந்து வன்னி வரை

– கவிஞர் நாவண்ணன்

பாகம் - 2

25

154 ஆம் கட்டையில் உள்ள சிவபாத கலையகம் எனும் அப்பாடசாலை கிளிநொச்சிக்கும் முறிகண்டிக்கும் இடையில் உள்ளது. அதில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அப்பாடசாலை அமைந்திருக்கும் பொன்னகர் எனும் குடியேற்றத் திட்டத்தில் தமக்கும் தேவையான அரை ஏக்கர் காணிகளை வெட்டித் துப்பரவாக்கி வீடுகளைக் கட்டிக்கொண்டிருந்தனர்.

1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களே பெரும்பாலும் அங்கு குடியிருந்தனர். அந்தக் கால கட்டத்தில் யாழ்.மனித முன்னேற்ற நடுநிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அப்பொழுது பணியின் நிமித்தம் ஒருமுறை அங்கு சென்றிருக்கின்றேன். வெறும் காடாக அன்று கண்ட இடம் பாட்டாளிகளான மலையக மக்களால் வயல்களாகவும், தோட்ட நிலங்களாகவும் இன்று காணப்பட்டன. அந்தக் குடியேற்றத்தை அமைக்க முழுமையாகப் பாடுபட்டது மனிதமுன்னேற்ற நடுநிலையமே.

`மகன் செத்தாலும் பரவாயில்லை மருமகள் கழுத்தில் தாலி இருக்கக்கூடாது' என்று மாமியார்களைப் பற்றி ஒரு பழமொழி தமிழில் உண்டு. அப்படியொரு சம்பவம் இக் குடியேற்றத்தை அமைத்த மனித நிலையத்திற்கு அந்த நாட்களில் ஏற்பட்டது.

அதுவிடயத்தை பின்னர் விரிவாகக் காணும்முன்னர் அந்தக் குடியேற்றத் திட்டத்துக்கு பொன்னகர் என்று பெயர் ஏன் வந்தது என்ற விடயத்தைப் பார்ப்போம்.

கிளிநொச்சியில் செய்யப்பட்ட குடியேற்றத் திட்டங்களுக்கு ஈழத்தில் புகழ்பூத்த அரசியல்வாதிகளின் பெயர்களைச் சூட்டியிருந்தனர். தந்தை செல்வநாயகத்தின் பெயரால் செல்வா நகர் என்றும் தொண்டமான் பெயரால் தொண்டா நகர் என்றும் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அந்தவகையிலே 154ம் கட்டையில் அமைக்கப்பட்ட குடியேற்றத்திற்கு பொன்னம்பலம் நகர் என்று பெயர் சூட்டத் திட்டமிடப்பட்டது. ஆனால் அங்கே குடியேற்றப்பட்ட மலையக மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஏனெனில் பிரஜா உரிமைச் சட்டத்திற்கு ஆதரவளித்து மலையக மக்களை நாடற்றவர்களாக்கிய திரு.ஜி.ஜி பொன்னம்பலத்தின் பெயர் தமது குடியிருப்புக்கு சூட்டப்படக்கூடாது என்பதே அவர்கள் எதிர்ப்புக்குக் காரணம். அதனால் அப்பெயரை சிபார்சுசெய்தவர்களையும், அங்கே குடியேறிய மக்களையும் திருப்தி செய்யும் முகமாக அவ்விடத்துக்கு பொன்னகர் என்று பெயர் சூட்டப்பட்டது என்று அங்கு 1977ம் ஆண்டு முதல் வாழும் மக்கள் தெரிவித்தனர்.

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒரு கசப்பான உண்மையை இங்கு கூறியே ஆகவேண்டும். இலங்கை எப்படி ஒரு பௌத்த நாடு என்று சிங்கள அரசு கூறிக்கொள்கின்றதோ, அதேபோன்று தமிழர் வாழும் பகுதிகளில் மறைமுகமான மதவாதம் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது. கிறிஸ்தவர்கள் என்ன மனிதாபிமானப் பணிகளைச் செய்தாலும் அது மதமாற்ற நோக்குடனேயே செய்யப்பட்டு வருகின்றது என்ற சந்தேகம் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. அதில் வேடிக்கையென்னவென்றால் இந்த மதவாதச் சிந்தனை ஒன்றாக வாழ்ந்து, இன்பதுன்பங்களையெல்லாம் ஒன்றாக அனுபவிக்கும் வடக்குக் கிழக்குத் தமிழர்களை விட வருடத்துக்கு ஒருமுறை வந்துபோகும் திருவிழாப்பக்கதர்களிடம்தான் அதிகம்.

மனித முன்னேற்ற நடுநிலையம் மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கான குடியேற்றத் திட்டத்தை அமைத்து அந்தப் பிள்ளைகளுக்கான பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்தது. கத்தோலிக்க சமயத்தவர்களால் இந்தச் சமூக முன்னேற்றப்பணி செய்யப்படுவது சில சமயவாதிகளால் பொறுத்துக்கொள்ள முடியாது போனது. அந்த மக்களை மதம் மாற்றம் செய்வதற்காகவே இவையெல்லாம் நடைபெறுகின்றன என்று உள்ளே குமைந்துகொண்டார்கள். அந்தப் பாடசாலைக்கும் தமது சமயப் பெயரைச் சூட்டிவிடுவார்களோ என்ற அச்சம் எழுந்தது. அதன் காரணத்தாலேயே கத்தோலிக்க நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பாடசாலைக்கு சிவபாத கலையகம் என்று சூட்டினர். சமயச் சிந்தனையுள்ளவர்களுக்கு அப்பெயர் திருப்தி அளித்தது மட்டுமல்ல, சமூக

> *யாழ்ப்பாணத்தை நோக்கி இராணுவம் முன்னேறி வருகிறதாம். நாங்களும் எந்த வேளையிலும் அவ்விடத்தில் இருந்து வெளியேறலாம். முகாமை மூடிவிட்டு வெளியேறும்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் மேலிடத்தில் இருந்து உத்தரவு வரலாம் என்று எங்களுக்கு மூத்த போராளிகள் பேசிக்கொண்டார்கள்.*

நோக்கோடு அப்பாடசாலையை நிறுவியவர்களுக்கும் திருப்தி அளிக்கும் விதத்திலே அப்பெயர் அமைந்தது.

எப்படி?

சிவபாத கலையகம் என்ற பெயரில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பொருள் உண்டு. அப்பெயரில் உள்ள

சி = சிங்கள
வ = வன்செயலால்
பா = பாதிக்கப்பட்ட
த = தமிழர்களுக்கான
கலையகம்

அன்று இங்கு வந்து குடியேறியவர்கள் மலையகத் தமிழர்கள். இன்னும் அவர்கள் வந்த கோலத்திலே நிர்க்கதியாக வந்து இருப்பவர்கள் வடக்கைச் சேர்ந்த தமிழர்கள். மொத்தத்தில் ஈழத்தமிழன் அடிபட்டு அலைபவன் என்ற நிலையாகிவிட்டது. ஆனால் அந்த நிலையில்தான் இன்று மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

மாதம் ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்காகக் கொழும்பு செல்லவேண்டிய கட்டாயக் கடமை என் மனைவிக்கு இருந்தது. அதேவேளையில் எனது மகள் செஞ்சோலையில் பணியாற்றச் சென்றுவிட்டாள். அது கிளிநொச்சி திருவையாற்றுப்பகுதியில் இருந்தது. இந்த வேளையில் நான் தனித்துப்போய்விட்ட உணர்வு எனக்கு. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் எனது இந்த இடப்பெயர்வு அனுபவங்களையும், வரும் வழியில் நான் கண்ட முக்கிய இடங்களின் வரலாறுகளையும் எழுதிக் கொண்டிருந்தேன்.

* * *

கிளிநொச்சியில் இருந்த எமது அச்சக அலுவலகத்தில் ஒரு நாள் பகல் இருந்தபோது உருத்திரபுரத்தில் இருந்துவந்த ஒருவர் சொன்னார் உங்களுடைய மகள் வந்து நிற்கின்றாள் என்று.

`எந்த மகள்'

`இயக்கத்தில் இருக்கிற மகள்'

என்காதுகளில் தேன்யாந்ததுபோல் இருந்தது. இடப்பெயர்வின் பின்னர் அவளைப்பற்றி எந்தவித தகவல்களும் இல்லாது, அவள் எங்கே இருக்கிறாள் என்பதும் தெரியாது இருந்த எனக்கு அவள் எங்களைத் தேடி வந்திருக்கிறாள் என்ற தகவல் பெரும் மகிழ்ச்சியையே தந்தது. உடனே உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலை நோக்கிப் புறப்பட்டேன்.

அவள் வந்து நெடுநேரம் ஆகிவிட்டிருந்தது. எனக்குத் தகவல் தாமதமாகவே கிடைத்தது. நான் நண்பகலைத் தாண்டியே சென்றேனாகையால் அவள் போய்விட்டாள் என்ற செய்தியே அங்கு காத்திருந்தது. எனக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. தான் புதுக்குடியிருப்பு மந்துவிலில் உள்ள ஆனந்த புரத்தில் இருப்பதாகக் கூறிச்சென்றிருந்தாள். அவளைக் கண்டதும் ஜேம்ஸ் பத்தினாதர் அடிகள் அன்போடு வரவேற்று, உபசரித்து உணவும் கொடுத்து நாம் தற்பொழுது இருக்கும் இடத்தையும் கூறி அனுப்பியிருக்கிறார்.

அவள் என்னைக் காணவேண்டும் என்பதற்காக வரவில்லை. கிளிநொச்சிக்கு இயக்க அலுவலாக சக போராளியுடன் வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இடத்தில் எங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றாள். அதன் காரணத்தால் அவள் தொடர்ந்தம் எம் இருப்பிடத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபடாமல் திரும்பிவிட்டாள் போலும். ஆனால் தான் ஆனந்தபுரம் முகாமில் இருப்பதாகக் கூறியதால் இனி அவளை எப்படியும் சந்தித்துவிடலாம் என்ற நம்பிக்கை தோன்றியது.

மகள் வந்து போன விடயம் என்னவளுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கும். ஆனால் அவள்தான் கொழும்புக்குப் போய்விட்டாளே. அவள் வந்ததும் அவளையும் அழைத்துக்கொண்டு போகலாம் என்று இருந்துவிட்டேன்.

* * *

பூங்கா

சூரியக்கதிர் ஒன்று நடவடிக்கை இடம்பெற்றபோது நான் அப்பொழுது பருத்தித்துறையில் அத்தியடிப் பிள்ளையார் கோவிலடி முகாமில் இருந்தேன். யாழ்ப்பாணத்தை நோக்கி இராணுவம் முன்னேறி வருகிறதாம். நாங்களும் எந்த வேளையிலும் அவ்விடத்தில் இருந்து வெளியேறலாம். முகாமை மூடிவிட்டு வெளியேறும்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் மேலிடத்தில் இருந்து உத்தரவு வரலாம் என்று எங்களுக்கு மூத்த போராளிகள் பேசிக் கொண்டார்கள்.

முகாமை மூடிவிட்டு இடம்மாறிச் செல்வது என்பது எனக்குப் பிரச்சினையாகத் தெரியவில்லை. ஆனால் அந்தக் கடற்கரைவாழ்வும், பெற்ற பயிற்சிகளும் கடலில் நாம் போட்ட கும்மாளமும் இனிக் கிடைக்குமா என நினைக்கும்போது கவலையாகத்தான் இருந்தது. எங்களை விடவும் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட போராளிகளுக்குப் பெருங்கவலையாக இருந்தது. அதற்கு இன்னுமொரு முக்கிய காரணம். அவர்கள் பெற்றோர் உறவினர்களுக்கு அருகாமையிலேயே இதுவரைநாளும் இருந்துவிட்டார்கள். இனி அவர்களை விட்டு நெடுந்தொலைவு பிரிந்து போகவேண்டி வருமே என்ற கவலையும்கூட.

ஆனால் எனக்கு இருந்த கவலை வேறு. இதுவரை நாளும் என் பெற்றோர், சகோதரர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று தெரியும். யாழ்ப்பாணத்தில் இருந்து இயக்கம் மக்களை வெளியேறச் சொல்ல மக்கள் வெளியேறிவிட்டார்கள். அவர்களோடு என் வீட்டவர்கள் எல்லோரும் வெளியேறியிருப்பார்கள்! அவர்கள் வெளியேறி எங்கே போயிருப்பார்கள். இனி நான் எப்படி அவர்களைச் சந்திக்கப் போகின்றேன் என்று குழப்பமாக இருந்தது.

போராட்டத்திற்கு என்று புறப்பட்டு வீட்டுக் காரரைப் பற்றி நான் கவலைப்படுவது மற்றவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் வீட்டுப்பற்று இல்லாத ஒருவருக்கு நாட்டுப்பற்று இருக்கமுடியாது. ஒரு தனி மனிதனுக்கு அவன் குடும்பம்தானே. கிளை எவ்வளவுதான் பயன் கொடுத்தாலும் வேர் தானே அதற்குக் காரணம். என் குடும்பத்தில் இருந்துதானே நான் போராளியாக வந்தேன்.

(தொடரும்)

விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography



விடுகதை முற்றம்

விடுகதைகள்

1. இராத்திரிப் பகல் தூக்கமில்லை என்றாலும் சத்தத்திற்குக் குறைவில்லை அவன் யார்?
2. உருவாவதும் தண்ணீரில் உருக்குலைந்து போவதும் தண்ணீரில் அவன் யார்?
3. கோட்டைக்குள் இருந்து கொண்டு கோடி உத்தரவுகளைப் பிறப்பிப்பான்?
4. அழைக்கும் போது உரத்துக் குரல் கொடுப்பான், பேசும்போது காதிற்குள் கிசுகிசுப்பான்?
5. மலையிலே பச்சை, கடையிலே கறுப்பு, வீட்டிலே சிவப்பு அது என்ன?
6. வலை விரித்திடுவான் வேடனும் அல்ல, உயிர் குடித்திடுவான் யமனும் அல்ல, அவன் யார்?
7. ஓடும் குதிரைக்கு வால் தேயுது அது என்ன?
8. ஏறேறு சங்கிலி இறங்கிறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா சங்கிலி அது என்ன?
9. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
10. இருக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்திருப்பான் தன்னை மட்டும் அழுக்காகவே வைத்திருப்பான் அவன் யார்?
11. அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும் அது என்ன?
12. அண்ணனுக்கு ஒட்டாது தம்பிக்கு ஒட்டும் அது என்ன?
13. எட்டுக்கால் ஊன்றி இரு கால் படமெடுத்து வட்டக்குடை பிடித்து வாறாராம் வன்னியனார். அவர் யார்?
14. ஒரு குப்பிக்குள் இரண்டு திரவங்கள் அது என்ன?
15. அம்மா ஆடாமல் இருக்க மகள் ஆடி ஓடுகிறாள். அது என்ன?
16. மண்ணுக்குள் இருப்பான் மங்களத்துக்கு சொந்தக்காரன் அவன் யார்?

– மாணவன்

விடை அடுத்தவாரம்.

தகவல் முற்றம்

கிளைடர் விமானம்



கிளைடர் என்பது இயந்திரங்கள் பொருத்தப்படாத ஆகாய விமானமாகும்.

கிளைடர் எப்பொழுதும் மேலிருந்து கீழ் நோக்கியே பறக்கும் தன்மையுடையவை. ஆனால் இதனை ஓட்டும் விமானியின் திறமை மூலம் மேலிருந்து கீழோ கீழிருந்து மேலேயோ பறக்கச் செய்யலாம்.

1853–ஆம் ஆண்டு சர்.ஜார்ஜ் கேலே என்பவர் முதன் முதலில் இக்கிளைடர் விமானத்தை உருவாக்கி உலகச் சாதனை புரிந்தவர்.

1903–இல் தான் ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. இது கிளைடரில் இயந்திரம் பொருத்தப்பட்ட விமானமாகவே இருந்தது.

கிளைடர் ஆகாய விமானத்தோடு இணைக்கப்பட்டு எவ்வளவு உயரத்திற்கும் பறந்து செல்லும் தன்மையுடையவை. அதன் மூலம் 1500 கிலோ கிராம் எடையைத் தூக்கிக் கொண்டு, 5500 கிலோ மீற்றர் தூரம் அட்லாண்டிக் கடலின் மேல் பறந்து சாதனை புரிந்தன.

இரண்டாவது உலகப் போரின் போது பெரிய கிளைடர்கள், படைகளுக்கு நடுவே ஓசையில்லாமல் போர் வீரர்களையும், போருக்குத் தேவையான பொருட்களையும் எடுத்துச் செல்வதற்குப் பெரிதும் உதவின.

ஆகாய விமானம் தரையிலிருந்து சுமார் 10,000 மீற்றர் உயரம் வரை பறக்கும். ஆனால் கிளைடரோ 14,102 மீற்றர் உயரம் தொடர்ச்சியாக 1460 கிலோ மீற்றர் தூரம் பறந்து உலகை வியப்பில் ஆழ்த்தியது.

1952 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டைச் சேரந்த சார்லஸ் அட்கெர் என்பவர் கிளைடரில் 56 மணி 15 நிமிடநேரம் பறந்து காட்டினார்.

அறிந்துகொள்வோம்

நிலவுப்பயணம்

`நிலா நிலா ஓடி வா....
நில்லாமல் ஓடி வா....'

இது பாப்பா பாடல். பிஞ்சுகள் கேட்டிருப்பீர்கள். சரி. அந்த நிலவைத் தேடிச் சென்ற கதை தெரியுமா? இன்றல்ல... 1969 -ஆம் ஆண்டு யூலை 20ஆம் நாள் நிலவுக்கு மனிதன் சென்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு நடந்தேறியது. இது நிகழ்ந்து இந்த ஆண்டோடு 35 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது.



மனித அறிவின் வீச்சு என்பது எல்லைகளைக் கடந்து பாயும் தன்மையுடையது என்பதை நிரூபித்தது நிலவுப் பயணமாகும். அமெரிக்க விண்வெளி வீரர்கள் இந்தச் சாதனையைப் படைத்தனர்.

இன்று எவ்வளவோ அறிவியல் விளைவுகளைக் காணுகிறீர்கள். செவ்வாய்க்கோளை அறிய அறிவியல் எவ்விக்குதிக்கின்றது, படிக்கிறீர்கள். கல்பனா சாவ்லாவின் சாதனையை கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கண்டோம். இவற்றிற்கெல்லாம் ஒரு துவக்கமாக அமைந்தது தான் மனிதனின் நிலவுப் பயணம்.

அதைப் பற்றிப் பார்ப்போமா...?

முதன்முதலாக நிலவில் காலடி பதித்த மனிதர்கள் என்ற பெருமையைப் பெற்றவர் இருவர். ஒருவர் நீல் ஆர்ம்ஸ்டிராங், இன்னொருவர் எட்வின் ஆல்டிரின். இவர்கள் இருவரும் விண்வெளி வீரர்கள் ஆவர்.

1969-ஆம் ஆண்டு யூலை மாதம் 20-ஆம் திகதி அன்று முதலில் ஆர்ம்ஸ்டிராங்கும், அவரைத் தொடர்ந்து ஆல்டிரினும் நிலவில் கால் பதித்து நடந்தனர். இவர்களுடன் மைக்கேல் கொலின்ஸ் என்னும் விண்வெளி வீரரும் சென்றிருந்தார். நம் நாட்டில் மூன்று பேராகச் சென்றால் போன காரியம் உருப்படாது என்ற மூடநம்பிக்கை உண்டு. ஆனால் மூன்று பேராகச் சென்றுதான் இந்த உலக சாதனையை நிகழ்த்தினர். இந்த மாபெரும் சாதனையை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் படைத்தது.

1969 யூலை 16 அன்று செலுத்தப்பட்ட அப்பல்லோ 11 என்ற விண்கலம் சந்திர மண்டலத்தில் நுழைந்ததும், இவர்கள் இருவரும் சந்திரனில் தரையிறங்க இருந்த கலத்திற்கு மாற்றப்பட்டனர். அமெரிக்க நேரப்படி (இந்திய நேரப்படி 1969 யூலை 21) யூலை 20ம் திகதி இந்தக் கலம் சந்திரனின் பரப்பில் தரையிறங்கியது. தனது விண்வெளி உடையில் கலத்தில் இருந்து முதலில் வெளியில் புறப்பட்ட ஆர்ம்ஸ்டிராங் பிற்பகல் 1 மணி 56 நிமிடத்தில் நிலவின் மண்ணில் காலடி பதித்தார். இது மனிதன் எடுத்து வைத்த ஒரு சிறு காலடி என்றாலும், மனித குலத்தின் மாபெரும் சாதனை ஆகும். அவரை அடுத்து ஆல்டிரினும் தரையிறங்கினார். நிலவின் பரப்பில் அவர்கள் இருவரும் இரண்டு மணிக்கும் அதிகமான நேரம் நடந்து, 21 கிலோ மண்ணை சோதனைக்காகச் சேகரித்தனர். நிலவில் பல புகைப்படங்களை அவர்கள் எடுத்தனர். நிலவில் அமெரிக்கக் கொடியைப் பதித்த அவர்கள் விண்வெளித் தொடர்பு சாதனத்தின் மூலம் வெள்ளை மாளிகையில் இருந்த அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனுடன் பேசினர்.

பூமியின் புவிஈர்ப்பு சக்தியில் ஆறில் ஒரு பங்கு மட்டுமே உள்ள நிலவில் நடப்பதும், ஓடுவதும் இயலாதது அல்ல என்பதை அவர்கள் கண்டனர். நிலவில் இருந்து அவர்கள் பேசியதை உலகில் இருந்த பல லட்சக்கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் கண்டு, கேட்டு மகிழ்ந்தனர். அங்கிருந்து புறப்படும் முன் அவர்கள் பல மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டனர். பின்னர் நிலவுக் கலத்தில் ஏறிய அவர்கள் பூமிக்குத் திரும்பும் பயணத்தைத் தொடங்கினர். தரையிறங்கிய கலத்தின் கீழ்ப்பகுதியே அவர்களின் திரும்பும் பயணக்கலத்தை உந்திச் செலுத்தும் தளமாகச் செயலாற்றியது. பூமிக்குத் திரும்பிய அப்பல்லோ-11 கலம் பசிபிக் கடலில் ஹவாய் தீவுக்கு அருகில் யூலை 24 அன்று இறங்கியது.

நிலவுக் கோளில் இருந்த உயிரினங்கள் ஏதேனும் தொற்றிவரும் வாய்ப்பு இருந்தபடியால், உயிர்களில் இருந்து தனிமைப்படுத்தும் உடைகள் விண்வெளி வீரர்களுக்கு அணிவிக்கப்பட்டு, மூன்றுவார காலம் அவர்கள் தனிமையில் வைக்கப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அப்பல்லோ 12 என்ற விண்வெளிக்கலத்தில் சால்ஸ் கோனார்டு, ரிச்சர்ட் கோர்டான் என்ற இரு விண்வெளி வீரர்கள் 1969 நவம்பர் 14 அன்று புறப்பட்டு நிலவில் இறங்கி சோதனைகள் பல செய்து விட்ட சோதனைக்கான மண்ணை எடுத்துக்கொண்டு நவம்பர் 24 அன்று பத்திரமாகப் பூமிக்குத் திரும்பினர்.

இவற்றைத் தொடர்ந்து அப்பல்லோ 12 1970 ஏப்ரல் 11 அன்றும், அப்பல்லோ 14 1971 ஜனவரி 31 அன்றும், அப்பல்லோ 15 1971 யூலை 26 அன்றும் விண்ணில் செலுத்தப்பட்டன. இக்கலங்களில் பயணம் செய்த விண்வெளி வீரர்கள் அனைவரும் நிலவில் இறங்கி பல ஆராய்ச்சிகள் செய்துவிட்டு, பத்திரமான பூமிக்குத் திரும்பினர். ஒன்றைத்தொடர்ந்து அடுத்து செலுத்தப்படும் கலத்தில் பல தொழில் நுணுக்க முன்னேற்றங்கள் செய்யப்பட்டன.

அப்பல்லோ 15-இல் சென்ற ஆல்பிரட்வோர்டனும், ஜேம்ஸ் இர்வினும், 2 நாள்கள், 18 மணி நேரம் நிலவின் பரப்பில் கழித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 18 மணி 37 நிமிட நேர அவர்களது ஆய்வின்போது அவர்கள் 282 கி.மீ.தூரம் பயணம் செய்தனர். 460 கோடி ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று கருதப்படும் ஒரு படிகக் கல் உள்ளிட்ட 91 கிலோ நிலவுக் கற்களை அவர்கள் சேகரித்து வந்தனர்.

அறிஞர் வாழ்வியல்

வடை

பெரியார் ஒருமுறை மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் சென்றுகொண்டிருந்த கார் திண்டுக்கல் அருகே வந்தது. திடீரென்று டிரைவரை காரை நிறுத்தும்படி சொன்னார். கார் நின்றதும், காரில் வந்த தொண்டர் ஒருவரிடம், சாலை ஓரத்தில் ஒரு பெண் வடை சுட்டுக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, வடை வாங்கி வருமாறு சொன்னார். வடை வந்ததும் அதை அவர் ருசித்துச் சாப்பிட்டதுடன் உடனிருந்தவர்களுக்கும் கொடுத்தார்.

தொண்டர் ஒருவர், `ஐயா! தாங்கள் வடை சாப்பிடவேண்டும் என்று சொல்லியிருந்தால், ஒரு நல்ல ஓட்டலாகப் பார்த்து சாப்பிட்டு இருக்கலாமே' என்று பெரியாரிடம் கேட்டார். அதற்கு பெரியார், `சாப்பிடலாம்தான். ஆனால் இதுபோல விலை மலிவாக, ருசியான வடை கிடைக்காது. அத்துடன் நம்மால் ஒரு ஏழைப் பெண்ணும் பயனடைகிறார் அல்லவா!' என்றார்.

* * *

கறுப்பா, சிவப்பா ?

ரங்கூனில் கணக்கு அதிகாரியாகப் பணியாற்றிவந்தார் சர்.சி.வி.ராமன். அவரது மேலதிகாரி ஓர் ஆங்கிலேயர். ஒரு நாள் அந்த அதிகாரி ராமனைத் தன் அறைக்கு அழைத்து. `இந்த கறுப்பு மையை நான் சிவப்பு மை என்று கூறினால் அதற்கு நீ `ஆமாம் சார்!' என்று சொல்லவேண்டும்' என்று அதட்டல் குரலில் கூறினார். அதற்கு ராமன், `அப்படி ஒரு பொருத்தமில்லாத கேள்வியை நீங்கள் கேட்டால், `நீங்கள் குருடரா, பைத்தியமா அல்லது இரண்டுமா?' என்று கேட்க வேண்டிய கடமை எனக்கு உண்டு' என்று பதிலளித்தார்.

எங்கள் பிள்ளைகளின் கல்வி மூன்று தசாப்த காலமாக சிங்கள அரசுகளின் திட்டமிட்ட புறக்கணிப்புகளால் சீரழிந்துவிட்டது

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஈழமுரசுக்கு வழங்கிய விசேட பேட்டி



"சிறிலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டுவரும் வரலாற்றுப் பாடநூல்களில் தமிழர்களின் உண்மையான வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. சிங்கள இனத்தை மேன்மைப்படுத்தக்கூடிய வகையிலே மிகைப்படுத்தியும், தமிழ் மக்களின் வரலாற்றுப் பெருமைகளை மறைத்தும், இழிவுபடுத்தியும், திரிவுபடுத்தியும், எழுதப்பட்டிருக்கின்றது.

இந்த நாடு சிங்கள பௌத்தருக்கு உரிய நாடு என வும் சிங்களத்தில் சிங்கள பிள்ளைகளுக்கு எழுதப்பட்ட சிங்கள வரலாறே மொழி பெயர்க்கப்பட்டு தமிழர்வரலாறு என தமிழ் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. இந்த போலித்தனத்தை மாற்றியமைக்கவும் எமது தமிழ் மாணவர்களுக்கு தமிழர் வரலாற்றை போதிப்பதற்கும், தமிழீழக் கல்விக்கழகம் உழைக்கும்"

- தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு.வே.இளங்குமரன்.

தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, பூகோளரீதியான வாழ்வியல் அடையாளங்கள் என்பன அரச நூல்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. உண்மைகள் மறைக்கப்பட்டு பொய்கள் புனையப்பட்டு தமிழர் வரலாறு மறைக்கப்பட்டுள்ளது.

கேள்வி:– உலகில் ஆயுதப்போராட்டங்களை நடாத்தும் எந்தவொரு போராட்ட அமைப்பும் போர்காலத்தில் மாணவர்களின் கல்வி நலனில் அக்கறை காட்டியது இல்லை. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஒரு கல்விக்கழகத்தை உருவாக்கியதன் நோக்கம் என்ன?

பதில்:– எமது இயக்கம் ஆயுதம் தாங்கிய இராணுவக் கட்டமைப்பினை மட்டும் நெறிப்படுத்தவில்லை தமிழர்களுக்கு என ஒரு தனிநாடு தேவை. தனியான நிர்வாகக் கட்டமைப்புக்கள் தேவை, ஒருநாட்டின் அரசினை நிர்ணயிப்பதற்கு எவ்வாறான கட்டுமானங்கள் தேவையோ, அவ்வாறான அனைத்து நிர்வாகக் கட்டமைப்புக்களையும் உருவாக்கினோம். அதன் அடிப்படையில் தமிழீழ மாணவர்களின் கல்வி நலன் கருதி கல்விக்கழகத்தினையும் உருவாக்கினோம்.

எங்களுடைய மாணவர்களின் கல்வி மூன்று தசாப்தமாக போர்க்கள நடவடிக்கைகளினாலும், இடப்பெயர்வுகளினாலும் சிங்கள அரசுகளின் திட்டமிட்ட நயவஞ்சக சதி நடவடிக்கையினாலும், சீரழிந்து விட்டது. அதனை மீண்டும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எமக்குள் இருக்கும் வளங்களை சீரானமுறையில் பங்கீடு செய்து, ஒழுங்கமைத்து சகல மாணவர்களுக்கும் சமகல்வி வாய்ப்பினை வழங்குவதை மையமாகக் கொண்டு எமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

கேள்வி:– தாயகத்தில் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றிக் கூறுவீர்களா?

பதில்:– தமிழர் தாயகத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது, அதிலும் வன்னியில் ஆசிரியர்கள் பிரச்சினை பெரும் பிரச்சனையாக உள்ளது. பல பாடசாலைகளில் சில முக்கியமான பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை.

மாணவர்களுக்குரிய பாடநூல்கள் மாணவர்களின் தொகைக்கு ஏற்ப கிடைப்பதில்லை, கிடைக்கும் ஒரு தொகுதி நூல்கள் கூட காலம் தாழ்த்தியே அரசு அனுப்பி வைக்கின்றது.

கேள்வி:– மாணவர்களின் தொகைக்கு ஏற்ப பாடசாலைகளில் வளங்கள் இல்லையென பரவலாக விமர்சனங்கள் காணப்படுகின்றது. வளப்பற்றாக்குறைபற்றி உங்கள் கருத்து யாது?

பதில்:– வன்னியில் ஆய்வுகூட வசதிகள் ஒரு பாடசாலையில் கூட முழுமையாக இல்லை. வளமான நூலக வசதி இல்லை. கதிரைகள் இல்லை. மேசைகள் இல்லை. மாணவர்கள் பாயை விரித்து நிலத்தில் இருந்தே இன்றும் கற்கவேண்டிய அவலம் காணப்படுகின்றது.

பாடசாலைகளில் கட்டிடங்கள் இல்லை. மாணவர்கள் மரநிழல்களில் இருந்தே கற்கின்றார்கள். பாடசாலைகளில் இன்று உள்ள கட்டிடங்களில் 60 வீதமானவை மண்ணால் கட்டப்பட்டவை, ஓலைகளால் வேயப்பட்டவை, தற்காலிக கொட்டகைகளாகவே காணப்படுகின்றது.

மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் இல்லை, ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம் இல்லை. சிறுவர்கள் கற்பதற்கு பொருள், விளையாட்டு உபகரணங்கள் இல்லை. பாடசாலைகளில் கணனி வசதிகள் இல்லை. கணனியை இயக்குவதற்கு மின்சாரமும் இல்லை இவ்வாறாக மாணவர்கள் பல வளப்பற்றாக் குறைகளை எதிர்நோக்குகின்றார்கள். வளப்பற்றாக்குறை என்பது தொடர் கதையாகவே உள்ளது.

கேள்வி:– போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு தமிழீழ கல்விக்கழகம் எவ்வாறான செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

பதில்:– பயிற்றுவிக்கப்படாத ஆசிரியர்களுக்கு கல்விக்கழகம் பயிற்சிகளை வழங்கிவருகின்றது. ஆசிரியர்களுக்கான கைநூல்களை தயாரித்து வழங்கி வருகின்றோம். எம்மிடம் இருக்கும் ஆசிரியர் வளத்தினை உரிய முறையில் முழுமையான வகையில் பயன்படுத்தக் கூடியவாறு ஏற்ற ஒழுங்குகளையும் பங்கீடுகளையும் செய்கின்றோம்.

கேள்வி:– புலிகளின் ஆளுமைக்கு உற்பட்ட பிரதேசங்களில் அரசாங்கத்தால் பாரபட்சம் காட்டப்படுவதாக கூறப்படுகின்றது பற்றி உங்கள் கருத்து யாது?

பதில்:– சிங்கள அரசுகள் இலங்கைத்தீவு ஒருநாடு, ஒரு அரசு, ஐக்கிய இலங்கை என்று கூறி வந்தாலும் தமிழ் மாணவர்கள் விடயத்தில் மாற்றான் தாய்பிள்ளை என்ற மனப்பாங்கிலேயே செயற்படுகின்றது. வன்னியை கல்வியில் மட்டுமல்ல சகல விடயங்களிலும் அரசு புறக்கணிப்பினை செய்கின்றது.

அரசாங்கத்தில் புறக்கணிப்புக்களினால் தமிழ் மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்திலேயே அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இலகுவான வழியிலும் சீரான வகையிலும் கற்கக் கூடிய சாதனங்கள் இல்லாமையால் எமது மாணவர்கள் சிரமப்படுகின்றனர். அதனை நிவர்த்தி செய்ய தமிழீழக் கல்விக்கழகம் பலமுயற்சிகளை தன்னால் இயன்ற வகையில் செய்து கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசு கல்வித் தரப்படுத்தலை மேற்கொண்டு வந்ததன் விளைவே தமிழர்களின் ஆயுதப்போராட்டம் தோன்றக்காரணமாக அமைந்தது. ஆகவே அரசு தொடர்ந்தும் தமிழ் மாணவர்களின் கல்விப்பாதைக்குத் தடைக்கல்லாக இருக்குமானால் தமிழ் மாணவர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்து போராட வேண்டிய தேவை ஏற்படும். அந்தச் சூழலை அரசே தோற்றுவிக்கும்.

பொதுவாக தமிழர்தாயகப் பகுதியை அரசு புறக்கணித்தே வருகின்றது. அதிலும் வன்னிப் பகுதியை முற்றாகவே புறக்கணிக்கின்றது. வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு தேவைக்கு ஏற்ற வகையில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்வதில்லை. எப்போதாவது இருந்து விட்டு சிறு தொகை பணத்தை ஒதுக்கும். அதுவும் சீராக கிடைப்பதில்லை. அதனைக் கொண்டு போரினால் இடிந்து தரைமட்டமாகக் கிடக்கும் பாடசாலைகளை புணரமைப்பு செய்ய முடியாது.

கேள்வி:– ஆசிரியர் பற்றாக் குறையைத்தீர்ப்பதற்கு கல்விக்கழகம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பதில்:– குறிப்பிடத்தக்களவு ஆசிரியர்களுக்கு இயக்கத்தின் நிதியில் இருந்து ஊக்குவிப்புச்கொடுப்பனவை வழங்கி வருகின்றோம். பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவர்களிடம் இருந்தும் தலா 10 ரூபா வீதம் சேகரித்து தொண்டர் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கி வருகின்றோம்.



கேள்வி:– தமிழீழக் கல்விக்கழகம் சில நூல்களை வெளியிட்டுள்ளதாக அறிகின்றோம். அதுபற்றி?

பதில்:– தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, பூகோள ரீதியான வாழ்வியல் அடையாளங்கள் என்பன அரச நூல்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. உண்மைகள் மறைக்கப்பட்டு பொய்கள் புனையப்பட்டு தமிழர் வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. எமது பண்பாட்டு, வரலாற்றுத் தடையங்களையும், எச்சங்களையும் சேகரித்து தமிழர் வரலாற்றுக்கு புத்துயிர் கொடுக்கும் நோக்கில் 6ம் 7ம் 8ம் ஆண்டு மாணவர்களுக்கு சமூகக்கல்வியும் வரலாறும் எனும் நூல்களை வெளியிட்டிருக்கின்றோம். இதில் அரச பாடத்திட்டத்தில் திரிவுபடுத்தி

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

நேர்காணல் **ச.சங்கரன்**

சர்வதேச விருப்புக்களை கேலிக் கூத்தாக்கும் இஸ்ரேலிய நகர்வுகள்

மத்திய கிழக்கில் இஸ்ரேல் பலமுள்ள நாடாக இருக்கலாம். அப்பிராந்தியத்தின் அரபுநாடுகள் சகலவற்றிலும் பார்க்க பாதுகாப்பு செயற்பாடுகளில் அதியுச்ச கவனத்தை இஸ்ரேல் செலுத்துவதுடன் அதற்காக மிக அதிகமான பணத்தை செலவிடுவதும் உண்மைதான். ஆனால், அதற்காக சர்வதேச சமூகத்தின் விருப்புக்களை கேலிக்கூத்தாக்க முனையக்கூடாது. இஸ்ரேலின் அண்மைக்கால நடவடிக்கைகள் யூத சமூகம் மீண்டும் பாரதூரமான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருவதையும் வெகுவிரைவில் அவர்கள் இஸ்ரேலில் குடியேறவேண்டும் என்பதையும் பொய்யான பிரச்சாரங்களின் மூலம் வெளிப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுவருகின்றது. உலகின் பல நாடுகளின் பொளாதார கொள்கை வகுப்பாளர்களாக யூதர்கள் இருந்துவருவதை யாராலும் மறுக்க முடியாது. இடம்பெயர்ந்த யூத சமூகம் இஸ்ரேலில் எப்படி வாழ்கின்றதோ அதைவிட மேலான வாழ்க்கை வசதிகளுடன் அநேகமான ஏனைய நாடுகளில் அவர்கள் வாழ்கின்றனர்.

ஒருபுறம் புதிய யூதக்குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்படுவதை தடுக்கப்போவதாக கூறும் இஸ்ரேலிய அரசு மறுபுறம் 600 புதிய குடியிருப்புக்களை ஏற்படுத்தும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய சுவர்கட்டுமான நடவடிக்கைகள் எத்தனையோ விதமான எதிர்ப்புக்களையும் மீறத் தொடர்கின்றது. இச்சுவர் எழுப்புதல் உலக நடைமுறைக்கு எதிரானது என்று ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகின் முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய பல நாடுகளும் கூறியுள்ள நிலையில், அவை எவற்றையுமே காதில் வாங்கிக்கொள்ளாது தொடர்ந்தும் பிரிவுச் சுவர் கட்டுதல் நடந்து வருகின்றது. இஸ்ரேலின் திட்டப்படி மேற்கொள்ளப்படும் இந்த பிரிவுச் சுவர் வட பகுதியில் பாலஸ்தீனர்களுக்கென சர்வதேச சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு எழுப்பப்படும் இச்சுவரால் பாலஸ்தீனர்களது நிலப்பகுதியில் ஒருபுறமும் அவர்களது குடியிருப்புக்கள் மறுபுறமும் பிரிகின்றன. ஆக வேதான் இதனை பிரிவுச்சுவர் எனக் கூறுகின்றோம். அமெரிக்க நிர்வாகத்தின் கோரிக்கையையும் மீறி மேற்குக்கரையின் சுமார் 150 சதுரக் கிலோ மிற்றர் நிலப் பகுதி கிழக்குடன் இணைக்கப்படுகிறது. இங்க மின்சார பாதுகாப்பு வேலிகள் ஏற்படுத்தப்பட்டு புதிய குடியிருப்புக்கள் நிர்மானிக்கப்பட்டு வருகின்றன.

ஒருபுறம் இஸ்ரேலியப் பிரதமர் அமெரிக்காவிடமும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிடமும் தான் யூதக்குடியிருப்புக்களை ஏற்படுத்தப்படுவதை நிறுத்தி பாலஸ்தீன அகதி முகாம்களில் வாழும் மக்களை அவர்களின் இடங்களுக்கு திரும்பிச்செல்லும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக கூறிக்கொண்டு மறுபுறம் மேற்குக்கரையில் மீண்டும் யூதக் குடியிருப்புக்களை அமைக்க ஆரம்பித்திருப்பது மிகவும் கேலிக் கூத்தான ஒரு விடயமாகும். உலகின் பல நாடுகளிலும் உள்ள யூத சமூகத்தினரது மயானங்கள் இனந்தெரியாத நாசி ஆதரவாளர்களால் நாசப்படுத்தப்பட்டு வருவதாக ஒருவகைப் பிரச்சாரம் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இஸ்ரேல் மீது ஆத்திரம்கொண்ட அரபு இளைஞர்களாலோ அல்லது யூத சமூகத்தின் மீது ஆத்திரம்கொண்டவர்களாலோ இவ்வகையான நாசகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால், இதனை இஸ்ரேலிய எதிர்ப்பு நடவடிக்கையாகவோ ஒட்டுமொத்த யூத இனத்திற்கு எதிரான நடவடிக்கையாகவோ வெளிக்காட்டி உலகை ஏமாற்றிக்கொண்டு, இஸ்ரேல் தனது மக்களின் பாதுகாப்பின்மையை நியாயப்படுத்த முயல்கின்றது.

அதன் ஒரு வடிவமாக பிரான்சில் உள்ள யூத மக்கள் உடனடியாக இஸ்ரேலில் வந்து குடியேற வேண்டும் என்று பிரதமர் சறோன் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்குக்காரணம் மயானங்களை நாசப்படுத்தியதாக இருக்கலாம். ஆனால், பிரான்சின் ஒருசில பகுதிகளில் யூத மயானங்கள் மட்டுமன்றி பிரெஞ்சுக் கிறிஸ்தவ மயானங்கள் கூட நாசப்படுத்தப்பட்டுள்ளன. இஸ்ரேலியப் பிரதமர் ஆரியல் சறோனது பொறுப்பற்ற பேச்சுக்களால் அவரது பிரெஞ்சுப் பயணம் கேள்விக்குறியாகியுள்ளது. தனது கூற்றிற்கு சரியான விளக்கத்தை அவர் அளிக்கும் வரை பிரான்ஸ் அவரை வரவேற்காதெனக் கூறியுள்ளது. பிரான்சின் யூத சமூகம் என்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகாத ஒன்று என்பது உண்மை. அண்மையில் ஐரோப்பியர்களை பெரும்பான்மையாகக்கொண்ட ஒரு நாட்டின் யூத மயானம் ஒன்று இனந்தெரியாத சிலரால் நாசமாக்கப்பட்டது. அங்கிருந்த நினைவு தூபிகள் உடைத்து நொருக்கப்பட்டன. இச்சம்பவத்தின் சிறிது நேரத்தில் சிலரை அந்நாட்டின் பொலிசார் கைது செய்தனர். அவர்கள் இஸ்ரேலின் உளவாளிகள் என்பது பின்னால் தெரியவந்தது. இப்படி திட்டமிட்ட இரகசிய நடவடிக்கைகளை இஸ்ரேல் மேற்கொண்டுவருவதானது புதியவையல்ல. ஆனாலும், தனது சமூகத்தின் பாதுகாப்பை அச்சுறுத்தலாக்கி மேற்கொள்ளும் பிரச்சாரம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

அடுத்ததாக, இஸ்ரேல் அமெரிக்காவிடம் தன்னைச் சூழவுள்ள நாடுகளுக்கு ஏவுகணைகளை விற்பனை செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை விடுத்து



வருகின்றது. அமெரிக்காவின் வானில் இருந்து வானுக்கு ஏவக்கூடிய 'அம்ராம்' என்ற ஏவுகணை தொகுதியொன்று ஜோர்தானுக்கு அமெரிக்காவால் விற்பனை செய்யப்பட்டது. இவ் ஏவுகணைத் தொகுதி ஜோர்தானுக்கு உடனடியாக அனுப்பப்படக்கூடாது என்ற கோரிக்கையை இஸ்ரேலிய அரசு முன்வைத்துள்ளது. அமெரிக்க காங்கிரசிடம் இவ்விற்பனை விவகாரத்தை உடனடியாக காலம்தாழ்த்துமாறும், அப்படி மேற்கொள்ளப்படக்கூடிய ஆயுத விற்பனைகள் எதுவும் தனது நாட்டின் பாதுகாப்பு ஸ்திர நிலையை மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இல்லாது செய்துவிடும் என்றும் கோரியுள்ளது. எகிப்துக்கு அவ்வகையான ஏவுகணை விற்பனை மேற்கொள்ளப்படுவதை தடுத்து நிறுத்தி அமெரிக்காவுடன் தாமொரு சமரசத்திற்கு வரமுடியும் என இஸ்ரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர். அதேபோன்று, அவ்வகை ஏவுகணைகள் இஸ்ரேலை நோக்கி பயன்படுத்த முடியாதவாறான தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் தம்மால் மேற்கொள்ள முடியும் என்றும் மேற்படி அதிகாரி கூறினார்.

1996ஆம் ஆண்டு மத்திய கிழக்கில் ஜோர்தானுடன் இஸ்ரேல் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்தது. ஆனாலும், இப்போது ஏன் ஜோர்தானிற்கு அம்ரான் ஏவுகணைகளை அமெரிக்கா விற்பதை அந்நாடு தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை கொடுத்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு விற்பனை செய்யப்படும் நவின ஆயுதங்கள் தமது பாதுகாப்பிற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பதில் இஸ்ரேல் நீண்ட காலமாகவே அவதானமாக இருந்து வந்துள்ளது. இஸ்ரேலின் பாதுகாப்பு ஸ்திர நிலைக்கு ஒரே ஆதரவாக அன்று முதல் இருந்து வருவது அமெரிக்காவே ஆகும். ஆனால், இஸ்ரேலின் பிரிப்புச் சுவர் நடவடிக்கையினால் அமெரிக்காவின் ஆத்திரத்தையும் அது தேடிக்கொண்டுள்ளது. கடந்தவாரம் இஸ்ரேலின் இக்கட்டுமானம் பற்றி முடிவெடுக்கும் வகையிலான வாக்கெடுப்போன்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நடந்த பொழுது அதில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இஸ்ரேலுக்கு எதிராகவே வாக்களித்திருந்தனர். ஆனாலும், இப்படியான ஒரு நடவடிக்கையை மட்டுமே வைத்துக்கொண்டு இஸ்ரேலை எடைபோட முடியாது. அங்கு அமைக்கக்கூடிய பாலஸ்தீனர்களை ஆதரவாளர்களாக கொண்டு ஏற்படுத்தப்படும் ஒரு அரசே மத்திய கிழக்கில் இஸ்ரேலின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். அதுவே சாத்தியமானதும் கூட.

- உதயன்

ஆசிய கோப்பையை சிறீலங்கா கைப்பற்றியது

ஆசிய கோப்பை இறுதிப் போட்டியில் சிறீலங்கா அணி 25 ரன் வித்தியாசத்தில் இந்தியாவை தோற்கடித்து ஆசிய கோப்பையை கைப்பற்றியது. 6 நாடுகள் பங்கேற்ற ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி சிறீலங்காவில் நடைபெற்றது. இதன் இறுதி ஆட்டத்தில் இந்தியா – சிறீலங்கா அணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மோதின.

இந்த ஆட்டத்தில் இந்தியா மற்றும் சிறீலங்கா தரப்பில் 2 மாற்றங்கள் செய்யப்பட்டு இருந்தன. இந்தியா தரப்பில் பார்த்தீவ் பட்டேல், கும்பிளே நீக்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக வி.வி.எஸ்.லட்சுமணும், நெக்ராவும் அணியில் சேர்க்கப்பட்டு இருந்தனர். சிறீலங்கா தரப்பில் ஜெயந்தா, மலிங்கா ஆகியோர் நீக்கப்பட்டு முரளீதரன் மற்றும் வாஸ் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டு இருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறீலங்கா அணியின் தொடக்க வீரர்களாக, குணவர்த்தனேயும், ஜெயசூர்யாவும் களம் புகுந்தனர். தொடக்கம் முதல் எதிர்பார்த்தது போல் ஜெயசூர்யா அதிரடியாக ஆடினார். 28 ஓட்டங்களை எட்டிய நிலையில் ஜெயசூர்யாவின் ஆட்டத்திற்கு பதான் முட்டுக்கட்டை போட்டார். 20 பந்துகளை சந்தித்த ஜெயசூர்யா 2 பவுண்டரிகளுடன் 15 ரன் எடுத்து எல்.பி.டபிள்யூ முறையில் அவுட் ஆனார்.

பின்னர் சிறிது நேரத்தில் மற்றொரு தொடக்க வீரரான குணவர்த்தனே 8 ரன் எடுத்திருந்த நிலையில் நெக்ரா பந்தில் அவுட் ஆகினார். 3வது விக்கெட்டுக்கு அதப்பட்டு – சங்கக்கரா ஜோடி பொறுப்புணர்ந்து ஆடியது. 2 விக்கெட் இழப்புக்கு 37 ரன் எடுத்து இருந்தது. தொடக்கத்தில் சங்கக்கரா ரன் சேர்க்க திணறினார். மறு முனையில் நின்ற கேப்டன் அதப்பட்டு வழக்கத்துக்கு மாறாக அதிரடியாக ஆடினார். 11வது ஓவரில் அதப்பட்டு 3 பவுண்டரிகளை விளாசினார். 11.2 ஓவரில் சிறீலங்கா 50 ரன்னை கடந்தது. 23வது ஓவரில் சிறீலங்கா 100 ரன்னை கடந்தது. 26.1 ஓவரில் சங்கக்கரா மீண்டும் ஒருமுறை அவுட்டில் இருந்து தப்பினார். இந்த முறை அவர் 38 ரன் எடுத்திருந்த போது ரன் அவுட்டில் இருந்து தப்பினார். சங்கக்கராவை அவுட் ஆக்க கிடைத்த இரண்டு எளிய வாய்ப்பையும் இந்திய அணியினர் கோட்டை விட்ட பின்னர் சிறீலங்காவின் ரன் வேகமாக உயரத் தொடங்கியது.

73 பந்துகளை சந்தித்த சங்கக் கரா 6 பவுண்டரிகளுடன் அரை சதத்தை தொட்டார். சங்கக் கராவை தொடர்ந்து 30.4 ஓவர்களில் அதப்பட்டும் அரை சதத்தை கடந்தார். 69 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் அதப்பட்டு அரை சதத்தை எட்டினார். 32.1 ஓவரில் ஷேவாக் வீசிய பந்தில் 53 ரன் எடுத்து இருந்த சங்கக்கரா கிளீன்போல்டு ஆனார். சங்கக்கராவை தொடர்ந்து ஜெயவர்த்தனே, அதப்பட்டுடன் இணைந்தார். 33.1 ஓவரில் ஸ்கோர் 150ஐ தொட்டது. இதற்கு அடுத்த பந்தில் ஜெயவர்த்தனே ரன் கணக்கை தொடங்கும் முன்னரே தெண்டுல்கர் பந்தில் அவுட் ஆனார்.

இரண்டு முக்கிய விக்கெட்டுகள் அடுத்தடுத்து விழுந்ததை தொடர்ந்து வீறு நடை போட்டுக் கொண்டிருந்த சிறீலங்கா அணி தள்ளாட தொடங்கியது. 3ம் நிலை பந்து வீச்சாளர்களான ஷேவாக் மற்றும் தெண்டுல்கரின் பந்து சூறாவளியாக சுழன்றது. தூரண்போல் நிலைத்து நின்று ஆடிக் கொண்டிருந்த அதப்பட்டு 65 ரன் எடுத்திருந்த நிலையில் ரன் அவுட் ஆகினார். பின்னர் வந்த தில்சான் 22 ரன்னிலும், சந்தானா 8 ரன்னிலும், மகரூப் 9 ரன்னிலும், வாஸ் 6 ரன்னிலும் அவுட் ஆகினர்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் சிறீலங்கா 9 விக்கெட்டுகளை இழந்து 228 ரன் எடுத்தது. இந்தியா தரப்பில் பதான், தெண்டுல்கர் ஆகியோர் 2 விக்கெட்டுகளையும், ஷேவாக், ஹர்பஜன், நெக்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

229 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் இந்திய அணி ஆட்டத்ததைத் தொடங்கியது. தொடக்க வீரர்களாக ஷேவாக்கும் தெண்டுல்கரும் களம் இறங்கினர். முதல் ஓவரின் முதல் பந்தில் பவுண்டரி அடித்து ஷேவாக் ரன் கணக்கை தொடங்கினார். 15 ஓட்டங்களை எட்டிய நிலையில் 5 ரன் எடுத்திருந்த ஷேவாக் வாஸ் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் அவுட் ஆனார்.

பின்னர் வந்த கங்குலி 4 ரன்னிலும், லட்சுமண் 12 ரன்னிலும், டிராவிட் 16 ரன்னிலும் அடுத்தடுத்து அவுட் ஆகினர். டிராவிட் அவுட் ஆன போது அணியின் ஸ்கோர் 4 விக்கெட் இழப்புக்கு 96 ஆக இருந்தது. ஒரு முனையில் விக்கெட்டுகள் சரிந்த நிலையிலும், மறு முனையில் நட்சத்திர வீரர் தெண்டுல்கர் மட்டும் நிலைத்து நின்று ஆடி அரை சதம் அடித்தார். 68 பந்துகளை சந்தித்த தெண்டுல்கர் 5 பவுண்டரி ஒரு சிக்சருடன் அரை சதத்தை பூர்த்தி செய்தார். தெண்டுல்கரை தவிர மற்ற வீரர்கள் அனைவரும் பந்தை சந்திக்க தடுமாறினர். சிறீலங்கா அணியினரின் நேர்த்தியான பந்து வீச்சுக்கு மற்ற வீரர்களை அடுத்தடுத்து விக் கெட்டுகளை பறி கொடுத்தனர். யுவராஜ்சிங் 8 ரன்னிலும், கநப் 5 ரன்னிலும், தெண்டுல்கர் 74 ரன்னிலும் அவுட் ஆகினர். கடைசி கட்டத்தில் வந்த ஜாகீர்கானும், ஹர்பஜன்சிங்கும் அதிரடியாக ஆடினர். ஆனால் 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்து எதற்கு' என்பது போல் இந்திய அணியினரின் ஆட்டம் இருந்தது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரின் முடிவில் இந்தியா 203 ரன்னே எடுத்தது. இதனால் இந்திய அணி இறுதிப் போட்டியில் தோற்று ஆசிய கோப்பையை கோட்டை விட்டது. 25 ரன் வித்தியாசத்தில் சிறீலங்கா வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

தொடர் நாயகன் விருது சிறீலங்கா வீரர் ஜெயசூர்யாவுக்கும், ஆட்ட நாயகன் விருது சிறீலங்கா கப்டன் அதப்பட்டுக்கும் வழங்கப்பட்டன.

சூரியகந்த, யாழ்நூலகம், பட்டலந்த, மிலேனியம் சிற்றி... கறுப்பு யூலை!

'நரகம்' என சிறீலங்காவின் தலைநகர் கொழும்பு வர்ணிக்கப் படக்காரணமான வன்கொடுமைகள் நிகழ்ந்தேறி 21 ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும் அந்த 'நாட்கள்' விளைவித்த துயரமும் சீற்றமுமான உணர்வுகள் தமிழினத்தின் மனதிலிருந்து வடிந்து போய்விடவில்லை. அதேவேளை அன்றைய கொழும்பு அரசியலாளர்கள் பெரும்பாலும் இல்லாமற் போய்விட்டார்கள். அவர்களின் அடுதொடர்ந்த அரசியலாளர்கள் கோலோச்சும் இன்றைய சிறீலங்காவிற் கூட 83 யூலையின் 'வன்கொடுமை மனப்பாங்கு' பெருமளவுக்கு அற்றுப் போய் விடவில்லை. அவ்வாறு மாறிவிட்டது எனத் தமிழர்கள் நம்புவதற்கும், ஏதும் ஏதுக்கள் இல்லாத துன்பியலே நிலவுகிறது.

இந்தச் சூழலில் கடந்த 23ம் திகதி சிறீலங்காவின் தற்போதைய சனாதிபதி ஒரு ஸ்ரண்ட் அடித்திருக்கிறார். கைதேர்ந்த 'கொலிவூட் ஸ்ரண்ட்' நடிகர்களே மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு சந்திரிக்கா அம்மையார் யூலை 83ப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

2001ம் ஆண்டு யூலை 21ம் திகதி சந்திரிக்கா அம்மையாரால் நியமிக்கப்பட்ட, யூலை 83 கலவரங்களில் பாதிக்கப்பட்டோர் குறித்து ஆராய்வதற்கான ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில், 30 பேருக்கு சனாதிபதி மாளிகையில் வைத்து யூலை 23ல் நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழு 923 பேருக்கு 7.32 கோடி ரூபா நட்டஈடாக வழங்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளதுடன் 18,000 பேரின் உடமைகள் சேதமாக்கப்பட்டதுடன் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போது சந்திரிக்கா அம்மையார் கையேந்தியுள்ள ஆயுதம் யூலைக் கலவரம். இந்தக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களிடம் அதற்குக் காரணமானவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்பதே அவர் வலியுறுத்தும் முக்கிய விடயம். அதற்காக, இன்றைய அரசுத் தலைவர் என்ற முறையில் அவர் பகிரங்க மன்னிப்பும் கேட்டுள்ளார்!

யூலை 22ம் திகதி கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகச் சந்திரிகா அம்மையார் கலந்து கொண்டார். அந்த மேடையில், ஐ.தே.கட்சியின் தளங்களில் ஒன்றான கண்டியின் பிரபல பாடசாலை ஒன்றின் மேடையில் கறுப்பு யூலையைக் கையிலெடுத்த சந்திரிகா அம்மையார், ஒரு அரசியற் சிலம்பமே ஆடிவிட்டார். அங்கு அவர் ஆற்றிய உரையின் சில பகுதிகளை இங்கு நாங்கள் அலசுவோமா வாசகர்களே...

'30 வருடங்களுக்கு முன்னர் வடக்கிலும் தெற்கிலும் வன்முறைக் கலாசாரம் உருவானது. இதன் உச்சக்கட்டமே கறுப்பு யூலைக் கலவரமாகும். ஆனால் இவ்வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் இதுவரை மன்னிப்புக் கோரவில்லை. இனக்கலவரத்தினால் ஏழு இலட்சம் தமிழ் மக்கள் இந்நாட்டை விட்டு வெளியேறினார்கள். இதன் காரணமாக சிறந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், மற்றும் சிவில் உத்தியோகத்தர்களை எம் நாடு இழக்க நேர்ந்தது துரதிஸ்ரவசமானதாகும். எனவே தமிழ் மக்களிடம் நாம் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டுள்ளோம்.'

இந்தக் கூற்றானது இனப்பிரச்சினையின் தோற்றுவாயை ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்துக்குள் குறிப்பாக 70களின் நடுக்கூற்றிற்குள் மட்டுப்படுத்தி விடும் கபட நோக்கமுடையது. அப்படியாயின் 56ம் ஆண்டுத் தனிச்சிங்களச் சட்டமும், சத்தியாக்கிரகிகள் காலிமுகத்திடலில் சிங்களக் காடையர்களால் அடித்து உதைக்கப்பட்டதும், 58 இனக் கலவரமும் எங்கே போயின? 58ம் ஆண்டுக் கலவரம் நிகழ்ந்து கொண்டிருந்த போது பிரதமரான SWRD பண்டாரநாயக்காவிடம் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தும்படி கோரப்பட்டபோது 'Let's they taste it' எனப் பதிலளித்தார் என்பதை நாம் எப்படி மறக்கமுடியும்? கொதிக்கும் தார்ப் பீப்பாக்களுக்குள் குழந்தைகள் வீசப்பட்ட குரூரத்தை எப்படி மறக்க முடியும்? உண்மையில் இந்தக் கொடூரங்களே தன்னைப் போராட்டப் பாதைக்குள் இழுத்துவிட்டன என்பதைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்திருப்பதை இதில் வைத்து ஒப்பு நோக்குங்கள்.

சிங்கள சிறீ அமுலுக்கு வந்ததும், அதை எதிர்த்துத் தமிழ் அரசியலாளர்கள் போராடியபோது தமிழ்ப் பெண்களின் மார்புகளில் சிங்கள சிறீ குத்தியதை தமிழினம் மறந்துகள்'

உண்மைதான். அவர்கள் வன்முறை மூலமே தமிழர்களைத் தீர்த்து விட நினைத்தார்கள். ஆனால், அரசியல் வன்முறையைத் தீர்த்து விட அவர்கள் அரச வன்முறையை ஏவி விட்டது யார் மீது? கொழும்பிலும் தென்பகுதிகளிலும் வாழ்ந்த அப்பாவித் தமிழர்கள் மீதல்லவா? இதனைச் சந்திரிகா ஏன் புட்டுக் காட்டவில்லை?

ஏனெனில் அவர் அந்த வன்முறைகளையெல்லாம் தூக்கி வீசி விடக்கூடியவகையிலான 'அப்பனுக்கு அப்பனான' வன்முறைகளையல்லவா தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டார்? 'சமாதானத்துக்கான போர்' என்று ஒரு தத்துவத்தையல்லவா அவர் சர்வதேச சமூகத்தின் கண்களின் மீது ஒட்டி விட்டார் 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று எக்களித்த ஜே.ஆர் எம்மாத்திரம்.

ஜே.ஆர் 83 யூலையில் தமிழர்களை தெற்கிலிருந்து அவர்களின் தாயக பூமிக்கு விரட்டி விட்டார். சிதம்பரம் கப்பலிலும் லங்காராணியிலும் காங்கேசன்துறைக்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். ஆனால் சந்திரிகாவோ தமிழர்களை யாழ்ப்பாணத்திலிருந்துமல்லவா விரட்டினார்? ஏழு இலட்சம் தமிழர்கள் நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்தமைக்கு மாரடித்துக் கொள்ளும் சந்திரிக்கா அம்மையார், ஆறு இலட்சம் தமிழர்களின் வாழ்வைப் பிடுங்கி மரத்தடிகளில் தவிக்க விட்டதுமல்லாமல் அவர்கள் மீது உணவுத் தடையையும் பெரும் விடுமெனச் சந்திரிகா அம்மையார் நினைக்கின்றாரா? இவற்றைச் சந்திரிகா வசதியாக மறைக்க முற்படுகிறார். ஏனெனில் இவை நிகழ்ந்தது அவரின் தந்தையினதும், தாயினதும் ஆட்சிகளில் அல்லவா?

அதேவேளை வன்முறைக் கலாச்சாரம் வடக்கிலும் தெற்கிலும் உருவானதாக அம்மையார் தெரிவிப்பது எவ்வளவு பாரதூரமான பொய் வாசகர்களே? வன்முறைக் கலாசாரமானது தெற்கினால் வடக்கிற்கும் கிழக்கிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதே வரலாறல்லவா? எப்படி இளம் மாணவர்கள் மத்தியில் ஒரு நாட்டின் தலைவர் இதனைத் திருப்பிப் போட்டார் பார்த்தீர்களா?

'வன்முறை மூலம் இந்த நாட்டை ஆளலாம் என்று நினைத்தார்கள். அதன் காரணமாகவே இன்றும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. சிலர் தமது உரிமைகளைக் கேட்டபோது வீடுகள் எரிந்து சாம்பராகின. நாரஹேன் பிட்டியவில் வீடுகள் எரிவதை நான் நேரில் பார்த்தேன். எனவே நாம் பின்னோக்கிப் பார்க்கவேண்டும். நாம் தமிழரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

அக்காலத்தில் நாட்டை ஆண்ட தலைவர்கள் நினைத்திருந்தால் இவற்றை நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் வன்முறையை வன்முறையால் தீர்க்க நினைத்தார் யுத்தத்தையுமல்லவா ஏவிவிட்டார். இதற்கு யார் மாரடிப்பார்?

'எமது பிரச்சினைகளை பேச்சு மூலம், உரையாடல் மூலம், கருத்துப் பரிமாற்றம் மூலம் தீர்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். எந்த ஒன்றையும் வன்முறை மூலம் சாதிக்க முடியாது'

உண்மை. மிகவும் உண்மை. அப்படியாயின் நீங்கள் ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் கடந்தும் இடையில் நின்று போய் விட்ட சாதானப் பேச்சுக்கள் ஏன் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை அம்மையார் அவர்களே? சுமாதானப் பேச்சு வார்த்தை பற்றிப் பேசியது போய், இன்று அதன் அடிப்படை இயங்கு தளமான புரிந்துணர்வு உடன்படிக்கையின் நீடிப்புப் பற்றியே எல்லோரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டிய சூழல் யாரால் தோற்றுவிக்கப்பட்டது?

சரி அதெல்லாம் போகட்டும். கிழக்கு மாகாணத்தில் இன்று தங்களுடைய மறைகரங்கள் கருத்துப் பரிமாற்றத்தையா நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன? ஆளை ஆள் நம்ப முடியாத நரக சூழலையல்லவா மட்டக்களப்பில் உங்கள் படைத்துறைப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்படுத்தி வருகின்றனர். உங்களுக்கு சமாதானப் பேச்சில் நம்பிக்கை உண்டென்றால் ஏன் இந்த நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்? சரி உங்களை மீறி அது உருவாகி விட்டதென்றே வைத்துக் கொண்டாலும், சர்வவல்லமை படைத்த நிறைவேற்றதிகார சனாதிபதியாகிய நீங்கள் ஏன் அதை அனுமதிக்க வேண்டும்?

உண்மையில் சந்திரிகா அம்மையாரின் உண்மையான நோக்கம் தமிழரின் காயங்களுக்கு மருந்து தடவுவதல்ல. புளி பூசுவதே. 1994இல் ஆட்சிக்கு வருவதற்கு சந்திரிகா தோண்டியது சூரியகந்தப் புதைகுழியினை, ஆட்சிக்கு வந்த புதிதில் அவர் கையிலெடுத்துக் கொண்டவை 'புத்தகமும் செங்கல்லும்' ஆகும். வெண்டாமரை இயக்கமென்ற பெயரில், 1981இல் எரிக்கப்பட்ட யாழ் நூலக விவகாரத்தை அவர் தூக்கிப் பிடித்தார். ஏனெனில் 1994 சனாதிபதித் தேர்தலில் அவருக்கு எதிராக நின்ற காமினி திசாநாயக்காவின் முகத்தைச் சிதைக்க அவருக்கு யாழ் நூலகம் தேவைப்பட்டது. எனவே தான் வெண்டாமரையின் மீது புத்தகத்தையும் செங்கல்லையும் அடுக்கினார்.

இப்போது தனது பிரதான அரசியல் எதிரியான ஐ.தே.கட்சியினை வீழ்த்த 83 யூலைக் கலவரத்தைத் தூக்கிப் பிடிக்கின்றார் அவ்வளவே. இதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்காவை வீழ்த்த பட்டலந்த சித்திரவதை முகாம் விடயத்தையும், மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சிய விவகாரத்தையும் அவர் உயர்த்தினார். இவையெல்லாம் உண்மையில் அரசியல் 'ஸ்ரண்டு'களேயன்றி வேறெதுவுமில்லை.

சோழியன் குடுமி சும்மா ஆடுமா வாசகர்களே!

எண்ணமே அழிவுக்குக் காரணம்!

கந்தையா நவரேந்திரன்

மனிதர்களிடையே காணப்படும் பாகுபாடே எந்த ஓர் உண்மையான சீர்திருத்தத்திற்கும் பாரிய முட்டுக்கட்டையாக உள்ளது. ஒவ்வொரு பண்பாட்டு முறையும் கலாச்சார முறையும்

மற்றவையை விடச் சிறந்தது என்ற போட்டிச் சிந்தனை மனிதக் குலத்தைப் படுகுழிக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது. நாடுகளோ ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றன. தாங்கள் கொண்டுள்ள கோட்பாடே மற்றவற்றைவிடச் சிறந்தவை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு கோட்பாட்டின் சார்பாளர்களும் தங்களது கோட்பாடே மனிதப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு கோட்பாட்டையும் பாதுகாக்க முனையும் போது அங்கே போட்டி தோன்றுகிறது. உண்மையாகப் பார்க்கப்போனால் எங்களது அரசியற் கலாச்சார முறைகள் எல்லாம் ஒரு வகைப்பாதுகாப்பு முறைகளேயாகும். இது ஒரு திட்டமிட்ட வரையறுப்பாகும். காலப்போக்கில் முழு மனித குலத்தின் பாதுகாப்பைக் காட்டிலும் சிறுசிறு வரையறைகளுக்குட்பட்ட இவற்றின் பாதுகாப்பே முக்கியத்துவம் பெறுகின்றன. எங்களால் உருவாக்கப்பட்ட தொர்ச்சியான இத்தகைய உளவியற் தடையை வலுவுடையதாக ஆக்குவதற்கு இப்பிரிவினையை மேலும் மேலும் ஆழமாக்கிக்கொண்டே இருக்கின்றோம். நாங்கள் இன ரீதியாகவும், சமூக ரீதியாகவும், மத ரீதியாகவும், பண்பாட்டுக் கலாச்சார ரீதியாகவும் வேறுப்பட்டிருந்தாலும், நாங்கள் அனைவரும் உளவியல் ரீதியாக ஒரே மாதிரியானவர்கள். இது உண்மையான நிகழ்வாகும். எம்மை அடிமைப்படுத்தும்- பிரிவுப்படுத்தும் வரையறைகளிலிருந்து எப்படி விடுபடலாம் என்பதே இன்று மனித குலம் எதிர் நோக்கும் உண்மையான பிரச்சினையாகும்.

மனிதர்கள் இப்படி கோட்பாடுகளாய், இனங்களாய், மதங்களாய்ப் பிரிந்து நின்றால் தனி மனிதன் தொலைந்து அல்லவா போய்விடுவான்?

தனியொருவனுடைய அகந்தையே அவனுடைய உணர்வு நிலையாகும்- மனத்தின் விழிப்பு நிலையாகும்.

ஏக்கம், கவலை, மனச்சோர்வு போன்றவை எங்கள் எல்லோருடைய அகங்களுக்குள்ளும் ஊடுருவிப் பரவியுள்ளன.

திட்டவட்டமான பண்பாடு ரீதியாசக் செயற்படும் எண்ணங்களை உள்ளடக்கியதே எங்களது உணர்வு நிலையாகும். நாங்கள் முழுமையாகப் பல திறப்பட்டவர்கள் என்று எங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.



இதனாலேதான் எமது அகத்தின் செயற்பாடுகளின் ஒற்றுமையை அவதானிக்க முடியாமல் இருக்கின்றோம்.

இதற்குத் தடையாய் இருப்பது எமது எண்ணமேயாகும். எனமே எமது அகத்தைக் கொன்ற கொலைக்குற்றவாளி எங்களது எண்ணமேயாகும்.

எண்ணம் இரண்டு முனைகளைக் கொண்ட வாளைப் போன்றது. அதனால் தான் அது ஒரு முனையால் வியக்கத்தக்கத் கட்டடக்கலையையும், சிற்பக்கலையையும், ஓவியக்கலையையும், கவிதைகளையும் காவியங்களையும் படைத்துக் கொண்டு, மறுமுனையால் பெரிய கோயில்களையும், மாயத் தெய்வங்களையும், சடங்குகளையும், சமயச் சித்தாந்தங்களையும், இன வாதங்களையும், சாதிப் பாகுபாடுகளையும், சந்ததிச் சாக்கடைகளையும் உருவாக்குகின்றது.

சரியாக விளக்கிக் கொண்டால் எண்ணமானது அதன் தோற்றக் காலத்திலிருந்து இப்படித்தான் தொழிற்பட்டுக்கொண்டு வருகின்றதென்பது புரியவரும். மனிதனால் அனுபவிக்கப்படும் யாவையும் இறந்த காலத்திலிருந்து வருபவையே. ஞாபகத்தின் எதிர் விளைவே சிந்தனையாகும். இது ஒரு மின் இரசாயன விளைவிற்கு ஒப்பான உடல் சார்ந்த படிமுறையாகும் நினைவின் எதிர் விளைவே எண்ணம். நினைவு அறிவாகும். அறிவு அனுபவமாகும். எனவே தான் மனிதனைச் சதா நச்சரித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு அதனால் விடையளிக்க முடிவதில்லை. ஆனால் அதனால் மனிதனைப் பிரிக்க மட்டும் முடிகிறது.

எண்ணத்தின் அபாயத்தை உணர்ந்த பின் நாம் செய்யக் கூடியது என்ன?

எம்மைச் சிறைப்படுத்தும்- எம்மைச் சிறு சிறு கூறுகளாகப் பிளவுப்படுத்தும்-எமது எண்ணத்திற்கு அப்பால் நாம் எப்படிச் செல்வது? எண்ணத்தை எண்ணத்தால் கட்டுப்படுத்த முடியாது.

எண்ணமே சிந்திப்பவனை உருவாக்கிறது. பின்பு சிந்திப்பவன் எண்ணத்திலிருந்து தன்னைப் பிரிக்கின்றான்

அப்படித் தன்னைப் பிரித்த பின்னர் சிந்திப்பவனாகிய அவனே எண்ணத்தைக் கட்டுப்படுத்தத் தெண்டிக்கின்றான்.

ஆனால் எண்ணமே சிந்திப்பவன். 'நான் சிந்திக்கின்றேன். எனவே நான் அவ்வாறே உள்ளேன்'. நாங்கள் எண்ணத்தின் மூலத்தை எப்பொழுதும் புரிந்து கொள்வதில்லை. ஆனால் எண்ணத்தின் செயற்பாங்கு சுலபமானது. ஒரு பொருள் பற்றியோ ஒரு திறன் பற்றியோ, நாம் பெருவாரியான அறிவைப் பெற்று வல்லுநராகலாம். ஆனால் மனித உறவுகளில்

யதார்த்தத்தைப் பேண இறந்த கால அறிவுக்கு இடமில்லை. எங்களது உறவில் இறந்த கால அனுபவங்கள் உட்புகும் போது பொல்லாப்பும் எதிர்ச்சார்பும் தப்பெண்ணமுமே விளையும். வாழ்க்கையில்- உறவில் எண்ணம் பேரழிவை உருவாக்கும். நம்பிக்கை என்ற போர்வையில் 'எண்ணம்' மனிதனை எப்பொழுதும் அழித்துக் கொண்டிருக்கிறது.

எண்ணத்தின் அசைவால்- எண்ணக்கோடுகளால் வரையப்பட்ட வரைபடத்தை உண்மையாக, சரியாக உற்று நோக்கும் போதே வரையறையற்ற எங்களது உள்நோக்கு எங்களுக்கு ஏற்படும். இந்த வரையறையற்ற உள்நோக்குப் பற்றிப் பிறரிடமிருந்து அறிய இயலாது. பிறர் சொல்லி அது எங்களுக்குப் புரியவும் போவதில்லை.

அவரவரது வரைறையற்ற உள்நோக்கே அவரவருக்கு விழிப்பை அளிக்கும்.

* * *

லெப்.அமலன்.



நீர்வேலி யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் வளமான மண்ணினை உடைய பயிர்கள் செழித்து வளரும் சிறந்த பிரதேசம். வயல் வெளிகளும், வாழைமரங்களும் உயர்ந்த கற்பக தருக்களும் நீர்வேலியை அழகு செய்யும். அங்குதானே நிலாவரை அமைந்துள்ளது.

அந்த அழகு நிறை கிராமத்தில் தான் வேலாயுதம் தம்பதியினருக்கு கடைக்குட்டியாக பிறந்தான் அமலன். அமலனுக்கு பெற்றவர் இட்ட பெயர் நகுலேஸ்வரன். நகுலன் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றான். சிறுவயதிலேயே தன் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் தான் வளர்ந்தான்.

இப்படியே நகுலனின் சிறுபராயமும் உருள, சிறீலங்கா இராணுவத்தின் கொடுமைகள் தலைவிரித்தாடின. கொடுமைகள் கண்டு கொதித்த நகுலனின் மூத்த சகோதரன் 1986 விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டான். இந்நிலையில் 1987ம் ஆண்டு இந்திய இராணுவம் அமைதிப் படையெனக் கூறிக் கொண்டு அகோர முகங்களை மறைந்தபடி, தமிழீழ மண்ணில் நுழைந்தது. தமிழ் மக்கள் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத காலப்பகுதி அது. அமைதிப் படை செய்த அட்டூழியங்கள் தாங்க முடியாமல் நகுலனின் ஒரே ஒரு சகோதரியும் 1987ம் ஆண்டின் இறுதியல் விடுதலைப் புலிகளோடு இணைந்து கொண்டாள். விடுதலைப் போராளிகள் இருவரைக்கொண்ட போராளி குடும்பமாக அவனது குடும்பம் இருந்தது. இப்பிடியே நகுலன் குடும்பம் விடுதலைப் போரின் பக்கம் வியாபித்து நின்றது. அன்று அந்த இக் கட்டுகள் நிறைந்த காலப்பகுதியில் நகுலனின் வீடு விடுதலைப் புலி வீரர்களுக்கு உறைவிடமாயும் மருத்தவ மனையாயும் விளங்கியது. அப்போது அவற்றையெல்லாம் சிறியவனாக இருந்த நகுலன் கவனித்துக் கொண்டிருந்தான்.

அப்படியே காலச்சக்கரம் கடுகதியாய் உருள... விடுதலைப் படையில் வீறு நடைபோட்ட சகோதரன் 1992ல் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான். சகோதரன் வீரச்சாவைத் தழுவ சகோதரி வீட்டின் நிலையறிந்து 1993ல் இயக்கத்தில் இருந்து விலகி வீட்டிற்கு வர, 1995 இல், எங்கள் அமலன் இயக்கத்தில் இணைந்து கொண்டான். நகுலன் தனது ஆரம்பப் பயிற்சியை சரத்பாபு-10 பயிற்சிப் பாசறையில் பெற்றான். பயிற்சி பெற்று முடித்து 'அமலன்' என்ற பெயருடன் வெளியேறியபோது, இம்ரான் பாண்டியன் படையணியில் ஒரு முக்கிய வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

அங்கு அவன் கடமையை செய்து வந்த வேளை, சூரியக்கதிர்-1 இராணுவ நடவடிக்கை எதிரிகளால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டது. அதனால் அமலன் தன் பணியை சாவகச்சேரியில் தொடர்ந்தான். அந்தக் காலகட்டத்தில் தான் அமலனின் தந்தை சுகயீனம் காரணமாக இறந்தார். அதன் பின்பு 1996ல் சூரியக்கதிர்-2 தென்மராட்சி தனது ஆக்கிரமிப்புகளை விரித்து நிற்க, அமலன் வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் சென்றான். சகோதரியை பார்த்துவரச் சென்றவன், சகோதரியை இயக்கத்தில் மீண்டும் இணையும்படி கூறி விட்டு வந்தான்.

தனக்கு வழங்கப்பட்ட கடமையை செய்துகொண்டிருந்த அமலன், பொறுப்பாளரிடம் சென்று `அண்ண சண்டைக்கு என்னையும் விடுங்கோ' என்று அடிக்கடி கரச்சல்படுத்தவான். அதற்கு பொறுப்பாளர் அடுத்த சண்டைக்கு போராளிகளை அனுப்பும் போது உன்னையும் அனுப்புகிறன் என்று பதில் கூறி அனுப்பிவிடுவார்.

1997ம் ஆண்டு சண்டைக்கான சந்தர்ப்பம் அமலனுக்கு கிடைத்தது. தனது ஆசை நிறைவேற சண்டைக்குச் சென்றான். ஜெயசிக்குறு நடவடிக்கை எதிர்ச்சமர் ஒலுமடுப்பகுதியிலும் நடந்தது. அதில் எதிரிகளை எதிர்த்து நின்ற அமலன் தலையிலும் கையிலும் காயமடைந்தான். காயமடைந்தவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் `எப்ப காயம் மாறும், எப்போது என்னை சண்டைக்கு விடுவீர்கள்' என்று தான் அடிக்கடி பொறுப்பாளரிடம் கேட்பான்.

காயம் மாறிய அமலன் மூன்று முறிப்புப் பகுதியில் எம் மண்ணினைக் காக்கச் சென்றிருந்தான். போராளிகள் தான் எல்லைகாட்டும் மைல் கற்கள் ஆகி நின்றார்கள். குண்டு மழை நடுவே நின்று 02.08.1998 அன்று மூன்றுமுறிப்புப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தின் காவலரண்கள் மீதான தாக்குதல் இடம் பெற்றது. அந்த வீரத் தாக்குதலில் அமலனை எதிரியின் ரவை தாக்க அவன் நேர் நின்று போரிட்டு வீரமறவன் நெஞ்சினிலே குண்டேந்தி வஞ்சகப் படைக்கு வரிப்புலியின் மறம் விளக்கி மண்ணினை முத்தமிட்டான்.

வீரன் தான் நேசித்த தமிழீழ மண்ணை முத்தமிட்டு
லெப். அமலனாகி வீரசொர்க்கத்தில் வாழ்கின்றான்.
வீரனே! அமலா!
பாரடா தேசம் உங்கள் பூ முகங்கள் காட்டி மலரும்.
தோழர் நாம் எம் பணி...
உங்கள் கனவுகள் பொய்க்காது.
மெய்யாகும் தமிழீழம். ஒரு போதும்
உம்மை வையகமும் மறக்காது.

- போராளி தென்னவன் (இம்ரான் பாண்டியன் படையணி)

கோடை விடுமுறைக் கிறுக்கு

"ஈரோ மில்லியனர்" அரியகுட்டியார்

சாமம் தாண்டும் வரையும் 'சங்கா-மங்கா-ஜிங்கா' நாடகத்தொடர் பார்த்த அசதியில் துணைவியார் மாருதபுரவீகவல்லி சூடடிக்கும் ரக்ரர் போல ஒலியெழுப்பி குறட்டைவிட்டு குசலாகத் தூங்க தான் மட்டும் வேலைக்கு போகவேண்டிய விதியை நொந்துகொண்டார் அரியகுட்டியர். தன்னை எழுப்பிய அலாம் கடிகாரம் மீது அவருக்கு கோபம் கோபமாக வந்தது.தனக்கு மட்டும் முனிவர்கள்போன்று சபிக்கும் சக்தி இருந்தால் அடுத்த பிறப்பில் இந்த அலாம் கடிகாரத்தை ஊமைக்கோட்டானாக பிறக்கும்படி சாபமிடலாம் என்று கூட அவர் மனம் எண்ணியது.

வழமைபோலவே அறை லைற்றைப் போடாமல் மெல்ல, மெல்ல பாகைமானிக்குக் கணக்குப்பார்த்து நகர்ந்து அலுமாரி, சாமிப்படத்தட்டு ஒன்றிலுமே இடிபடாமல் வெற்றிகரமாக கதவடிக்கு வந்தவர் பின்னர் வெளிலையிற்றைப் போட்டார். நீங்கள் மடைத்தனமென நினைக்கும் அரியகுட்டியரின் இந்தச் செய்கைக்கு காரணம் இல்லாமல் இல்லை.

அறை லைற்றைப் போட்டால் மாருதபுரவீகவல்லி தனது கண்களில் வெளிச்சம்பட்ட சாக்கை வைத்துக்கொண்டு அந்தக் காலை வேளையிலேயே தனக்கு சுகஷ்டநாம அரிச்சனை செய்துகொள்வாள் என்பதும் அவருக்குத் தெரியாத விடயம் அல்ல. கொட்டாவியை விட்டபடி குசினிக்குள் நுழைந்தவர் தேத்தண்ணி போடுவதற்காக லையிற்றைப்போட 'ஓயாத அலை'களின்போது தப்பியோடிய சிறீலங்கா இராணுவம் போல நாலாபுறமும் சிதறியோடின கரப்பான் பூச்சிகள்.

'கரப்பான் பூச்சிகளின் கர்வம்' என்ற தலைப்பில் தென்னிந்தியத் தொலைக்காட்சி நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதில் கரப்பான் பூச்சிகளின் தீங்குபற்றி பிங் பௌடரை முகத்தில் அப்போ அப்பென்று அப்பிய ஒரு நடிகை கண்ணீர் உகுத்து பத்து நிமிடம் வசனம் பேசினாலாவது மாருதபுரவீகவல்லியின் மண்டையில் ஏறிக்கொள்ளுமே என்றுகூட அவர் அந்தக் காலைவேளையிலும் ஆதங்கப்பட்டார். 'சுள்ளான்' என்ற பெயரில் படம் வரும்போது 'நுள்ளான்' என தலைப்பு வைத்து ஏன் படம் எடுக்ககூடாது? என்பதும் அவரது தர்கரீதியான வாதமும் கூட.

வீட்டைவிட்டுப் புறப்பட்டு பாதாளத் தொடருந்து நிலையத்திற்கு வந்தவர், அங்கு கட்டாக வைக்கப்பட்டிருந்த ஒசிப்பத்திரிகைகளில் ஒன்றை தாவி எடுக்கவும் தயங்கவில்லை. தன்னைப்போல காலைவேளையில் கழுவத் துடைக்கப்போகும் பாவப்பட்ட சனங்களோடு ஒருசனமாக தொடருந்தில் ஏறி இருந்தவர், பொழுதுபோக கையிலிருந்த பேப்பரைப் புரட்டினார். எழுதப்பட்டிருந்தவை ஒன்றுமே விளங்காவிடினும் ஜோர்ஜ் புஷ், பின்லாடன், சதாம் போன்ற படங்கள் அனைத்தும் அவருக்கு உலக நடப்பை நன்றாகவே காட்டியது. பக்கங்களை ஏனோதானோ எனப் புரட்டிக்கொண்டிருந்த அரியகுட்டியர் கண்களுக்கு முதல்நாள் குலுக்கப்பட்ட ஈரோ மில்லியோனர் லொத்தர் முடிவுகள் போடப்பட்டிருந்த கட்டம் தெரிந்ததும் அவர் மெய் சிலிர்த்தது. 'அட நானும் நேற்று பின்னேரம் லொட்டோ வெட்டின்னாலெல்லே' நினைப்பு வந்ததும், ஊர் பஸ் கொண்டக்டர்மார் வைத்திருக்கும் சாக்குத்துணி போன்ற பேர்சைத் துலாவி லொட்டோத் துண்டை எடுத்து விரித்தார். அவர் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. துண்டிலிருந்த எண்களும் பேப்பரில் இருந்த எண்களும் சரியாகவே இருந்தன. இது என்ன தூக்கக்கலக்கமோ இல்லை ராத்தியடித்த சுதி மயக்கமோ எனக்கூடக் குழம்பினார். மீண்டும் வடிவாகப் பார்த்தார். எல்லா இலக்கங்களும் சரியாக இருக்க அவர் நாடித்துடிப்பு எகிறியது.

இது உண்மைதானா? இல்லை ஒசிப் பேப்பரிலை ஏதாவது அச்சுப்பிழை வந்திருக்குமோ? அவரால் ஒரு முடிவையும் எடுக்க முடியவில்லை. எதற்கும் லொட்டோ வெட்டிய கடையிலேயேபோய் சரிபார்ப்பது என முடிவு செய்தார். தன்னை யாராவது கவனிக்கிறார்களா என சுற்று முற்றும் பார்த்தார். நல்லவேளையாக எல்லோருமே சிறீலங்காவின் நாடாளுமன்ற பின்வரிசை உறுப்பினர்கள் போல தூங்கிவழிந்து கொண்டிருந்தனர். மெல்ல லொட்டோத் துண்டைப் பத்திரப்படுத்தினார்.

அன்றைக்கென்று பார்த்து தொடருந்து மெதுவாகப் போவதாக அவருக்குப் பட்டது. வழமையாக இறங்கும் இடம் வந்ததும் றெஸ்ரோரன்றில் கழுவித் துடைக்கும் வேலைகளை நினைத்து, கவுணாத்தை வைரவர் கோவில் வேள்விக் கிடாய் போல தயங்கி தயங்கி இறங்கும் அரியகுட்டியர், இன்று பாய்ந்து இறங்கினார். ஓடினார் ஓடினார் லொட்டோ கடை ஓரத்திற்கே ஓடினார். அங்கும் அவருக்கு ஆச்சரியம்! காலைவேளையானாலும் முகம் கழுவாமலே பியர்குடிக்க வந்த ஓரிரு வெள்ளை பெரும் குடிமக்களுக்கு கடையுரிமையாளன் நேற்றுத் தன்கடையில் லொட்டோ வெட்டிய ஒருவருக்கு முதற்பரிசு விழுந்திருப்பதைக் கூறிக்கொண்டிருந்தான்.

நிலைமை பரபரப்பாகப்போவதாக அரியகுட்டியருக்குப்பட்டது. ஒரு கோப்பிக்கு ஓடர் குடித்தவர், ஏதோ சும்மா பார்ப்பதுபோல கடையில் ஒட்டப்பட்டிருந்த பரிசுக்குரிய இலக்கங்களையும் பேப்பரில் இருந்த இலக்கங்களையும் சரிபார்த்தார். சந்தேகமே இல்லை அதற்கு முதற்பரிசுதான். எவ்வளவு தொகை இருக்கும் எனவும் பார்க்கிறார். 20 மில்லியன் ஈரோக்கள். அம்மாடி பதற்றத்தில் ஈரோவை பிராங்கிலும், பிராங்கை இலங்கைக் காசிலும் பெருக்கி பார்ப்பதற்கான வாய்ப்பாடும் பிழைபிழையாக வந்தது. எப்டியும் கோடிக்கணக்கில் வருமே. அடக் கடவுளே இது உண்மைதானா? இவ்வளவு காசையும் நான் என்ன செய்வது? இப்போது உண்மையிலேயே அரியகுட்டியருக்கு வேர்க்கத் தொடங்கியது.

ரெஸ்ரோரன்ற் வேலைக்குப்போக அவர் மனம் எண்ணவில்லை. இனி என்னத்துக்கு இந்தக் கழுவித்துடைக்கிற வேலை. நான் யார்? ஒரு இலட்சாதிபதி அல்லவா? உனக்கு 50 வயதுக்குப் பிறகு ராசயோகம் இருக்குது என பல வருசங்களுக்கு முந்தி ஏழாலைச் சாத்திரி தன்னோடு கூடக் கள்ளடித்துவிட்டு தனக்கு சொன்ன சாத்திரம் பலித்தவிட்டதாக எண்ணினார். கட்டிலில் இருந்து எழும்பி மீண்டும் நித்திரையை முறிப்பதற்காக, செற்றியில் இருந்து குட்டி நித்திரையைக் கொண்டுகொண்டிருந்த மாருதபுரவீகவல்லிக்கு அரியகுட்டியர் வேலைக்குப் போகாமல் வீடு திரும்பியது அதிசயமாகப்பட்டது. நேற்றுவைத்த நீலக்கால் நண்டுக்குழம்புதான் ஏதோ கலக்கல் கோளாறு பண்ணியிருககும் என்ற சந்தேகம். என்ன இருந்தாலும் பட்டப்பகலிலேயே தனக்கு அருந்ததி காட்டி, தன் பித்தவெடிப்புக்காலை தூக்கி அம்மியில் வைத்து தாலிய கட்டிய கணவனல்லவா. காரணத்தை வினாவ அரியகுட்டியர் எல்லாவற்றையுமே கக்கிவிட்டார்.

கோட்டை முனியப்பர் மீது சத்தியம்வாங்கி இந்த விசயம் அரியகுட்டியர் நண்பனான பேரம்பலம்குட்டி என்ற பேய்க்குட்டிக்கும் சொல்லப்பட்டது. மாருதபுரவீகவல்லியின் இரகசிய யோசனைப்படி சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் சூறும் இராணுவ இழப்புக்கள் போல பரிசுத்தொகை அரைவாசியாகக் குறைத்துச் சொல்லப்பட்டாலும் அத்தொகையைக் கேட்டே பேய்க்குட்டி வாயைப் பிளந்தான். இப்போது எல்லாருக்கும் உள்ள பிரச்சினை என்னவென்றால் எப்படி பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்வது என்பதுதான். இவர்தான் பரிசுக்குரியவர் எனத் தெரிந்துவிட்டால் யாராவது தங்களைக்கடத்திக்கொண்டு சென்றுவிடுவார்களோ எனவும் கலங்கினர். தனது பிள்ளைச் செல்வங்களான கோகர்ணபதியும், லைலஜோதிகாவும், சிம்ரசினேகாவும் கயிறுகளால் கட்டப்பட்டிருப்பதுபோலவும் மாருதபுரவீகவல்லி கிழிந்தசேலையுடன் வில்லன்களின் மத்தியில் நின்று மார்புக்கு குறுக்கே கைகளை வைத்து விசும்புவது போலவும் தமிழ் பட இறுதிக்கட்டக் காட்சிகள் அரியகுட்டியரைப் பயமுறுத்தவும் தொடங்கின.

உண்மைத் தோற்றத்தில் போகாமல் மாறுவேடத்தில் போவதே நல்லதென எல்லோருக்கும் பட்டது. தாடியும் தலைப்பாகையும் வைத்து போனால் எப்படி இருக்கும் என அரியகுட்டியர் அப்பாவித்தனமாகக் கேட்க, அது பின்லாடன் போல இருக்கும் அப்பா என கோகர்ணபதி இடைமறித்தான். ஓ... உண்மைதான். பிள்ளையின் சாதுரியத்தை எண்ணி அகமகிழ்ந்தார். பலவிதமான கருத்துக்களுக்குப் பிறகு கோட்சூட் கூலிங்கிளாஸ் சகிதம் 'மென் இன் பிளாக்' கதாநாயகன்போல அரியகுட்டியரும் டைட்டானிக் கதாநாயகிபோல தோள்மூட்டு வெளிப்டையாகத் தெரியும் இரவு விருந்து உடையை மாருதபுரவீகவல்லியும் போடுவதென தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறான உடையைப்போடுவது பற்றி மாருதபுரவீகவல்லிக்கு வெட்கம் வந்தாலும் பல இலட்சங்களைப் பாதுகாப்பதற்காக இந்தத் தியாகத்தைச் செய்ய பின்நிற்கவில்லை.

திரு. திருமதி அரியகுட்டி வேண்டுகோளின் பிரகாரம் பரிசு யாருக்கு விழுந்ததென்ற விபரத்தை தாங்கள் வெளியிடப்போவதில்லை என லொட்டோ தலைமையக அதிகாரிகள் உறுதிசொல்லி பரிசுக் காசோலையைக் கையளித்தனர். 'சம்பெயினும்' அங்கு உடைக்கப்பட்டது.

ஆனால் என்னவோ தெரியவில்லை, நெஞ்சுத் தடிமனுக்கு 'றெமி மார்ட்டின்' விட்டு முட்டைக் கோப்பி அடித்துக் குடிக்கும் மாருதபுரவீகவல்லி அன்று சம்பெயினைத் தொடவேயில்லை. அரியகுட்டியரோ கடமையே கண்ணாக காசோலையில் இருந்த சைபர்களை எண்ணி எண்ணிப் பார்த்தார். படிக்கும்போது கந்தவேலு வாத்தியார் கணக்குப் பாடச்சோதனைக்கு தனக்கு போட்ட சைபர்களுக்கும் இந்த சைபர்களுக்கும் இருந்த பெரும் வித்தியாசத்தை எண்ணி அவர் கண்கள் கலங்கின. சூழநின்ற வெள்ளைக்காரர்களோ இது தங்களுக்கு வருவதுபோன்ற ஆனந்தக்கண்ணீர் என நினைத்தனர்.

இப்போது அரியகுட்டியர் குடும்பம் செல்வந்தர்கள் வசிக்கும் வீதியில் வசிக்கின்றது. பேய்க்குட்டிக்கும் அருகிலேயே ஒரு வீடு அரியகுட்டியரால் வாங்கிக்கொடுக்கப்பட்டது. மிகுதிக்காசைக்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி மனைவியும் பிள்ளைகளும் அரியகுட்டியருக்கு திட்டங்களைத் தந்தனர். நடிகை கே.ஆர்.விஜயாவிற்குப் பிறகு சொந்தமாகக் ஹெலிகொப்டர் வைத்திருக்கும் தமிழிச்சியாகத் தான் இருக்கவேண்டும் என்பது மாருதபுரவீகவல்லியின் ஆசை. மூத்தவன் கோகர்ணபதிக்கோ தமிழ்ப்பட உலக முன்னணி நடிகையுடனும் ஹொலிவூட்பட முன்னணி நடிகையுடனும் ஒரே நேரத்தில் கதாநாயகியாக நடித்து அதைப் பிரமாண்டமாகப் படமாக்கி வெளியிட்டு பணத்தைப் பணத்தால் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை. இவ்வாறாக எல்லோரும் தத்தமது ஆசைகளை வெளியிட்டு ஆனந்தித்தனர்.

இறுதி முடிவாக எல்லோரும் ஒருமுறை உலகை உல்லாசமாகச் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தபின்னர் மிகுதியைத் தீர்மானிப்பது என முடிவெடுத்தனர். ஒரு மில்லியன் செலவில் விமான நிறுவனம் ஒன்று விமானத்தை விமானியுடன் தர ஒப்புக்கொண்டது. எல்லா வேலைகளையும் பேய்க்குட்டிதான் மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் ஓடி ஓடிப் பார்த்துக்கொண்டான். இந்தியாவில் இருந்து வருகைதந்த யமதக்கினி சோதிடரின் சுபநேரக் கணிப்போடு அரியகுட்டியர் குடும்பம் உலகை வலம்வர விமானம் ஏறியது. விமானம் உயரே பறக்கத் தொடங்க, அரியகுட்டியரும் தனக்கு வந்த வாழ்வை எண்ணி ஆனந்தத்தில் பறந்தார்.இந்த வாழ்வைப்பார்க்க தன் அப்பத்தாச்சி உயிரோடு இல்லையே என்பதில் அவருக்குச் சரியான வருத்தம். சீராக பறந்துகொண்டிருந்த விமானத்தில் திடீரெனப் பெரும் குலுக்கம் விமானம் கீழ்நோக்கி வேகமாகச் செல்லத் தொடங்கியது. விமானி ஆங்கிலத்தில் ஏதோசொல்லி அலற அரியகுட்டியரும் தன்பங்கிற்கு தமிழில் அலறத்தொடங்கினார்.

"என்னப்பா கனவு கினவு கண்டனீங்களே..? வேலைக்கெல்லோ நேரம் போட்டுது. எழும்புங்கோ..." அட சாத்சாத் மாருதபுரவீகவல்லியின் குரலேதான் !

- பிரேம்

குத்தூர் தீபத்திருவிழா முன்னிட்டு

Anisch

Financial Consulting Gmbh & Sarah Star Thun

இணைந்து வழங்கும்
சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி

B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.ஏச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்

Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்

Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்(Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம். அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி - (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Solo Movies GmbH
Audio.Video.Kommunikationtechnik
Swiss-London-Srilanka
Tel.032 652 52 45.078 733 30 76
www.solomovies.com
Mail:vasi@solomovies.ch

Ammu Travels
Stauffer Str.71
8006 Zurich
Tel.01 362 00 31
Fax.01/362 00 28

S.K.TRADING GMBH
நாதன் ஜனனி சமுத்திரம்
Quellen str 1.
8005 Zurich
Tel.01/ 272 43 36. 01 272 49 90
01/272 4330. Fax.01/ 273 43 32

Sri Sai Enterprise
Sihlhallen str 19
8004 Zurich
Tel.01/240 85 55.01/431 99 67.
Fax 01/43199 69.

சிகரம்
Schoenegg str.15
8004 Zürich
Tel.01/291 28 60
Fax.01/291 28 66

Zweierstr. 35
8004 Zürich
Tel. 01/949 71 11
Natel. 079 / 678 41 20

LUXURY TRAVELS
Badenerstr. 125
8004 Zürich
Tel.043/499 54 54
Fax.043/245 38 47

Mohan Jewellery & Textiles
Elisabethen Anlage 38
4051 Basel
Tel. 061 / 271 41 09
Handy. 076 527 78 88

Sakthy Jewellery
Elisabethenanlage 11
4051 Basel
Tel.061/383 86 86
Natel.079/669 42 07

Basel SPT
Textile & Jewellery
Elisabethenanlage 9
4051 Basel
Tel.061/272 09 90
079/ 354 22 78

Scel Credit
Davidsboden str.20
4058 Basel
Tel.061/381 16 04
Natel.079/509 88 79

Ravi Jewellery
Knuppenmattstr 2
3414 Oberburg
Tel.034/423 38 46
HP.076/581 77 29

Jasijanantn
Travel&Tour Shop

Suji Jewellery
Neuengass Passage 3
3001 Bern
Tel.031/311 20 49
Natel.079/241 50 02

AMBAL STORE
அம்பாள் ஸ்ரோர்ஸ்
Schützenburg str 127 ug.5097 Liberfeld
Tel.051/972 89 46 Natel. 079/511 86 16

INDIAN ASTROLOGER

சாய்பாபா

Laxmi Kanthswamy

பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்ளுதலும் செய்து தருவோம்.

சந்திக்குமிடம்:

(West London) South hall

Contact:

Tel: 07932724065 / 07939613067

INDIAN ASTROLOGERS FROM GENERATIONS

ஓம்

இந்தியாவில் பல தலைமுறைகளாக கைரேகை, முகநாடி எண்கணிதம், மாந்ரீகம், மருத்துவம் போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும்

பன்டிட் குமார சுவாமி அவர்கள்
பன்டிட் கிருஷ்ணா அவர்கள்

பாரிஸ் மற்றும் ஜெர்மனி நகரங்களுக்கு வருகை தந்துள்ளனர்.

அம்பாளின் ஆருள்வாக்காலும் இவர்கள் தம் அனுபவத்தாலும் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழ்க்கையில் வளம் பெற்றுள்ளனர்.

நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை ஆகிய முக்கால பலன்கள் தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம் மற்றும் உங்கள் பிரச்சனைகளை தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகின்றனர்.

இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி சுவாமியை அணுகி வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள்.

சுவாமிகளை அணுக வேண்டிய முகவரி

Mr. Pundit Krishna
19 RUE CAIL, ESWARA, TAMIL ALAYAM
LA CHAPELLE 75010 Paris.
Métro: La Capelle, Gare du Nord
Port : 06 23 28 09 22
Tél: 01 53 26 59 21

Mr. Pundit Kumar Swamy
MUNCHNER STR. 18
INDAN TRAVEL, CORNER NEAR
60329 FRANKFURT (MAIN)
Tel : 01 60 99 21 38 63

பூபாளம் கணினிச் சேவைகள்

Ours is not a business, its our profession

இது வியாபாரமல்ல; எங்கள் தொழில்

கணினித் துறையில் கல்விசார் தகமையும், தொழில்நுட்ப அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பவியலாளரால்



1. Cyber cafe கட்குத் தேவையான வலையத் தொடர்புகள், உங்கள் இல்லங்களுக்குத் தேவையான வலையத் தொடர்புகள், இணைய வலையத் தொடர்புகள் போன்றவற்றை ஏற்படுத்தியும் தருவோம்.

2. உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள், உங்கள் தேவைகளுக்கேற்ப, கணினிகளைப் புதிதாகத் தயாரித்துத் தருகின்றோம்.

3. திருத்த வேலைகள் எதுவானாலும் (Desktops or postable compeuters) அவற்றைச் சிறந்தமுறையில் சீர் செய்து தருவோம்.

4. கணினிகள் சம்பந்தமான ஆலோசனைகள்

5. கணினி



5-1. உதிரிப்பாகங்களையும்

5-2. அச்சு உபகரணங்களுக்குரிய மை வகைகளையும்

5-3. Video audio CD

5-4. DVD (Digital Versatile device - பலதிறன்கொண்ட சாதனம்) போன்ற பதிவு செய்யக்கூடிய CD களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எங்களது தகைமையும், அனுபவமும் வாய்ந்த தொழில் நுட்பவியலாளரின் சேவையை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கீழ்க்காணும் விலாசத்துடன் நேரிலோ, தொலைபேசிமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்

22, Rue Perdonnet, 75010 Paris - Tél: 01 40 05 95 15 / 06 62 23 36 86

ஈழத்தமிழர் வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய ஒக்ரோபர் 05



ஜெ.ஆர்.ஜெயவர்தன

குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் வீரச்சாபற்றி மேலதிக விவரங்கள் கிடைத்துள்ளன. இந்திய சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அதே வருடமான 1987 ஒக்ரோபர் 02ம் நாள் 17 விடுதலைப் புலி உறுப்பினர்கள் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்துச் சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வேகப்படகு மூலம் கிழக்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர். திருகோணமலைத் தளபதியான புலேந்திரன், மட்டக்களப்பு தளபதியான குமரப்பா படகில் இருந்தனர். ஹர்கிரத் சிங்கின் கூற்றுப்படி இவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து சிறீலங்கா விமானப்படை முகாமிற்கு கொண்டுவரப்பட்டனர். பலாலி விமானப் படைமுகாம் அப்போது சிறீலங்கா இராணுவ பிரிகேடியர் ஜெயன்தா ஜெயரட்னவின் பொறுப்பில் இருந்தது. இவர் 17 புலிகளையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டதோடு அவர்களுடைய சயனைற் குப்பிகளையும் பறிமுதல் செய்தார்.

படிப்படியாக பின்னப்பட்ட சதிவலை பற்றி அறியாத ஐ.பி.கே.எப். ஜெனரல் றொட்றிகெஸ் (GEN RODRIGUEZ) பதினேழு புலிகளும் இந்தோ - சிறீலங்கா ஒப்பந்தம் வழங்கும் மன்னிப்புச் சரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார். ஆனால் மிக விரைவில் சதியின் ஆழம் அவருக்குப் புலப்படத் தொடங்கியது. ஒப்பந்தத்தை மீறும் வகையில் சிறீலங்கா தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பதினேழுபேரும் கொழும்பு கொண்டுவரப்பட்டு விசாரணைக்கு உட்படவேண்டும் என்று அடம்பிடித்தார். தவறினால் தனது பதவியை இராஜீநாமாச் செய்யப் போவதாகவும் அவர் மிரட்டினார்.

ஜனாதிபதி ஜெவர்த்தனா இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு என்னால் ஒன்றும் செய்யமுடியாது, எனது அமைச்சரின் விருப்பை என்னால் தட்டிக் கழிக்க முடியாது என்றார். தளபதி புலேந்திரன் கைகளில் பல கசப்பான அனுபவங்களைப் பெற்ற வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷன்' புகழ் ஜெனரல் சிறில் றணதுங்கா யாரை விடுதலை செய்தாலும் புலேந்திரனை விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

இக்காலப்பகுதியில் புதுடில்லியில் தங்கியிருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்சிற் ராஜீவ் காந்தியுடன் இணைந்து இன்னுமோர் திட்டத்தை வரைந்தார். விடுதலைப் புலிகளை இராணுவ நடவடிக்கை மூலம் அழிப்பதற்காகவே ஐ.பி.கே.எப். அனுப்பப்பட்டது. போர் இன்னும் தொடக்கப்படாவிட்டாலும் பதினேழு பேரும் கொல்லப்படுவது அந்த நோக்கத்தை நிறைவேற்றும் முன்னோடி நடவடிக்கையாகவே அவர்கள் பார்த்தனர். இந்தியப் பிரதமரும் அவருடைய தூதுவரும் ஜெயவர்த்தனாவை மீறித் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கு மிகவும் எளிதாக இருந்தது. இலங்கை - இந்திய அரசுகளின் கூட்டுச் சதி என்று இந்த விவகாரத்தை விவரிப்பதில் தவறில்லை. இந்தியா தன் பக்கம் என்ற இறுமாப்பில் பதினேழு பேரையும் கொழும்புக்குக் கொண்டுவா என்று அத்துலத் முதலியும் ஜெயவர்த்தனாவும் உறுதியாக நின்றனர். இரு வெவ்வேறு நோக்கங்களின் சந்திப்பு என்று ஆய்வாளர்கள் கூறுவர்.

அதாவது புலிகளை அழிக்கவேண்டும், இந்திய அரசின் அடிவருடிகளான ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பிற்கு ஆயுதம் வழங்கி, அரசியல் அதிகாரம் வழங்கி அரியாசனம் ஏற்ற வேண்டும் என்பது புதுடில்லியின் திட்டம். புலிகளின் இராணுவ தலைமையைச் சிதைத்துத் தமிழ் மக்களை அடிமை கொள்ளவேண்டும், இதற்காக இந்தியப் படைகளை தமது தேவைக்குப் பயன்படுத்தவேண்டும் என்பது கொழும்பின் நிலைப்பாடு. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் இருவர் நோக்கும் இந்த விவகாரத்தின் மூலம் நிறைவேறக் காத்திருந்தது. இப்போது இருவரும் இணைந்து செயற்படத் தயாராகி விட்டனர் எனலாம். இதைப் புலிகள் அந்த நெருக்கடியான காலகட்டத்தில் நன்கு உணர்ந்திருந்தனர். கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டால் கொல்லப்படுவது சர்வநிச்சயம் என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். கொலைக்களம் நோக்கிய பயணமாகவே பதினேழு பேரின் கொழும்பு நோக்கிய பயணம் அமையும். அனுப்பி வைப்பதற்கு இந்தியத் தலைமையும், கூட்டிச் செல்வதற்கு சிறீலங்காத் தலைமையும் தயாராகிவிட்ட அந்த நேரத்தில் புலிகள் தமது பங்கிற்கு ஒரு மாற்று உபாயத்தைக் கையாண்டனர்.

பலாலியில் அடைபட்டுள்ள தமது போராளிகளைப் பார்வையிடும் உரிமையைத் தருமாறு ஐ.பி.கே.எப். படையினரை விடுதலைப் புலிகளின் தலைமைபீடம் கோரியது. இதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்படாவிட்டாலும் நிர்ப்பந்தம் காரணமாக அனுமதி வழங்கப்பட்டது. பார்வையிடும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பதினேழு போராளிகளுக்கும் புதிய சயனைற் குப்பிகள் இரகசியமாக வழங்கப்பட்டன. நாட்டிற்காக உயிர் துறப்பதற்குத் தயார் என்று சயனைற் குப்பி குறிப்புணர்த்துவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அத்துடன் உயிருடன் பிடிபடக்கூடாது என்று உயரிய தீர்மானத்தை சயனைற் குப்பி நிறைவேற்ற உதவுகின்றது. அதாவது எதிரியின் பிடியில் உயிருடன் விழமுன் சயனைற் அருந்தி வீரச்சாவடைவது மேல் என்ற விடுதலைப் புலிகளின் தத்துவத்தையும் அது முதற்கண் வெளிப்படுத்துகின்றது. அதை அணிவதால் அசாத்திய துணிச்சலும் பாதுகாப்பும் கிடைப்பதாகப் போராளிகள் நம்புகின்றனர்.

சயனைற் குப்பிகள் கிடைத்தபின் அடைபட்ட போராளிகள் தம்மை விடுவிக்குமாறும் தவறும் பட்சத்தில் சயனைற் உட்கொள்ளப் போவதாகவும் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தினர். ஆனால் அவர்களுடைய மிரட்டலுக்கு இந்தியப் படையோ சிறீலங்கா இராணுவமோ மசியத் தயாராக இல்லை. பிரிகேடியர் ஜெயன்தா ஜெயரட்ன பதினேழு போராளிகளையும் கொழும்புக்குக் கொண்டு செல்வதிலேயே குறியாக இருந்தார். அவருக்கு ஒத்தாசை புரிவதற்கு இந்தியப் படைகள் தயாராக இருந்தன.

ஒக்ரோபர் 10, 1989ம் நாளுக்குரிய சண்டே ரைம்ஸ் வார இறுதிப் பத்திரிகையில் கொழும்புப் பத்திரிகையாளர் சுகீஸ்வர சேனாதீர எழுதிய கட்டுரையில், பலாலியில் நடந்த படுகொலை விவரங்கள் சிலவற்றைப் பார்க்கலாம்.

34 உடற்பலமிக்க சிங்களப் படைவீரர்களை ஜெயரட்ன தனது படையினரில் இருந்து தெரிவுசெய்தார். தனது சமிக்ஞை கிடைத்ததும் புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் விமானங்கள் நிறுத்தும் மண்டபத்திற்குள் திடீரென நுழையும் பயிற்சியை அவர் வழங்கினார். புலிகள் சயனைற் உட்கொள்ளாது தடுக்கும் உத்திகளையும் அவர் 34 பேருக்கும் அறிவுறுத்தினார். நஞ்சு உட்கொண்ட வயிற்றைக் கழுவுவதற்கான மருத்துவப் பம்புகள், இத்துறையில் நிபுணத்துவ அறிவுள்ள மருத்துவர்கள், உதவிப் பணியாளர்கள் என்பனவற்றையும் அவர் ஒழுங்கு செய்தார். நோயாளர் காவு வண்டிகளையும் அவர் தயார் நிலையில் நிறுத்தினார்.

லலித் அத்துலக்முதலி

அதன்பின் அவர் தனது படையாட்கள் புடைசூழப் புலிகள் அடைக்கப்பட்டிருந்த மண்டபத்திற்குள் திடீரென அதிரடியாக நுழைந்தார். ஆனால் போராளிகள் குப்பியைக் கடிப்பதை அவரால் நிறுத்த முடியவில்லை. குமரப்பா புலேந்திரன் உட்பட 7 போராளிகள் உடனடியாக இறந்தனர். அவர்கள் தமது குப்பியை மிகவும் பலமாகச் சப்பியிருக்கிறார்கள். இதனால் குப்பியின் துண்டுகள் வாயின் உட்புறத்தைக் காயப்படுத்தி குருதியை வெளிவரப்பண்ணியுள்ளது. சயனைற்றும் குருதியும் கலந்த வேகத்தில் உயிர் பிரிந்துவிட்டது. 4 போராளிகள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உயிரிழந்தனர். மிகுதிப் பேரில் ஒருவர் பின்பு இறந்தார். மூவர் காப்பாற்றப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான சுவீடன் நாட்டைச் சேர்ந்த கல்விமான் பீற்றர் ஷால்க்கின் கூற்றுப்படி, சயனைற் உட்கொண்டவர்களை உடனடிச் சிகிச்சை மூலம் காப்பாற்ற முடியும். குருதியில் நஞ்சு செறிவாகக் கலக்க முன்பு வயிற்றை மருத்துவக் கருவிகளின் துணையுடன் கழுவிச் சுத்தம் செய்வது மூலம் நஞ்சின் தாக்கத்தை மட்டுப்படுத்தலாம். அல்லது நிறுத்தலாம்.

இந்த முறையைப் பயன்படுத்திய இந்தியப் படையினர் ரஞ்சித் என்ற 19 வயதுப் போராளியைக் காப்பாற்றியுள்ளனர். காப்பாற்றியபின் அவர்கள் ரஞ்சித் மீது கடும் சித்திரவதையை மேற்கொண்டனர். தகவல் சேகரிப்பதற்காகவே சித்திரவதையைச் செய்தனர். தகவல் வழங்க அவன் மறுத்தபோது இந்தியப் படையினர் அவனை அடித்துக் கொன்றனர். சயனைற் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவுவதைப் புலிகள் அமைப்பு ஒரு அடிப்படைக் கோட்பாடாக கொண்டுள்ளது. இவ்வாறு இறக்கும் போராளிகள் மாவீரர் பட்டியலில் இணைக்கப்படுகின்றனர்.

இதில் கூறப்பட்டவாறு மரணித்த போராளிகளின் சடலங்களைக் கொடுப்பதற்கு இந்திய - சிறீலங்காப் படையினர் கடும் இழுத்தடிப்பு மேற்கொண்டனர். பொழுது சாய்ந்தபின் ஒரு விதமாக பெட்டிகளைத் திறக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளிடம் பலாலி முகாமில் வைத்துச் சடலங்களை ஒப்படைத்தனர். சடலங்களை கையேற்றவர்கள் நிபந்தனையை மீறிப் பெட்டியை அந்த இடத்திலேயே வைத்துத் திறந்தனர். சடலங்கள் யாவற்றிலும் துவக்கில் பொருத்தப்படும் `பயனற்` குத்து கத்தியால் விளைவிக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டன. காயங்கள் பற்றிய மருத்துவச் சான்றிதழ் தரும்படி சடலங்களைப் பொறுப்பேற்றவர்கள் கோரினர். இது மறுக்கப்பட்டது. இந்திய இராணுவ மருத்துவர்கள் சான்றிதழ் வழங்குவது தமது கடமையல்ல என்று சாதித்தனர்.

லெப் கேணல்களான குமரப்பா, புலேந்திரன் உள்ளடங்கலான பன்னிரு வேங்கைகள் வீரச்சாவடைந்த ஒக்ரோபர் 05, 1987 ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை நாளாகும். அதே நாளில் இந்தியப் படைகளின் சுயரூபம் வெளிப்பட்டதோடு ஆக்கிரமிப்பாளர்கள் என்ற பாத்திரத்தையும் அவர்கள் தரிக்கத் தொடங்கினர்.

(இன்னும் வரும்)

ஆராரோ...! நோ நோவோ !

(பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர்)

அங்கம் 18

இந்திய இராணுவ மருத்துவர்கள், சான்றிதழ் வழங்குவது தமது கடமையல்ல என்று சாதித்தனர்.

மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்

Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 காட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

மோகன் ஜுவல்லர்ஸ்

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes
என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

MOHAN JEWELLERS & TEXTILES
Elisabethen anlage 25
4051 Basel
Tél - 061 271 41 09
Fax - 061 271 41 17
WWW.mohantextiles.com

அண்டன் பாலசிங்கத்தின் விடுதலை - 1

(திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் விடுதலை நூல் பற்றிய இந்த நயப்புரை http://thoughtsintamil.blogspot.com என்னும் வலைப்பதிவில் இருந்து நன்றியுடன் மீள்பிரசுரமாகின்றது. இந் நூல்நயம் பரந்த வாசிப்பு அனுபவமும், இணைய வலைத் தளங்களில் நன்கு அறிமுகமுமான தமிழகத் தமிழர் ஒருவரால் எழுதப்பட்டது என்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது. நூலின் அட்டை எம்மால் இணைக்கப்பட்டது)

விடுதலை கட்டுரைத் தொகுப்பு அன்ரன் பாலசிங்கம் பெயர்மக்ஸ் பதிப்பகம் (Fairmax Publishing Ltd.), P.O.Box 2454, Mitcham, Surrey CR4 1WB, England, Mitcham, Surrey CR4 1WB, England, etk;gu; 2003 gf;. 256 tpiy UKP 9.50

(அன்ரன்` `பெயர்மக்ஸ்` போன்றவை புத்தகத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளவை. அதுபோன்றே ஈழத்தமிழில் பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.)

அண்டன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர். அக்கூட்டத்தின் தலைமைக் கருத்தியலாளர். விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் நேரடியாக ஈடுபட்ட சில பேச்சுவார்த்தைகளில் பாலசிங்கம் எப்பொழுதுமே பிரபாகரன் பக்கத்தில் இருந்திருக்கிறார். அதுதவிர இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நார்வேயின் உதவியுடன் நடந்த பிரபாகரன் ஈடுபடாத அமைதிப் பேச்சுவார்த்தையில் புலிகள் சார்பாக தலைமையேற்றது பாலசிங்கமே.

'விடுதலை' என்னும் பாலசிங்கத்தின் கட்டுரைத்தொகுதி வெளியானபோது இந்திய செய்தித்தாள்கள் அனைத்திலும் இந்தப் புத்தகத்தின் முதலிரண்டு கட்டுரைகள் முதற்பக்கச் செய்திகளாயின. நானும் அப்பொழுது இந்த கட்டுரைத் தொகுதி ஒரு பிரடெரிக் போர்சைத் நாவலின் வேகமான பகுதிகளைப் போன்று புலிகளின் வீரதீரச் செயல்கள், ஜெயிலுடைப்பு, ஆரம்ப காலத்தில் மற்ற போராளி இயக்கங்களுடன் சண்டை போட்டு பின்னர் பிற இயக்கங்கள் அனைத்தையும் ஆயுத ரீதியாக செயலிழக்கச் செய்தது, எம்ஜியார் - ராஜீவ் காந்தி போன்ற இந்தியத் தலைவர்களுடனான உறவுகள் என்ற மாதிரியே. இருக்கும் என்று நினைத்திருந்தேன். இந்தப் புத்தகம் மூன்று நாள்களுக்கு முன்னர்தான் எனக்கு படிக்கக் கிடைத்தது.

பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் கலைப் பண்பாட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்ட 'வெளிச்சம்' எனும் ஏட்டில் எழுதிய இலக்கியக் கட்டுரைகளுடன் அவசர அவசரமாக எழுதிச்சேர்த்த இரண்டு அரசியல் கட்டுரைகள் சேர்ந்த தொகுப்பு என்பது புரிந்தது. முதலிரண்டு அரசியல் கட்டுரைகளும் கையில் எடுத்தவுடன் கீழே வைக்க முடியாமல் படிக்க வைத்தன. முதலாவது 'எம்.ஜி.ஆரும் புலிகளும்'. விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர் தொடக்க காலத்திலிருந்து எவ்வளவு உதவிகளைச் செய்து வந்துள்ளார் என்று விவரிக்கிறது. எம்.ஜி.ஆர் தனது வீட்டின் சுரங்க அறையிலிருந்து கோடிக்கணக்கில் சூட்கேஸில் பணத்தை எடுத்து பாலசிங்கம் கையில் கொடுத்தது, புலிகள் வாங்கிய ஆயுதத் தளவாடங்களை சென்னைத் துறைமுகத்தில் உள்ளே எடுத்தவர . முடியாது இந்திய இராணுவம் பாதுகாக்கும்போது எம்.ஜி.ஆர் தமிழகக் காவல்துறை மூலம் அந்தத் தளவாடங்களை வெளியே எடுத்துக்கொண்டு வந்து புலிகளிடம் கொடுத்தது, பிற ஈழப் போராளிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களையும் புலிகளுக்குக் கொடுத்தது, புலிகளுக்கு ஆயுதங்கள் வாங்க தமிழக அரசின் சார்பில் ரூ. 4.5 கோடிக்கு காசோலை கொடுத்து பின்னர் ராஜீவ் காந்தியின் மத்திய அரசு அதைத் தடுத்து நிறுத்த தன் பாதாளச் சுரங்க அறையிலிருந்து நேரடியாக காசாகவே எம்.ஜி.ஆர் அந்தத் தொகையைக் கொடுத்தது என்று பல செய்திகளைத் தெரிவிக்கிறார்.

எம்.ஜி.ஆர் காலத்தில் தமிழக உளவுத்துறையின் தலைவராக இருந்த மோகன்தாஸ் ஐ.பி.எஸ் மீது புலிகள் எதிர்ப்பாளர் என்றும், அவர் எம்.ஜி.ஆருக்குத் தெரியாமல் புலிகளுக்கு எதிர்ப்பாக பல செயல்களைச் செய்தார் என்றும் (பிரபாகரனையும் பாலசிங்கத்தையும் வீட்டுக்காவலில் வைத்தது காவல் நிலையத்துக்கு அழைத்துக்கொண்டு போய் தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியது போன்றவை), எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின்னர் தானெழுதிய புத்தகத்தில் (M.G.R: The Man and the Myth, 1991இல் பிரசுரமானது.



இப்பொழுது அச்சில் இல்லை) புலிகளைப் பற்றி இல்லாததையும், பொல்லாததையும் பொய்யாக எழுதியிருந்தார் என்றும் குற்றம் சாட்டுகிறார். எம்.ஜி.ஆருடன் கருணாநிதியை ஒப்பிட்டு சிறு சாடல், இப்பொழுது இருக்கும் மத்திய அரசின் உள்நாட்டு வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் நட்வர் சிங், து.தீக்ஷித், ஆ.மு.நாராயண் ஆகியோர் மீதான விமரிசனம். ஆக இந்தியாவில் நண்பர்களைச் சேர்க்காவிட்டாலும் எதிரிகளைச் சம்பாதித்துக் கொள்ளாமலாவது இருக்க வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறதோ என்ற தோற்றத்தைத் தருகிறது. தொடர்ந்து 'ராஜீவ் - பிரபா சந்திப்பு' என்னும் கட்டுரையில் ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனா ஒப்பந்தம், தொடர்ந்து பிரபாகரன் மீது கொடுத்த கடுமையான அழுத்தத்தினால் ராஜீவ் காந்திக்கும் பிரபாகரனுக்கும் இடையில் ஏற்பட்ட எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்றையும் விளக்குகிறார். இந்தக் கட்டுரையின் உள்ளடக்கமும் பல இந்திய செய்தித்தாள்களில் விளக்கமாக விவரிக்கப்பட்டு விட்டன.

ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை புலிகள் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும் என்று ராஜீவ் காந்தியின் ஆலோசகர்கள் பிரபாகரனை வற்புறுத்தினர். இந்த ஒப்பந்தப்படி,

(அ) வட கிழக்கு மாகாணங்கள் தமிழர் சிங்களர் முஸ்லிம் பகுதிகளாக வாக்கெடுப்பின் படி பிரிக்கப்படும்

(ஆ) மாகாண அரசுகளைக் கலைக்கும் உரிமை இலங்கை அதிபருக்கு உண்டு

(இ) புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்பந்தம் கையெழுத்தான 72 மணி நேரங்களில் இந்திய அமைதிப்படையினரிடம் ஒப்படைத்து விட வேண்டும்

(ஈ) புலிகள் வடகிழக்குப் பிராந்தியங்களில் வரியின் மூலம் பணம் சேர்ப்பதையும் விட்டுவிட வேண்டும்.

இவற்றை பிரபாகரன் எதிர்த்தார். ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டிய காரணத்தால் ராஜீவும் மேற்படி ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளன என்றும் அவற்றைக் களைய தான் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுப்பேன் என்றும் வாய்வார்த்தையால் சொன்னாராம்:

(அ) வட கிழக்கு மாகாணப் பிரிவுக்கான கருத்து வாக்கெடுப்பை நடக்கவிடாமல் ஒத்திப்போட வைப்பது

(ஆ) இடைக்கால அரசில் புலிகள் பெரும்பான்மையிலும் இதரப் போராளிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈரோஸ் போராளிகள் மட்டுமே சிறுபான்மையாக இருக்குமாறும் ஓர் இரகசிய ஒப்பந்தம்

(இ) நல்லெண்ணச் சமிக்ஞையாக சில துருப்பிடித்த ஆயுதங்களை மட்டும் அமைதிப்படையிடம் ஒப்படைத்தால் போதும் ('இந்தியா எங்களுக்குக் கொடுத்த ஆயுதங்களெல்லாமே துருப்பிடித்தவைதான்' என்றாராம் பிரபாகரன்)

(ஈ) புலிகளின் செலவுக்கென இந்திய அரசு அவர்களுக்கு மாதத்திற்கு இந்திய ரூ. 50 லட்சம் தருவது.

இப்படி ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டும் அதை தாளில் எழுதி கையெழுத்திட புலிகள் கேட்டதற்கு ராஜீவ் காந்தியின் ஆலோசகர்கள் ஒப்புக்கொள்ளவில்லையாம். Gentlemen agreement ஆக வாய் வார்த்தையோடு இருந்துவிட்டுப் போகட்டுமே என்று சொல்லிவிட்டனர். பிரபாகரன் பாலசிங்கத்திடம் 'அண்ணா இருந்து பாருங்கோ இந்த இரகசிய ஒப்பந்தமும் வாக்குறுதிகளும் ஒன்றுமே நிறைவேறப் போவதில்லை. இதெல்லாம் ஒரு (Sic) ஏமாற்று வித்தை.' என்று விரக்தியோடு சொன்னாராம். அப்படியே நடந்தது என்று முடிக்கிறார் பாலசிங்கம்.

மிகுதி அடுத்த இதழில்....

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்
தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91
எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை
யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE
ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.
Pub-Fr

தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதமும் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வும்' என்கின்ற வரலாற்று நூல் பலரின் மிகுந்த கவனத்திற்குரியதாகியுள்ளது. ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த இந் நூல் தற்போது தமிழ் வடிவம் பெற்று இவ்வருட ஆரம்பத்தில் தாயகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுத் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுக விழா நடை பெற்று வருகிறது. 08.08.2004 இல் பாரிசில் இந்நூலுக்கான அறிமுக விழா நடைபெறவிருக்கும் இவ்வேளையில் அந்நூல் குறித்தான ஆழமான மதிப்புரை ஒன்றை ஈழநாதம் இதழில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இந்த வரலாற்று நூலில் நீங்கள் இலகுவாக நுழைந்துகொள்ள இக்கட்டுரை உதவும் என நினைக்கின்றோம். *(ஆ—ர்)*

இலங்கைத் தமிழர் தேசியம்

அதன்தோற்றம் பற்றிய ஆய்வு

ஆக்கியோன்: முருகர் குணசிங்கம் வெளியீடு: எம். வீ பிரசுரம், சிட்னி மொழி ஆங்கிலம் (அவுஸ்திரேலியா)

பிரிட்டிஷ் அரசு மதமாற்றங்களை சைவ மதத்திற்கு நேர் எதிராக நடத்தாவிட்டாலும் கல்வி நிலையங்களை நிறுவி அதனூடாக மதமாற்றம் செய்யப்புறப்பட்ட மத குழுக்களுக்கு தனது ஆதரவை வழங்கியது. பிரிட்டிஷ் அரசு தனது ஆதரவுபெற்ற மதக் குழுக்களுக்கு நிதி உதவி வழங்கி ஊக்குவித்தது.

கல்வியும் தமிழர்களும் (EDUCATION AND TAMILS) என்ற தலைப்பின் கீழ் ஆசிரியர் குணசிங்கம் (பக்கம் 100) பின்வரும் முக்கிய செய்தியைக் கூறுகிறார். இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ மத அமைப்புக்களின் வருகையால் வடக்கு-கிழக்கு தமிழர்கள் மத்திய காலத்தில் (கி.பி8-கி.பி 14 வரை) இருந்து தற்காலத்திற்கு மாற்றப்பட்டனர். அதாவது பெரும்பாலும் கல்வியறிவு இல்லாதிருந்தவர்கள் இவர்கள் உதவியால் எழுதப் படிக்கத் தெரிந்தனர். திண்ணைப் படிப்பு, ஏட்டுச் சுவடிகள் என்பனவோடு நின்றவர்கள் வகுப்பறை, அச்சடித்த புத்தகம் போன்றவற்றின் சூழலுக்கு மாற்றப்பட்டனர். தமிழர்களுக்கு கல்வி புகட்டி கிறிஸ்தவர்களாக மாற்றலாம் என்ற திட்டம் இறுதியில் பயன்தரத் தவறியது.

தமிழர் தேசத்திற்கு வந்த கிறிஸ்தவ அமைப்புக்கள் யாவும் கல்விக்கு முதலிடம் கொடுத்தனர். மதமாற்றத்திற்கு அதுதான் மிகவும் பொருத்தமான உபாயம் என்பது அவர்கள் கற்பனை. கல்வி தமிழ் மக்கள் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. தங்களுடைய பாரம்பரியங்களை சீர்தூக்கி ஆராயும் திறமையை அவர்கள் பெற்றனர். தங்களுடைய பழமையான சிவமதத்தின் பெறுமதியை உணரத் தலைப்பட்டனர். இது அவர்களுடைய அடையாளங்களைத் தேடும் நடவடிக்கையாக முடிந்தது. அதுவே தேசிய உணர்வின் முதல் படியாக அமைந்தது.

இத் தொடர்பில் இரு முக்கிய விடயங்களை வலியுறுத்தவேண்டும். ஒன்று தமிழர்கள் மத்தியில் கல்வி பாரம்பரியம் ஒன்று காலம் காலமாக இருந்திருக்கிறது. அவர்கள் ஒன்றும் காட்டுமிராண்டிகள் அல்லர். இரண்டு ஒல்லாந்தர்களும் தமது ஆட்சிச் காலத்தில் தமது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ கோயில்களுக்கு அருகாமையில் ஆரம்ப பள்ளிகளை அமைத்து தமிழர்களுக்கு கல்வி புகட்டியிருக்கிறார்கள். சிங்கள நாட்டில் சில மாணவர்களைத் தெரிவு செய்து மேற்படிப்புக்காக ஒல்லாந்து தேசம் (HOLLAND) அனுப்பியிருக்கிறார்கள் தமிழர்களுக்கு இதைச் செய்தார்களா தெரியவில்லை.

விரிவான, தற்கால கல்வியை தமிழர் பிரதேசத்தில் புகுத்தியமைக்காக பிரிட்டிசாருக்கு முக்கிய பங்கு உண்டு. வடக்கு கிழக்கில் செயற்பட்ட அமெரிக்கன் கிறிஸ்தவ மிசன், இங்கிலாந்தின் கிறிஸ்தவ மிசன் கழகம் (CHRISTIAN MISSION SOCIETY) வெஸ்லியன் மிசன் (WESLEYAN MISSION) என்பன மிகத் தீவிர கல்விப் பணியை முன்னெடுத்தன. அமெரிக்கன் மிசனரிகள் யாழ் தீபகற்பத்துடன் தமது பணிகளை நிறுத்திக்கொண்டனர். வெஸ்லியன் மிசனரிகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஈறாக ஆரம்பப் பள்ளிகளையும் உயர்கல்வி நிலையங்களையும் திறந்தனர்.

1816 -1820 காலப்பகுதியில் வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய், பண்டைத்தரிப்பு, சாவகச்சேரி, உடுப்பிட்டி ஆகிய சிறு நகரங்களில் அமெரிக்கர்கள் தமது கல்விச் சாலைகளைத் திறந்தனர். ஆங்கில கல்விக்கு அமோகமான வரவேற்பு இருந்தது. ஆங்கிலம் மூலம் கல்வி யாபேராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மிசனரிப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பந்தொட்டு ஆங்கிலக் கல்வியை வழங்கி மக்கள் ஆதரவைப் பெற்றன.

யாழ் தீபகற்பத்தின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும்பங்காற்றிய இரு வெளிநாட்டவர் பற்றிய விபரங்களை ஆசிரியர் தருகிறார். முதலாமவர் அமெரிக்கரான டானியலு பூவர் (DANIEL POOR) அடுத்தவர் ஆங்கிலேயரான பீற்றர் பெர்சிவல் (PETER PERCIVAL) இருவரும் முறையே வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (JAFFNA COLLEGE) யாழ்நகர மத்திய கல்லூரி (CENTRAL COLLEGE) ஆகியவற்றுடன் முக்கியமாகத் தொடர்புடையவர்கள்.

வெஸ்லியன் மிசனின் மறுபெயர் மெதடிஸ்ற் மிசன் (METHODIST MISSION) வடக்கு கிழக்கில் திறக்கப்பட்ட மெதடிஸ்ற் மிசன் பள்ளிகளுக்கு வித்திட்டவர் பீற்றர் பெர்சிவல் பாதிரியார் என்பது வரலாறு. மட்டக்களப்பில் பிரிட்டிஷ் ஆட்சி 1795 இல் ஆரம்பித்தது. முதலாவது பிரிட்டிஷ் ஆட்சியாளனாக மட்டக்களப்பு வந்த ரொம் சோயர் (TOM SAWYER) மட்டக்களப்பு கல்விக்கு அருந்தொண்டாற்றினர். இந்த நூலில் குறிப்பிடப்படா விட்டாலும் சோயரின் அழைப்பில் மட்டக்களப்பு வந்த முதலாவது மெதடிஸ்ற் பாதிரியார் வில்லியம் அவுல்ற் (WILLIAM AULT) இப்பகுதியின் முதலாவது ஆங்கிலப் பள்ளியை 1814 இல் தொடங்கினார். பள்ளிக்கூடத்திற்கான கட்டிடத்தை சோயர் அவர்களே வழங்கினார். மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இவர் ஆற்றிய அளப்பரிய சேவைப்பணியை ஆய்வாளர்கள் பதிவு செய்யவேண்டிய கடமை கட்டாயம் உண்டு.

தெற்கு மற்றும் தென் - கிழக்கு ஆசியாவின் தலைசிறந்த மெதடிஸ்ற் மிசன் ஆங்கிலப் பள்ளிகளில் ஒன்றான யாழ் மத்திய கல்லூரி 01 ஓகஸ்ட் மாதம் 1816 இல் திறக்கப்பட்டது. இது உயர் கல்லூரி வழங்கும் நிலையமாக மாறுவதற்கு பீற்றர் பெர்சிவல் பொறுப்பாவர். அவரே அதனுடைய தலைமை ஆசிரியராகப் பதவி வகித்தார். பெண் கல்விக்கும் மெதடிஸ்ற் மிசன் தொண்டாற்றியது. வேம்படி பெண்கள் கல்வி நிலையம் திருமதி பீற்றர் பெர்சிவல் தலைமையில் 1834 இல் தொடங்கப்பட்டது. 1874 இல் இதே போன்ற பெண்கல்வி நிலையங்கள் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களிலும் திறக்கப்பட்டன.

கல்வி சம்பந்தமான வேறோர் புதுமையையும் இவர்கள் செய்தனர். தங்கிப் படிப்பதற்கு தங்குமிடமும் உணவும் பள்ளிக்கூட வளாகத்திலே வழங்கினர். பெண்கல்விக்கு இது பெரும் வரப்பிரசாதமாக இருந்தது. அனுராதபுரம் போன்ற கல்வி வசதி குறைந்த பகுதிகளில் இருந்து சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வரவும் இது வகைசெய்தது. தங்குமிடக் கல்விக்கு உள்நோக்கம் இருந்தது. இங்குதான் கிறிஸ்தவ மதமாற்றம் கூடுதலாக நடத்தப்பட்டது.

1999 இல் தனது 175 வருட விழாவைக் கொண்டாடிய உடுவில் பெண்கள் கல்லூரியில் ஆரம்பகாலம் தொட்டு தங்கிப்படிக்கும் மாணவிகள் பெரும்பாலும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். உடுவில் பெண் கல்வி நிலையம் அமெரிக்க மிசனரிமார் நடத்திய பள்ளிக்கூடம்.

யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் பெர்சிவல் பாதிரியாருக்கு நிலையான இடமுண்டு. இவருக்கு நிறைந்த தமிழ்ப் பாண்டித்தியம் உண்டு. தமிழ்க் கல்வியை அவர் மத்திய கல்லூரியில் ஊக்குவித்தார். கணிதம், வரலாறு, மெய்யியல், ஆங்கிலம், கிறிஸ்தவம் என்ற பாடங்களோடு அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் மத்திய கல்லூரியில் வழங்கினார். மத்திய கல்லூரி மாணாக்கரும், சிறிதுகால ஆசிரியருமான ஆறுமுகநாவலர் உதவியுடன் அவர் பைபிள் நூலைத் தமிழாக்கம் செய்வித்தார். ஒரு ஆங்கில - தமிழ் அகராதியையும் பதிப்பித்தார். `மெதடிஸ்ற் மிசனரிகளில் மிகத் தகுதி வாய்ந்த தமிழறிஞர்' என்று அவர் சிறப்பிக்கப்படுவர்.

அமெரிக்க மிசனரிமார்களும் தமிழ் சேவையில் பின் நிற்கவில்லை. வட்டுக்கோட்டை கல்லூரி ஆரம்பத்தில் பற்றிகோட்டா செமினரி (BATTICOTTA SEMINARY) என்றழைக்கப்பட்டது. 1856 இல் வெளிவந்த அமெரிக்க கல்வி நிலையங்கள் பற்றிய அறிக்கையில் (THE ANDERSON REPORT OF 1856) பல ஐரோப்பிய பல்கலைக் கழகங்களோடு ஒப்பிடக்கூடிய உயர்ந்த கல்வியை வட்டுக்கோட்டை செமினரி வழங்கியது. இங்கும் தமிழ் கல்விக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. கைவிடப்பட்ட நிலையிலுள்ள தமது மொழியை இந்த மக்கள் சிறப்பாகப் பேணும் வகையில் நாம் வழங்கும் கல்வி அமையவேண்டும் என்ற குறிக்கோள் இக்கல்வி நிலையத்திற்கு தொன்றுதொட்டு இருந்தது.

இந்த நூலில் விடுபட்டுப்போன பிறிதோர் அமெரிக்கர் பற்றியும் இங்கு கூறிவைக்கலாம். டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன் (DR.SAMUEL FISK GREEN பி 1822 இ 1884) இவர் அமெரிக்கன் மிசனைச் சேர்ந்த உயர்தர மருத்துவம், மருத்துவப் பணியூடாக மதம் பரப்ப விளைந்தவர். 1847இல் வட்டுக்கோட்டை வந்து தங்கியபின் 1848 இல் மானிப்பாய் சென்றவர் மானிப்பாயில் மருத்துவமனையையும், மருத்துவக் கல்லூரியையும் இவர் நிறுவினார். 25 வருடங்கள் மானிப்பாயில் தங்கியிருந்து மருத்துவ சேவையுடன் தமிழுக்கும் அருந்தொண்டாற்றினார். அவர் தமிழைப் படித்து உயர் பாண்டித்தியம் அடைந்தார். அதன் பயனாய் மேற்கின் மருத்துவக் கல்வியை தனது மாணாக்கர்களுக்கு தமிழில் போதித்தார். தமிழில் மருத்துவ கலைச் சொற்களை இவர் ஆக்கினார். ஆங்கில மருத்துவ நூல்களை எழுதத் தூண்டினார். இவர் தமிழில் பதிப்பித்த மருத்துவ நூல்களின் மொத்தப் பக்கங்கள் 4,500 இலங்கையின் முதலாவது மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரி என்ற சிறப்பு மானிப்பாய் மருத்துவமனைக்கு உண்டு. இவர் தனது மரண சாதனத்தில் (WILL) தமிழர்களுக்கு மருத்துவப் பணியாற்றியவர் என்று தான் அறியப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



தமிழ் கூறும் நல்லுலகில் நிறுவப்பட்ட முதலாவது அச்சு யந்திரசாலையை 1834 ஆம் ஆண்டு மானிப்பாயில் அமெரிக்க மிசன் நிறுவியது. தமிழ் மொழி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இது விளங்கியது. நன்னூல், அவ்வையார், மூதுரை திருக்குறள் போன்ற நூல்களும் கிறிஸ்தவ பிரசார ஏடுகளும் இங்கு அச்சேறின.

கிறிஸ்தவ மிசனரிகளின் மொழி, கல்வி நடவடிக்கைகள் சைவ மதத் தலைவர்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது. மிசனரிமாரைப் போன்று அவர்களும் ஆரம்பப் பள்ளிகளை வடக்கு - கிழக்கில் நிறுவத் தொடங்கினர். 1828இல் அவர்கள் 106 பள்ளிகளை நிறுவி விட்டனர். மொத்தம் 2,430 மாணவர்கள் அவற்றில் கல்வி கற்றனர். 1850 களில் ஆறுமுகநாவலர் தலைதூக்கியபின் உயர்கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டன.

கல்வி இப்போது சைவம் பரப்பும் கருவியாகவும், கிறிஸ்தவ மதப் பரப்பலுக்கு எதிரியாகவும் புது உருவம் பெற்றது. தேசிய கிறிஸ்தவ மதப் பரப்பலுக்கு எதிரியாகவும் புது உருவம் பெற்றது. தேசிய விழிப்புணர்வும் கூடப் பிறந்தது.

ஆசிரியர் குணசிங்கத்தின் நான்காம் அத்தியாயம் அவருடைய நூலின் நடுநாயகமாக விளங்குகின்றது. அரிதினும் அரிதான தகவல்கள் பல அதில் மண்டிக்கிடக்கின்றன. படித்துப் பயன்பெறுவது எமது பொறுப்பு.

கிறிஸ்தவ மிசனரிகள் தமிழ் வளர்த்தார்கள் என்பது உண்மை. ஆனால் அதே தமிழ் மொழியை தமது மதத்தையும் தமது நடைமுறைகளையும் பரப்புவதற்கும் சைவ மதத்தை தரம் தாழ்த்தி துண்டுப் பிரசுரம் வெளியிடவும் மேடை பிரசங்கம் செய்யவும் பயன்படுத்தினார்கள் என்பதுவும் பிறிதோர் உண்மை.

வட்டுக்கோட்டை கல்லூரியையும் பற்றிகோட்டா செமினரியையும் தனது நூல் மூலம் விவரிக்கும் ஆசிரியர் ஜே.வி செல்லையா, செமினரியின் ஸ்தாபகர்கள் தமிழ் மொழி பற்றிப் பின்வருமாறு மதப்பீடு செய்ததாகக் கூறுகின்றார். சமஸ்கிருதம், இபிரேயம், கிரேக்கம் போன்று தமிழ் தனித்துவமான பூரண வடிவம் பெற்ற மொழி, அதைப் படிப்பதால் நிறையப் பயனுண்டு. சுதேசிகள் இந்த மொழியை ஐயம் திரிபறக் கற்பதால் கல்வியும் கிறிஸ்தவமும் உயர்வடையும்.

தமிழ்மொழியை உயர்வாக மதித்து, அதற்குரிய அந்தஸ்து அளித்து, தமிழ் மாணவர்களுக்கு அதைப் புகட்ட மிசனரிகள் எடுத்த கடும் பிரயத்தனம் சுயநலமற்றது அல்ல. எதற்காக வந்தார்களோ அதைத் தமிழ் மூலம் செய்வதே அவர்களுடைய குறியாக இருந்தது.

அதைத் தடுப்பதற்காக, தமது பாரம்பரிய அடையாளமான சைவ மதத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்த் தலைமை வர்க்கம் எடுத்த முயற்சி நடவடிக்கைகளை ஆசிரியர் குணசிங்கத்தின் ஐந்தாம் அத்தியாயம் எம்முன் வைக்கின்றது.

ஏய் கில்லி சுள்ளான்....

தமிழகத்தின் எதிர்காலம்..?

கலையும், கலைகள் காட்டும் வாழ்க்கை நெறிகளுமே ஒரு சமூகப்போக்கின் குறுக்குவெட்டுத் தோற்றங்கள். கலைத்தொடர்புச் சாதனங்கள் வெறும் கண்ணாடி போன்றவை என்பதால், உள்ளதைத்தான் அப்படியே பிரதிபலிக்கும் என்றுமட்டும் சொல்லிவிடமுடியாது. நவீன ஊடக வளர்ச்சியில், அவற்றின் தாக்கம் சமூகக்கருத்தை உருவாக்குவதிலும், நல்லதாகவோ கெட்டதாகவோ ஒருகருத்தை வளர்த்தெடுப்பதிலும் பெரும்பங்கு வகிப்பதைக் கவனிக்கவேண்டும்.



கதை, கவிதை போலும் இலக்கியங்கள் சமூகத்தில் நிகழ்த்தும் பாதிப்புகளை விடவும் தொலைக் காட்சி மற்றும் திரைப்படங்களில் காணும் கலைவடிவத்திற்கு விளைவும் அதிகம், வேகமும் அதிகம். பெரிய அரசியல்கட்சிகளின் தீர்மானங்களுக்கு நிகரானது இக்கலைவடிவங்களின் சாராம்சம். அந்த வகையில், பாரம்பரியம் மிகுந்த கவிதையும், பாட்டும் கூத்துமாய் உலகம் வியக்க செழித்துக்கிடந்த நம் தமிழ்ச்சமூகத்தில், இன்றைய பெரும்பாலான மக்கள் காணும் கலைவடிவங்கள், `அச்சமும் பேடிமையும் அடிமைச்சிறுமதியும் உச்சத்தில் கொண்டவை' யாகி வருவதுடன், நம்மையும் `ஊமைச் சனங்களாக' வளர்க்க உரம் போட்டு வருவது மிகுந்த கவலை தருவதாகவே உள்ளது.

`வீரபாண்டிய கட்டபொம்மன்,' `கப்பலோட்டிய தமிழன?' என்றெல்லாம் பெயர் சூட்டிமகிழ்ந்த தமிழ்த் திரைப்பட உலகம், இன்று `ஏய்' `கில்லி' `சுள்ளான்' என்றெல்லாம் பெயர் வைக்கும் அளவுக்குப் பொறுப்பற்ற நிலைமைக்குப் போய்விட்டதை எண்ணிக் கவலைப் படாமல் இருக்கமுடியவில்லை. கடந்த 18 மாதங்களாக வெளிவந்த நேரடித் தமிழ்ப்படங்கள் 125. (2003இல் 90? 2004 இல் யூன் முயடி 35) இதில் சில படங்களின் பெயர்கள்: பாப்கார்ன், வெல்டன், தூள், ஜே.ஜே.எஸ் மேடம், தம், செமரகளை, குத்து, ஜோர்! இதெல்லாம் என்ன? இதுபோல அர்த்தமற்ற அல்லது ஆங்கிலத்திலான –சுமார் 22 (அதாவது நான்கில் ஒரு பங்கு) படங்களின் பெயர்கள், எந்த அளவிற்குத் தமிழ்த் திரைப்பட உலகம் பொறுப்பற்று இருக்கிறது என்பதற்கு சாட்சிகளாக நிற்கின்றன.

> இன்றைய இளம் நடிகர் ஒருவரை `இளைய தளபதி' என்று சொல்கிறார்கள். அரசியலில் சில மக்கள் போராட்டங்களுக்குத் தலைமையேற்ற இளைய தலைவர்களை `தளபதி' என்றும் `மக்கள் தளபதி' என்றும் கூறுவதையாவது ஒருவகையில் ஏற்றுக்கொள்ளலாம். இந்த `சினிமாத் தளபதி'கள் எந்தப் போர்க்களத்தில் யாருக்கெதிராகப் படை நடத்தி, வெற்றிக்கொடி நாட்டினார்களாம் ?

`புன்னகைப் பூவே', `நிலவில் களங்கமில்லை' , `கண்களால் கைது செய்' போலும் கவித்துவம் மிகுந்த நல்ல பெயர்களும் வைக்கப்பட்டுள்ளன என்பதை, கவனத்தோடு பாராட்டவேண்டும். ஏனெனில், நல்ல தமிழ்ப் பெயர்களை மட்டும் வைத்துக்கொண்டு உருப்படாத கதைகளோடு வந்த படங்களும் உண்டு, `ஆட்டோ கிராப்' போல ஆங்கிலப்பெயர்களை வைத்துக்கொண்டு வந்த அருமையான படங்களும் உண்டு!

`படங்களின் பெயர்களில் என்ன இருக்கிறது?' என்று சிலர் நினைக்கலாம். தலைப்பிலேயே படம் எடுப்பவர்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்டுவிடலாமே? அதில் காணப்படும் `விட்டேத்தி' யும் `விடலைத் தன்மை' யும்தான் அந்தப் படம் முழுவதும் விரவியிருக்கும் என்பதுதானே சிக்கல்! மூலக்கதை கூட, `அநியாயம் தோற்கும், நியாயம் வெல்லும்' எனும் பஞ்சதந்திரக்கதையாக இருக்கலாம். ஆனால், அதைக் காட்சிவடிவாக்க அவர்கள் காட்டும் தந்திரத்திற்குப் பஞ்சமே இருக்காது! அடாடா! குட்டிச்சுவரில் உட்கார்ந்து வீதியில் பாட்டுப்பாடி வகுப்பு நேரத்தைக் `கட்' டடித்து, `தம்' அடித்து, `பீர்' குடித்து பெண்களைக் கிண்டல் செய்து அப்பாவை எப்போதும் வெறுத்துப்பேசி பொழுதைக் கழிக்கும் விடலைதான் பின்னர் ஊரே புகழும் `பெரீய்ய்ய' மனிதனாகிவிடுவானாம்! இந்த மாணவர்கள் விடலைகள் வேலைவாய்ப்பில்லாதவர்கள்தாம் திரும்பத்திரும்ப வந்து படத்தைப் பார்ப்பவர்கள் என்பது தெரியாதா என்ன? அதனால் படப்பெயர்கள் அப்படித்தான் இருக்கவேண்டும் என்பதில் அவர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள்!

சில ஆண்டுகளின் முன்பு `ஜீன்ஸ்' என்றொரு தமிழ்ப்படம் வந்தது. `அட.!' இரட்டையர் கதை என்பதை உணர்த்தும் வகையில், `ஜீன்கள் (Jeans) என்று ஆழ்ந்து யோசித்துப் பெயர் வைத்திருக்கிறார்களே! என்று, (என்னைப் போல்) `கிறுக்குத்தனமாக, தவறாக' யாரும் புரிந்துகொண்டு விடக்கூடாது எனும் கவலையோடு, அந்தப் பட விளம்பரங்களில் `Jeans' என்றே ஆங்கிலத்திலும் போட்டார்கள்! எந்த அளவிற்கு `அர்த்தமற்ற பெயர் வைக்கும் கலை' யில் இவர்கள் தேர்ந்திருக்கிறார்கள் பாருங்கள்! இந்தியச் சுதந்திர மாளிகையைக் கட்டி எழுப்புவதற்காகத் தன் சதையைச் சேறாகவும், ரத்தத்தை நீராகவும் வார்த்ததோடு உயிரையே அடிக்கல்லாகவும், தன்மானத்தையே மேற்காரையாகவும் இட்டுச்சென்ற தியாகியர் எண்ணற்றோர்! உயர்குணம் மிகுந்த அந்தத் தலைவர்களைப் பற்றி நம் குழந்தைகளுக்கு உரியவகையில் எடுத்துக்கூற நமக்கும் `நேரமில்லை!'

இந்நாளின் இழிந்த குணங்கள் பலவும் நிறைந்த தலைவர்களையே ஊடகங்களில் பார்த்துப் பார்த்து வளர்ந்துவரும் நம் குழந்தைகளுக்கு `தர்ச புருஷர்கள்' யார்? `இளைய தளபத?, `புரட்சிக் கலைஞர்' `இளைய திலகம்' எனும் தமிழ்ப் புகழ்மொழிகளோடு, `சூப்பர் ஸ்டார்', `எவர்க்ரீன்– ஸ்டார்' `சுப்ரீம் ஸ்டார்' `அல்டிமேட் ஸ்டார்' `அக்ஷன்கிங்' எனும் பட்டங்களோடும் சின்ன–வண்ணத் திரைகளில் உலாவந்து உதிர்ந்துபோகக்கூடிய – நட்சத்திரங்களையே இன்றைய மாணவர்கள், மற்றும் இளைஞர்கள் நெஞ்சில் நிறுத்திவருவது நல்லோர்கள் நெஞ்சை உறுத்துவதாக அல்லவா இருக்கிறது?



பொதுவாக நல்ல நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவும், கதையின் சாராம்சத்தைச் சொல்வதாகவுமே திரைப்படங்களின் பெயர்கள் இருக்கவேண்டும். அப்படித்தான் பெரும்பாலும் இருந்தன. ஆனால் அப்படியே இன்றும் இருப்பதாகச் சொல்லமுடியாது. இருப்பினும், நல்லதமிழில் – கவித்துவமாக இருக்கவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்த – இருக்கின்ற – சில இயக்குநர்களும் உண்டு ! `கல்யாணப்பரிசு' முதல், `காதலுக்குமரியாதை' வரை இந்த வகையினர் தொடர்வது பாராட்டுக்குரியது. ஆனால், புகழ்பெற்றுவிட்ட நடிகர்களுக்கான பட்டங்கள் கலைத்தன்மையிலிருந்து விலகி அரசியல் நோக்கோடு அமையத் தொடங்கியதும், அவர்கள் தம் படப்பெயர்களை கதைகளை விடவும் தமக்காகவே அமைக்கத் தொடங்கியதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதுதான்.

இன்றைய இளம் நடிகர் ஒருவரை `இளைய தளபதி' என்று சொல்கிறார்கள். அரசியலில் சில மக்கள் போராட்டங்களுக்குத் தலைமையேற்ற இளைய தலைவர்களை `தளபதி' என்றும் `மக்கள் தளபதி' என்றும் கூறுவதையாவது ஒருவகையில் ஏற்றுக்கொள்ளலாம். இந்த `சினிமாத் தளபதி'கள் எந்தப் போர்க்களத்தில் யாருக்கெதிராகப் படை நடத்தி, வெற்றிக்கொடி நாட்டினார்களாம் ?



மிகுதி அடுத்த இதழில்....

நா. முத்து நிலவன்

எங்கள் பிள்ளைகளின் கல்வி

(17ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்ட தமிழனத்தின் வரலாறு ஆதாரங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவில் தமிழர்கள் வந்தேறு குடிகள் எனவும் சிங்களவர் ஆதிக்குடிகள் எனவும் கூறப்பட்டதற்கு தமிழரின் வரலாற்று எச்சங்கள் சிங்கள பௌத்தத்தின் தோற்றத்திற்கு முற்பட்டவை என்பது நிருபிக்கப்பட்டிருக்கின்றது.

கேள்வி:- தமிழ் மொழி பாடநூல்களில் பல தமிழ்தவறுகள் இருப்பதாக கூறப்படுகின்றது. அது பற்றி..?

பதில்:- தமிழர் வரலாற்றையே சிங்கள அரசு மாற்றியிருக்கின்றது. அத்துடன் சிங்களச் சொற்களை அப்படியே தமிழிலும் எழுதிவருகின்றது. அதனால் சிங்களச் சொற்கள் தமிழில் கலக்கும் அபாயம் தோன்றியிருக்கின்றது. மொழிரீதியாக பல தவறுகள் ஏற்பட்டுள்ளது. இதற்கு கட்டாயம் மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் தமிழர்களின் வரலாற்றை கற்கமுடியாதபடி தமிழர் வரலாறு நீக்கப்பட்டு சிங்களவர் வரலாறு புகுத்தப்பட்டிருக்கின்றது. இதனால் தமிழ்பிள்ளைகள் பாடசாலையில் சிங்களவர் வரலாற்றையே கற்க வேண்டிய அவலம் ஏற்பட்டிருக்கின்றது. பெருமைமிக்க பண்டைய தமிழரின் வீர வரலாறுகளை இழிவுபடுத்தி கற்கவேண்டிய நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டது. தமிழனுக்கு ஏற்பட்ட அவமானமாகும்.

தமிழ் மாணவர்களின் தன்னம்பிக்கையும், நாட்டுப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றையும் சீரழியும் வகையில் தமிழர்வரலாற்றை தமிழ் மாணவர்கள் கற்பதனை தடுக்கும் வகையில் சிங்கள ஆட்சியாளர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். பொய்யான வரலாறு தமிழ் மாணவர்களுக்கு சிங்கள அரசால் புகட்டப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் எமது மண்ணில் எங்கள் பிள்ளைகளின் கல்வி சீரழிவதனை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதற்குரிய மாற்றுத்திட்டங்களைத் தீட்டி கற்பித்தல் நடவடிக்கைகளை சீராக்க வேண்டியது. எமது தலையாய கடமையாகும்.

தமிழர்களின் மனோபலத்தைத்....

(13ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இளைஞர்களும் உடந்தையாக இருப்பது வேதனைக்குரிய விடயம். தமிழ் பெண்களை காதலிப்பதற்கும் திருமணம் செய்வதற்கும் சிங்கள அரச படையினரும் பொலிசாரும் புலனாய்வாளர்களும் நாட்டம் கொண்டிருக்கின்றார்கள். வீதியால் செல்லும் பெண்பிள்ளைகளை வசியப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள் இவ்விடயத்தில் பெண்பிள்ளைகளும் பெற்றோரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இனக்கலப்பு செய்யப்படுவதன் மூலம் தமிழினத்தின் புனிதத்தையும் தனித்துவத்தினையும் அழித்துவிடலாம் என சிங்கள அரசு சிந்திக்கின்றது. அதற்காக கலப்பு திருமணம் செய்ய அரசும் படைவீரர்களை தூண்டி விரேச சலுகைகளையும்செய்துவருகின்றது.

பொருளாதாரத் தடைகளையும், மருத்துவ தடைகளையும் ஏற்படுத்துவதன் மூலம் மக்களை பசி பட்டினி பஞ்சத்தில்மூழ்கடிப்பதனால் போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையே முரண் நிலையை உருவாக்கலாம் என அரசு நினைக்கின்றது. புலிகளின் முகாம்களுக்கு அருகிலும் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுகளைப்போட்டு அவர்களைக் கொன்றழிப்பதனால் புலிகள் மீது மக்களுக்கு விரக்தி ஏற்படும் என்ற ரீதியில் அரச படை உளவியல் யுத்தத்தை மேற்கொள்கின்றது.

புலிப்படைக்கு உணவு கொடுத்தவர், தங்குமிடம் கொடுத்தவர், மருந்து கொடுத்தவர் என்ற பொய்யான குற்றச்சாட்டுகளை மக்கள் மீது சுமத்தி கைது செய்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்வதன் மூலம் மக்களுக்கும் போராளிக்கும் இடையிலான உறவை அழித்துவிடலாம் என அரசு உளவியல் ரீதியிலான நடைமுறைகளை கையாளுகின்றது.

உளவியல் ரீதியில் தமிழினத்தை அடிமை கொள்ள தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிக்க அரசுமுயலுகின்றது. அதற்காக தமிழ் மாணவர்களின்கல்வியில் கை வைத்து தரப்படுத்தல் சட்டத்தைக்கொண்டுவந்தது. பாடசாலைக்கான அபிவிருத்தி திட்டங்களை தடுத்தது. நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தியது ஆசிரியரை குறைத்தது பாடசாலை வளங்களை கட்டுப்படுத்தியது. இவ்வாறாக தமிழினத்தின் கல்வி சீரழிக்கப்பட்டு அறிவியல் வேகம் பின்தள்ளப்பட்டது.

தமிழரின் போராட்ட வளர்ச்சியை அழித்துவிட சிங்கள அரசு போட்ட திட்டங்களை கிணறு வெட்டப்போய் பூதம் தோன்றிய கதை போல் நிலமை தலைகீழாக மாறியது. சிங்கள அரசின் கொடுமைகளினால்பாதிக்கப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் ஆயுதப்போராட்டத்தில் நாட்டம் கொண்டு அரசுக்கு எதிரான ஆயுதப் போரில் ஈடுபடலாயினர்.

சிங்கள அரசின் வெறியாட்டங்களினால் தாயை, தந்தையை, சகோதரங்களை இழந்தவர்கள் சிறிலங்கா அரசுக்கும் படைக்கும்எதிராக ஆயுதம் தூக்கி போராட் புறப்பட்டனர். புலிகள் இயக்கத்தினையும் மக்களினையும் பிரிக்கவும் உறவை சிதைக்கவும் காலத்திற்குகாலம் பல்வேறு நடவடிக்கைகளை அரச படையும் அதன் புலனாய்வு நிர்வாகங்களும் மேற்கொண்ட உளவியல் ரீதியிலான புலனாய்வு யுத்திகள் முயற்சிகள் அனைத்தும் புலிகள் இயக்கததை பலவீனப்படுத்துவதற்கு பதிலாக உறுதியோடும் வலிமையோடும் பரிணமிக்கவே வழிகோலியது.

சில சந்தர்ப்பங்களில் அரச உளவுத்துறையின் யுத்திகள் தமிழர் போராட்டத்தில் தற்காலிக தாக்கத்தினை ஏற்படுத்தின புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மக்களை புலம் பெயரச் செய்த முயற்சிகள் தற்காலிக வெற்றியை பெற்றுக் கொடுத்தது. ஆயினும் வெளிநாடு சென்றவர்கள் தங்கள் தேசத்திற்கான பங்களிப்பை அங்கிருந்தே செய்து கொண்டிருந்ததனால் நீண்ட காலத்தில் அரசுக்கு பயனளிக்கவில்லை.

விடுதலை உணர்வில் ஊறிப்போன தமிழர்களின் மனோவியல் பலத்தினை தகர்த்து தமிழர்களின் தேசிய போராட்டத்தை முன்னகர்த்தும் புலிகளையும் மக்களையும் பிரித்துவிட அரச புலனாய்வு பீடம் எல்லாவிதமான திட்டங்களையும் தீட்டி சகல விதமான உளவியல் யுத்திகளையும் கையாண்டு மக்களுக்கு மனச்சோர்வினை ஏற்படுத்தி தவறான வழிக்கு இட்டுச் செல்ல முயன்று கொண்டிருக்கும் வேளையில் தமிழ் மக்கள் அதில் மதிமயங்கி விடாமல் அதியுச்ச விளிப்பு நிலையில் இருக்க வேண்டும்.

– ச.சங்கரன்.

அகதிகள் தொடர்பாக சுவிசின் கடுமையான சட்ட அமுலாக்கலுக்கு யூ.என்.எச்.சி.ஆர். கடும் விசனம்

சுவிச்சர்லாந்து அரசினால் முன்மொழியப்பட்டுள்ள கடும்போக்கான புதிய புகலிட விதிகள் மீதான தமது விசனத்தை ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் (UNHCR) வெளிப்படுத்தியுள்ளது. சர்வதேச அகதிகளுக்கான சட்டவிதிகளையும், அதன் மூலக் கருத்தையும் மீறும் அபாயத்தை அவ்விதிகள் கொண்டிருப்பதாக யூ.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது. சுவிட்சர்லாந்தில் இறங்கிய 48 மணிநேர அவகாசத்துக்குள் கடவுச் சீட்டைக் காண்பிக்க முடிந்தவர்கள் மாத்திரமே அகதி அந்தஸ்தைப் பெறக்கூடிய வகையில் அமைந்துள்ள புகலிடம் சட்டத்தை வலதுசாரி அரசியல்வாதியும், நீதி அமைச்சருமான கிறிஸ்தோப் ப்ளொகர் முன்மொழிந்துள்ளார்.

புகலிடம் தேடுபவர்களின் எண்ணிக்கை ஐரோப்பாவில் வீழ்ச்சி கண்டுள்ள நிலையிலேயே ப்ளொக்கரின் முன்மொழிவுகள் வெளியாகியுள்ளன என்று அறிக்கை ஒன்றில் யு.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது. `சுயாட்சி அலுவலகத்தால் செய்யப்பட்ட சில முன்மொழிவுகள், புகலிடச் செயற்பாடுகளுக்கான வழிமுறைகளைக் குறைக்கும் நடவடிக்கையை மையமாகக் கொண்டுள்ளன. இது 1951ம் ஆண்டு அகதிகள் கோட்பாட்டுச் சட்டங்களின் உள்ளடக்கத்தையும் மீறுகின்றது' என்றும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. `அவர்களின் புகலிட சட்டங்களில் வரைமுறைகளைக் கொண்டுவரும் ஒற்றை மனப்போக்கான நடவடிக்கைகளுக்கான எந்தவிதத் தேவையும் அரசாங்கங்களுக்கு இல்லை என்பதை யூ.என்.எச்.சி.ஆர். அவதானித்துள்ளது' என்றும் அது தெரிவித்துள்ளது.

ப்ளொக்கர், ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள அயல்நாடுகளிலிருந்து சுவிஸ் வரும் மக்களின் ப்ளொக்கரின் வார்த்தைகளில், `ஏமாற்றுக்காரர்களின் எண்ணிக்கையைக் குறைக்க எண்ணுகிறார். குறிப்பாக மேற்கு ஆபிரிக்கா, பால்கன், நாடுகளிலிருந்து இடம்பெயர்ந்து வருபவர்களின் பாதையாகப் பயன்படுகின்ற `இத்தாலி' இந்நாடுகளுள் முதன்மையானது. ஆனால், தமது ஆவணங்களை அதிகாரிகளிடமும் கடத்தல் வலையமைப்புகளிடமும் பறி கொடுத்தும், தேசிய உத்தியோகத்தர்களாலும் இன்னலுக்குள்ளாகிய மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்கப்பட்டதாக அவரின் திட்டங்கள் அமைந்துவிடும் என்று யூ.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது. சனத்தொகையில் கால்வாசிக்கும் மேலாகத், தேசிய அடையாள வேறுபாட்டைக் கொண்டுள்ள இந்நாட்டில் சர்ச்சைக்குரிய குடியேற்ற எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு கடந்த வருடத் தேர்தலில் போட்டியிட்டப் ளொக்கரின் சுவிஸ் மக்கள் கட்சி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர்ந்து வாழும்.....

(12ம் பக்கத் தொடர்ச்சி)

உள்வாங்கி புலனாய்வு ரீதியாகத் தயார்படுத்தி தமிழர் தாயகம் அனுப்பி பலமான புலனாய்வுத் தகவல்களை பெறுவதற்கு பல நாடுகளும் முயற்சிக்கின்றன.

வெளிநாட்டுப் புலனாய்வுச் சக்திகளிடம் தமிழர்கள் சோரம் போய் விடக் கூடாது. உலகப் புலனாய்வாளர்களினால் போடப்படும் தூண்டில்களில் விழுந்தும் விடக் கூடாது.

சிறிலங்காவின் புலனாய்வுத் துறையின் சர்வதேச பணியகம் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களைப் புலனாய்வு ரீதியாகத் தயார்படுத்தி, புலிகளின் சர்வதேச வலைப்பின்னலுக்குள் உட்புகுத்தி தகவல் சேகரித்தது. அதனைக் குழப்பும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் என்றோ முடிவுக்கு வந்திருக்கும். தமிழர்கள் என்றோ சுதந்திரம் பெற்றிருப்பார்கள். ஆனால் எட்டப்பர்களின் காட்டிக் கொடுப்புத் தொழிலினால் தான் தமிழர் போராட்டம் கால நீட்சியினால் இழுத்தடிக்கப்படுகின்றது.

தமிழர் தேசத்தின் துரோகத் தனங்களையும், காட்டிக் கொடுப்புக்களையும் தமிழர்கள் உணர்ந்து சுயநலன்களைத் தூக்கி வீசிவிட்டு, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தனி மனித பலவீனங்களுக்குச் சோரம் போய் தமிழரின் தேசத்தையே விற்றுப் பிழைக்கும் கேவலமான துரோகிகளாக மாறக்கூடாது.

ஆகவே எதிர் காலத்தில் தமிழர்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தமிழர் தாய் நாடாம் தமிழீழத்தில் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ அனைத்துலகத் தமிழ் மக்களும் புலனாய்வு ரீதியாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

கருணாவை நான் அழைத்துச் செல்லவில்லை என்னைக் கொலை செய்யவே பொய்ப் பிரசாரம்

- அநுரா புலம்பல்

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை நான் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றதாகக் கூறுவதில் எந்த வித உண்மையும் இல்லை. அது அப்பட்டமான பொய்யாகும். கருணாவுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. என்னைக் கொலை செய்யும் சதி முயற்சியாகவே ஐ.தே.க. இவ்வாறு ஒரு கதையைப் புனைந்து விட்டுள்ளது என சிறீலங்கா அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார். கருணாவைக் கொழும்புக்குக் கூட்டி வந்து அடைக்கலம் கொடுத்த ஐ.தே.க.வினர் இன்று அதனை மறைக்கக் கூட நாடகம் ஆடுகின்றனர். அது மாத்திரமன்றி என் மீது வீண்பழி சுமத்துகின்றனர். ஐ.தே.க.வின் இத்தகைய விஷமத்தனமான பிரசாரங்களுக்குச் சில தனியார் துறை ஊடகங்களும் ஒத்து ஊதுகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சிங்கப்பூருக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள அநுரா, நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறீலங்கா உலக வர்த்தக மையக் கட்டடத்திலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட கருணாவை நான் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகிய அதேவேளை, மேலும் சில ஊடகங்களில் அநுரா பிரியதர்ஷன யாப்பாவே கருணாவை அழைத்துச் சென்றதாகச் செய்திகள் வெளியாகின. இதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியினர் பொய்ப்பிரசாரம் மேற்கொள்வது புலனாகிறது. இவ்வாறான செய்திகள் மூலம் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியை ஜீரணிக்க முடியாதவர்களே இவ்வாறான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

சில தனியார்துறை ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கைக்கூலிகளாக செயற்படுகின்றன. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்ற எனது உற்ற நண்பனான ஜோன் அமரதுங்க நாடாளுமன்ற உறுப்பினரும் துணை போயுள்ளமை வேதனையாக உள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோன் அமரதுங்க பாதுகாப்புடன் வீதி உலா வந்தார். தற்பொழுது சொகுசு வாழ்வினை இழந்து வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால் ஏற்பட்டுள்ள மானப் பிரச்சினையை நீக்கவே அவர் ரணிலுக்கு துணை போகிறார். ஜோன் அமரதுங்க மனநோயாளியாவதற்கு முன்னர் புதிய அரசுடன் இணைந்து செயல்படுவாராயின் அவரை வரவேற்கத் தயாராக இருக்கின்றோம்.

நோர்வே அமைச்சர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேச்சு

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இலண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் அன்றையதினம் காலை பத்து மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பில் சிறீலங்காவிற்கான நோர்வேயின் உயர்ஸ்தானிகர் ஹான்ஸ் பிரஸ்கரும் கலந்து கொண்டுள்ளார். இச்சந்திப்பில் சிறீலங்கா ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்புக் குறித்து இவர்கள் அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இது தவிர, சமாதான முயற்சிகள் குறித்த தற்போதைய சூழ்நிலை, கிழக்கு நிலவரங்கள், சிறீலங்கா அரசின் அசமந்தப் போக்கு, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நிலை, இடைக்கால நிர்வாக அலகு போன்ற பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்தும் இப்பேச்சு வார்த்தையின் போது பேசப்பட்டது.

திரு.வைத்திலிங்கம் தர்மலிங்கம்

தோற்றம் 26 . 12 . 1930

மறைவு 01 . 08 . 2004

மரண அறிவித்தல்

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமாகிய திரு.வைத்திலிங்கம் தர்மலிங்கம் அவர்கள் 01.08.2004 அன்று பாரிசில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி. வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி. சோமசுந்தரம் தங்கம்மாவின் அன்பு மருமகனும்

புஸ்பவதியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (பாபு) - பிரான்ஸ், காண்டீபன் (காண்டி) - பிரான்ஸ், பார்த்தீபன் (பிரான்ஸ்), இளங்கீரன் (பிரான்ஸ்), சிறிதரன் (பிரான்ஸ்), பரணிதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும்,

சயாஜினி (பிரான்ஸ்), ஆனந்தகலா (பிரான்ஸ்), சுலோசனா (பிரான்ஸ்), சோபிகா (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி (ஜேர்மனி), தமிழ்மாறன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

ஜனுசா, சாயித்தியா, கவிநயா, கீரா, துவாரகன், சயித் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்லத்துரை, சின்னத்துரை, நடராஜா, செல்லம்மா, பாக்கியலெட்சுமி மற்றும் குணமாலை (இலங்கை), பொன்னுத்துரை (இலங்கை), இரத்தினம் (சுவிஸ்), இலட்சுமி (இலங்கை), சிவக்கொழுந்து (இலங்கை), நல்லதங்கம் (பிரான்ஸ்), சிவபாக்கியம்-(கனடா), ராஜலெட்சுமி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, மார்க்கண்டு, நல்லையா, பரமேஸ்வரி, பத்மாவதி மற்றும் கனகசுந்தரம் - (இலங்கை), சுப்பிரமணியம் சண்டிலிப்பாய், முருகானந்தம் (இலங்கை), விஜயலெட்சுமி (இந்தியா), சிவநிதி-(பிரான்ஸ்), திலோத்தமை (இலங்கை), தவநிதி (கனடா), தம்பிஜயா (பிரான்ஸ்), வடிவேலு (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.08.2004 செவ்வாய்க்கிழமை, பி.ப. 2 மணி - 6 மணி வரை
மற்றும் 04.08.2004 புதன்கிழமை, பி.ப. 2 மணி - 6 மணி வரை,

LA MAISON FUNERAIRE PARIS
7-9 Bd de Menilmontant
75011 Paris
Métro : Philippe Auguste (Ligne-2) என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு,

05.08.2004 வியாழக்கிழமை காலை 11 மணிதொடக்கம், பிற்பகல் 2 மணிவரை இறுதிக்கிரிகைகள் நடைபெற்று, பிற்பகல் 2.45 மணிக்கு,CIMETIRE DU PERE LA CHAISE (Gambetta) இல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல் :
மனைவி, மக்கள், மருமக்கள்
தொடர்புகளுக்கு : 01 56 29 35 76
பாபு : 01 42 09 33 45
காண்டி : 06 20 82 33 70

NIGHT TRAVEL நைற் ட்ரவல்ஸ்

உங்கள் விரும்பிய பயணத் தேவைகளை சிறந்த தரத்துடன் இலகுவாக ஆக்கிக்கொள்ள எங்களை நாடுங்கள். தரமான விலை, சிறந்த சேவை, நிறைந்த பயன் போன்றவற்றோடு இரவுநேர ஆசனப் பதிவுகளை 21.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை வாரத்தில் 7 நாட்களும் தொலைபேசியில் செய்து கொள்ளலாம்.

எங்கள் ஆரம்பத்தை முன்னிட்டு ஏயர் லங்கா விமானத்தில் கொழும்பு சென்றுவர 970 பிராங்குகள் மட்டுமே

தொடர்புகளுக்கு: 031-302 53 37, 079 - 546 45 20 e-mail:nighttravel@hispeed.ch

ஆனையிறவில் உப்பு உற்பத்தி நிறுவனக் கட்டடம் திறப்பு

ஆனையிறவில் புதிதாக நிறுவப்பட்ட அயடீன் கலந்த உப்பு உற்பத்தி நிறுவனக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொருண்மிய மதியுரையகத் தலைவர் ம.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினைக் கிளிநொச்சி மாவட்ட அரசச் செயலக அலுவலர் ச.பி.அமலராசா ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றினார்.

நிறுவனக் களஞ்சியத் தொகுதியைக் கிளிநொச்சி அரச செயலகத் துணைத்திட்டப் பணிப்பாளர் பி.கா.மத்தியாஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து நிறுவனத்தின் முதன்மைப் பெயர்ப் பலகையை ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனப் பணிப்பாளர் செல்வன் திரை நீக்கம் செய்தார். அதனையடுத்து அயடீன் கலக்கும் பொறித் தொகுதியடங்கிய தொழில்க் கூடத்தின் பெயர்ப் பலகையினை கொழும்பு யுனிசெப் மேலாளர் திரைநீக்கம் செய்ததுடன் கட்டடத்தையும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

ஆய்வு கூடத்தினைத் தமிழீழ அரசியல்த்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இந்நிகழ்வை அடுத்து கருத்துரைகள் இடம்பெற்றன. அரசியல்த்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், அரச செயலக துணைத் திட்டப் பணிப்பாளர் பி.கா.மத்தியாஸ், யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி பெனி புறூட், யுனிசெப்பின் கொழும்புத் திட்டப் பிரதிநிதி யு.னு. அதிகாரி புலம்பெயர் தமிழ்மக்களின் பிரதிநிதி ஆர். இராதாகிஸ்ணன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

உணவிடுதி விற்பனைக்கு உண்டு

நீசுக்கும் கானுக்கும் இடையே உல்லாசப் பயணிகள் வருமிடத்தில் 40 இருக்கைகள் போடக்கூடிய உணவிடுதி விற்பனைக்கு உண்டு!

வாடகை : 800

தொடர்புகட்கு : 06 64 80 61 67

1ம் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20.04.1935

மறைவு: 27.07.2003



அமரர்.பொன்னம்பலம் ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை பாதுகாவலர்)

இல. 72, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர் இறைவனடி சேர்ந்து ஓராண்டு நினைவுதினம் இன்று. திதி. 04.08.2004

இவர் காலம் சென்ற பொன்னம்பலம் மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலம் சென்ற கந்தையா இரத்தினம் தம்பதிகளின் 2வது மருமகனும், காலம் சென்ற தில்லையம்பலம் பொன்னம்மா, காலம் சென்ற தம்பிராசா வேதநாயகி ஆகியோரின் சகோதரரும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சுசீலா, சுமதி, சேகர், சுகுணா, ஸ்ரீதார், பாஸ்கர், கௌரி, பிரபாகர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இவர் காலம் சென்ற பரமநாதன், மகேந்திரன், ராகினி, அந்தோனிப்பிள்ளை, பாலேந்திரராணி, அனோஜ, கருணாகரன், கேமலதா ஆகியோரின் அன்பு மாமனாரும், வீ.கே.சண்முகலிங்கம் வீ.கே. அரசரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், க. நேமிநாதன், க.லோக நாதன் ஆகியோரின் சிறியதகப்பனும்,

கோபிநாத், மயூரி, லோகநாத், அரவிந்தன், சரண்யா, ஆர்த்திக், பிரவீந்த், ரோசினி, நிக்சன், நிசாந்தன், கிஸ்யந்தன், சுகேதன், சிந்தியா, சஞ்யேய், சுபீட்சன், சுவாதி, சதுஸ்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

04.08.2004 அன்று அவரின் ஓராண்டு (புதன்கிழமை)

நினைவுதினம் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ஆ.சேகர், ஆ.பாஸ்கர் (பிரான்ஸ்)
01 46 87 28 08

45ம் நாள் துயர் பகிர்தல்

தோற்றம்: 19.08.38

மறைவு: 17.06.2004

ஞானமுத்து மேரியோசப்

(யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக்கொண்ட ஞானமுத்து மேரியோசப் அவர்கள் கடந்த 07.06.2004 அன்று இறைவனடி எய்தினார்.

இவர் மேரியோசப் பிலோமினாவின் அன்புக் கணவரும் ஆவார். இவர் பாசம்மிகு பிள்ளைகளான திருமதி யொறோம் பப்ஸ்சன் லீலி (ரெல்லா) யாழ் ஆசிரியர், திருமதி மங்களதாஸ், இலோறாலீலி (யோகா) யாழ், திரு.ஸ்ரனிஸ் லோஸ் (ஜீவா) ஜேர்மன், திரு. யோன்யெனிஸ் (தேவா) லண்டன், திரு.அன்ரனி இயூசோட் (சோபா) யாழ், திரு. அன்ரனியூட்ஸ் (தயா) பாரிஸ். இவர்களின் பாசமிரு தந்தையும் ஆவார்.

இவர் திரு.யொறோம் - யாழ்ப்பாணம், திரு. மங்களதாஸ் - யாழ்ப்பாணம், திருமதி ஸ்ரனிஸ்லோஸ் யோய் -ஜேர்மனி, திருமதி யோன்யேனிஸ் டல்சி -லண்டன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

J.அபிறாஜ், J.Thanujan J.அயுத் (லண்டன்), M.அஜய், J.Sathrajan, S.Lovera, S. டிணிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவுமாவார்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
தகவல்: தயா - 0033668121168
ஜீவா - 00491602559993
தேவா - 00442086950981

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

RCS PARIS
B 452 164 817 (2004B03079)

Directeur de la publication:
A.F. Santiogu

Redacteur: K. Jeisanthar

Impression:
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

சுவிஸ் தமிழர் இல்லம் அனைத்துலக ரீதியில் நடாத்தும்
தமிழர் விளையாட்டு விழா 2004ல்
Basel ரவி கடை நடாத்தும்

மாபெரும் மலிவு விற்பனை

இடம்: Sportanlage Deutweg und Talgut Winterthur Zu

முக்கியகுறிப்பு:
தாய் நிறுவனம் Basel ரவி கடை
061/272 90 30
061/272 09 90
079/356 22 78
கிளை நிறுவனம் Bern ரவிகடை

இலங்கையின்....

களும் பங்கேற்றிருந்தனர். இரு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாடானது உலக பொருளாதாரத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் சவால் விடுக்கும் வகையில் அமையுமென்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இதேவேளை, இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு முன்னோடியாக முதல் நாள் பாங்கொக் நகரில் இந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கலந்து கொண்டார்.

ஐந்து நாடுகள் கலந்துகொள்ளும் இந்த அமைப்பிற்கு இதுவரை குறிப்பிடத்தக்க பெயர் எதுவும் இல்லை. ஐந்து நாடுகள் பெயர்களின் முதல் எழுத்தை மட்டும் குறிப்பிட்டு பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்த அமைப்பில் கடந்த பெப்ரவரி மாதம் பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளும் சேர்ந்துள்ளன. எனவே இந்த அமைப்பிற்கு `வங்க கடல் சமூகம்' என்று பெயர் சூட்டலாமா என்று ஆலோசிக்கப்படுகிறது. தற்போது 7 நாடுகளினதும் இப் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டை பிம்ஸ்ரெக்கின் உச்சி மாநாடு என்று கூறப்படுகின்றது.

உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் அதாவது 130 கோடி பேர் தெற்கு ஆசிய நாடுகளில் வசிக்கின்றனர். ஆனால், உலக மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கு கூட இல்லாத அமெரிக்காவும், ஐரோப்பாவும் உலக பொருளாதாரத்தையே கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கும் மனித வளம் மற்றும் கச்சாப் பொருட்களை தெற்கு ஆசிய நாடுகள் ஏற்றுமதி செய்கின்ற போதிலும் தெற்கு ஆசிய நாடுகள் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன. இதற்குக் காரணம் இந்த நாடுகளுக்கிடையே ஒற்றுமை இன்மை தான்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பூட்டான், நேபாளம், மாலைத்தீவு, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் சேர்ந்து சார்க் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இதேபோல் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, தென்கொரியா, மியான்மர் (முந்தைய பர்மா) உட்பட பத்து நாடுகள் கூட்டாக `ஆசியான்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்தியா, தாய்லாந்து, இலங்கை, மியான்மர், பங்காளதேஷ் ஆகிய நாடுகள் சேர்ந்து தனி பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்த ஐந்து நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு இதுவரை ஆறு முறை நடைபெற்றுள்ளது. இந்த நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் இதுவரை ஐந்து முறை கூடி பேசியுள்ளனர்.

இந்த நாடுகளின் தலைவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை கூடி பேசி வருகின்ற போதிலும் தெற்கு ஆசிய நாடுகளுக்கிடையே பெரிய அளவு பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படவில்லை. காரணம், இந்த நாடுகளுக்கு இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இல்லாதது தான். இந்த குறையைப் போக்க இந்தியா உட்பட தெற்கு ஆசிய நாடுகள் இப்போது தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. ஆசியான் அமைப்பில் சேர இந்தியாவும் ஆர்வம் காட்டியுள்ளது. கடந்த முறை ஆசியான் அமைப்பின் உச்சி மாநாட்டில் இந்தியாவும் கௌரவ உறுப்பினராக கலந்து கொண்டது

இடைக்காலத் தன்னாட்சி.....

மேற்படி கோரிக்கை அடிப்படையில் ஜனாதிபதி பேச முற்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாக ஜே.வி.பி. அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றது. இந்த அச்சுறுத் தலை ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கேகாலை யில் நடைபெற்ற கூட்டமொன்றில் பகிரங்கமாகவே அறிவித்திருக் கின்றார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் கடந்த புதன்கிழமை நடத்திய அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகள், ஊடகவியலாளர் மாநாடு என்பவற்றில் மீண்டும் யுத்தத்துக்கான அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கடுமையான தொனியில் கருத்து வெளியிட்டிருக்கின்றார். சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது. ஜனாதிபதி தமது முடிவை எவருக்கும் பயந்து மாற்றி விடக் கூடாது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதியின் கரங்களைப் பலப் படுத்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே இருக்கின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கோரிக்கை அடிப் படையில் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பிலான பிரேரணையை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் காலம் தாழ்த்தாமல் சமர்ப்பிக்க வேண்டும். அந்தப் பிரேரணையை தோற்கடிக்க நாம் எவருக்கும் இடமளிக்கமாட்டோம். ஜே.வி.பி.யோ வேறு எவருமோ எதிர்த்தாலும் ஜனாதிபதிக்கு இந்த விடயத்தில் நாம் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொடுப்போம்.

இன நெருக்கடிக்கு சமாதானத் தீர்வு காணும் விடயத்தில் எமக்கிடையே அரசியல் முரண்பாடுகள் இருக்கக் கூடாது. இனிமேல், யுத்தம் என்ற பேச்சுக்கே இடமிருக் கக் கூடாது, எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவித்த போது, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் எம்மைச் சந்தித்த போது, சமாதான நடவடிக்கை இப்போது மிகவும் ஆபத்தான கட்டத்துக்குள் சிக்கியிருப் பதாகவும் போர் அச்சுறுத்தல் மேலோங்கிக் காணப்படுவதாகவும் பெரும் கவலையுடன் தெரிவித்த தோடு, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அனுசரணை யாளராகச் செயற்பட ஆரம்பித்த தன் பின்னர் முதல் தடவையாக பெரும் நெருக்கடியையும், சவாலையும் எதிர்கொள்ள வேண்டியேற் பட்டதாகக் குறிப்பிட்டார்.

போர் நிறுத்த உடன்பாடு நிரந்தரமானதல்ல. தற்காலிக மானது. எந்நேரமும் முறிந்து விடலாம். இந்த இடைப்பட்ட காலத்தில் சமாதானப் பேச்சில் உறுதியான தளம் ஏற்படுத்தப்பட வேண்டும். சமாதானப் பேச்சுகள் மீண்டும் வெகுதூரம் பின்தள்ளப் பட்டுள்ளது. கிழக்கு நிலைமையும் மீண்டும் மோசமடைந்துள்ளது. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு அரசு உறுதியானதும், ஆரோக்கியமானதுமான நடவடிக் கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமானதாகும்.

விடுதலைப் புலிகளின்.....

இல்லை. போரின் கொடுமையை அறிந்தவர்கள் நாம். போர் வேண்டாம் என்று முதலில் கையெழுத்துப் போடுவது நாமே. எம்மீது போர் திணிக்கப்பட்டது. இன்று எமது பலத்தை உலகம் புரிந்துகொண்டு ள்ளது. இன்று தமிழினம் உலகில் தலை நிமிர்ந்து நிற்கின்றது' என்று எழிலன் தனது உரையில் தெரிவித்தார்.

நாடாளுடமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பேசும் போது, இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கும் விடயத் தில் `ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே என்றார். ரணில் அரசு பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க மறுபுறம் வல்லரசு நாடுகளுடன் போர்க் கப்பல் கொள்வனவு, பாதுகாப்பு உடன்படிக்கை என்றெல்லாம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தது என்பதை செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக் காட்டினார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி பேசும்போது, 1983 ஜூலை சம்பவத்துக்கு பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ள சந்திரிகா, வெலிக்கடை படுகொலைச் சம்பவம் பற்றி விசாரிக்க நீதிவிசாரணைக் குழு ஒன்றை நியமிக்க முன்வராதது ஏனோ என்று கேட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெயானந்த மூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், சிவசக்தி ஆனந்தன், எஸ்.நோகராதலிங்கம், சிறையில் கொல்லப்பட்ட தங்கத்துரையின் மகன் கரிகாலன், சுப்பிரமணிய சர்மா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

மினி சுற்றுலா

Paris - Lourdes
Lourdes - Andora
Andora - Paris

Aller 09.07.2004 06.08.2004 20.08.2004

Retour 12.07.2004 09.08.2004 23.08.2004

பயணச்சீட்டு, தங்குமிட கட்டணம், சனி காலை, மதியம், இரவு, ஞாயிறு காலை உணவு அனைத்துடனும்

பெரியவர்கள் 150 ஈரோ சிறியவர்கள் 110 ஈரோ

அன்புடையீர் வணக்கம்!

சிறிய விடுமுறையில் லூர்து அன்னையின் தரிசனம் பெற்று அந்தோரா மலை பிரதேச காட்சிகளை பார்த்து மகிழவும்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட திகதிகளில் பேரூந்து பாரிசிலிருந்து வெள்ளி இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு சனி காலை லூர்து வந்தடைந்து தரிசனத்தை முடித்துக்கொண்டு, ஞாயிறு காலை அந்தோரா புறப்பட்டு மதியம் சென்றடையும். அந்தோராவிலிருந்து மாலை புறப்பட்டு திங்கள் காலை பாரிசை வந்தடையும்.

sumangali textail la chapelle

மேலதிக விபரங்களுக்கு :

theepam textail la chapelle

06 60 92 12 69 - 06 63 31 49 32

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

RESTAURANT ROYALTANDOURI

Métro: Bellville

தொடர்புகளுக்கு: 01 43 14 67 49 - 06 64 00 66 62 - 06 10 59 37 44

வீடு வாடகைக்கு

Corbeil Essonnes ல் RER-D க்கு மிக அருகாமையில் அமைந் துள்ள Moulin Galant Station க்கு அருகே 45 சதுர மீட்டரைக் கொண்ட FI / Kitchen / Bathroom / Balcony Cave gas வசதியைக் கொண்ட Appartment க்கு குடியிருக்க தேவை ஒரு நபர்.

வாடகை 300 ஈரோ

Transport வசதி RER D, RER C

தொலைபேசி: 01 49 60 85 26 / 08 71 76 85 26
01 64 96 68 82 / 06 26 56 13 95

25

Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

Restaurant Tharsana's

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant Prassah
Gastronomiques Indiennes

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
☒ நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேசுவதற்கு அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால் எந்தவித நிபந்தனையுமின்றி பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார்

- ஐ.தே.க. அறிவிப்பு -

(02.08.04)

விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க முன் வரும்போது, அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால் எந்த விதமான நிபந்தனையையும் விதிக்காமல் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி பாதுகாப்பதற்கு தாம் தயாராக உள்ளதாக சிறீலங்காவின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா மன உறுதியுடன் செயற்பட்டு சமாதானப் பேச்சுகளை விரைவாக முன்னெடுக்க வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்பார்ப்பாக இருப்பதாகவும், அதற்குத் தடைகள் வருமானால் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் அதனோடு ஒன்றிணைந்துள்ள கட்சிகளும் தயார் நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது, முன்னாள் அமைச்சரும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டொக்டர் ராஜித சேனாரத்ன கட்சியின் இந்த முடிவைத் தெரிவித்தார்.

சேனாரத்ன அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த போது, விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கோரிக்கைக்கு முன்னுரிமை கொடுத்துப் பேசுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணக்கம் தெரிவித்திருக்கின்ற போதிலும், அவரது தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குள்ளிருக்கும் ஒரு சிலரும், பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யும் அதனை எதிர்த்து வருகின்றனர். விடுதலைப் புலிகளின்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முழுமையான ஒத்துழைப்பை இந்தியா வழங்கும்

சிறீலங்கா ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

(02.08.04)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முழுமையான ஒத்துழைப்பை இந்தியா வழங்குமென்றும், ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களின் உரிமைகள் உறுதிப் படுத்தப்படும் வகையில் அமையும் தீர்வொன்றை இந்தியா வரவேற்குமென்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உறுதியளித்துள்ளார். பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்ளவென பாங்கொக் சென்றிருந்த சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, அங்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். காங்கிரஸ் அரசாங்கம் பதவியேற்ற பின் சிறீலங்கா, இந்திய நாடுகளின் தலைவர்களின் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இலங்கைச் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை, மற்றும் இதன் அடுத்த கட்டச் செயற்பாடுகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி, இந்தியப் பிரதமருக்கு விளக்கமளித்தாரென ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகம் எரிக் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, சிறீலங்காவின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பினை வழங்குமென குறிப்பிட்ட இந்தியப் பிரதமர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இந்தியா வருமாறும் அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சிறீலங்கா, இந்தியா, பங்களாதேஷ், மியான்மார், தாய்லாந்து ஆகிய 5 நாடுகள் பங்கேற்கும் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு கடந்த வெள்ளி, சனி ஆகிய இருநாட்கள் தாய்லாந்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் 5 நாடுகளின் தலைவர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

விடுதலைப் புலிகளின் இராணுவ பலமே இன்னொரு கறுப்பு ஜூலையை தடுத்து நிறுத்தியது

(01.08.04)

விடுதலைப் புலிகளின் இராணுவ பலமே 1983ற்குப் பின்னர் இன்னொரு இனப் படுகொலை ஏற்படாமைக்கான காரணமாகும் என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் வெலிக்கடை தியாகிகள் நினைவு தின நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்துகையில் தெரிவித்தார். திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கில் கவிஞர் வ.விக்னேஸ்வரம் தலைமையுரை நிகழ்த்தினார். பேரவைச் செயலாளர் ஈழத்துமணி வரவேற்புரையாற்றினார். 1958 தொடக்கம் தமிழினப் படுகொலை நடைபெற்று வந்துள்ளது. 1983 இலும் தொடர்ந்தது. திருநெல்வேலித் தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டனர். அதனை அடுத்து தமிழினப் படுகொலை நாடு முழுவதிலும் இடம்பெற்றது. கட்டுநாயக்க, முல்லைத்தீவு, ஆனையிறவு முதலிய இடங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கில் படையினர் கொல்லபட்டனர். தமிழருக்கு எதிராகபதில் தாக்குதல் இடம்பெறவில்லை. காரணம், விடுதலைப் புலிகள் இராணுவ பலம் பெற்றிருப்பதுதான்.

1983 ஜூலை இனப்படுகொலை குறித்து ஜனாதிபதி மன்னிப்புக் கோரியுள்ளார். அவரது ஆட்சிக் காலத்திலும் களுத்துறை, செம்மணி என்று தமிழர் படுகொலை செய்யப் பட்டனர். ஜனாதிபதி அவற்றுக் கெல்லாம் மன்னிப்புக் கோரினாரா?

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Phone 2000 - Sonia restaurant ஆதரவில் ஆர்.ரி.எம். பிறதெர்ஸ் இன்ரநெஷனல் பெருமையுடன் வழங்கும்

15 வது கலைத் தென்றல்

'கீதம் சங்கீதம்'
'நகைச்சுவை விருந்து'
'பாட்டுக்கு பாட்டு'

கலைஞானிதன் பி.எச். அப்துல் ஹமீட் வழங்கும்
'பாட்டுக்கு பாட்டு'
இலங்கை வானொலி, தொலைக்காட்சி புகழ் பயஸ் - ரட்ணம் கலந்துகொள்ளும்
சுப்பர் சண் இசையில் இலை மறை காய்களாய் இருக்கும் பாடகர்களை
வெளிக்கொண்டுவரும் இனிய நிகழ்ச்சி
பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினத்தின் பொப்பிசை

அவதாரனம்
மதி குழுவினரின்
மேலைத்தேய நடனம்

Espace Amorc
199 rue saint martin
75001 Paris
(Mo: Etienne marcel)

மேலதிக தொடர்புகளுக்கு
Phone 2000 -01 40 05 03 43
Siva: 06 20 21 11 11
Nice Telecom: 01 40 37 63 68
ஸ்ரீ பாரதி அச்சகம்: 01 42 05 46 04

08.08. 2004 ஞாயிறு
மாலை 5.00 மணி